பக்கங்கள் : 14+கல்விச்சுடர்

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 13 திங்கட்கிழமை (27.03.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :120

இராணுவ அராஜகங்களுக்கு எதிராக

## முதற்கட்டமாக பகிஷ்கரிப்புப் போராட்டம் தீர்வில்லையேல் அரச நிர்வாகம் முடக்கம்

### தமிழ் மாணவர் ஒன்றியம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச் 27

இலங்கை இராணுவம் தமிழ் மாணவர்கள் மீது மேற்கொண்டுவரும் தாக்குதல்களைக் கண்டித்து முதற்கட்டமாக இன்று குடாநாட்டில் பகிஷ்கரிப்புப் போர் நடத்தப்படுகிறது.

இராணுவம் அராஜகச் செயற்பாடுகளை நிறுத்தாவிட்டால் அரச நிர்வாகச் செயற்பாடுகளை முடக்கும் போராட்டத்தை ஆரம்பிக்க நேரிடும்.

- இவ்வாறு யாழ். மாவட்டத் தமிழ் மாணவர் ஒன்றியம் எச்சரித்துள்ளது.

இராணுவ அராஜகங்களைக் கண்டித்து குடாநாட்டு மாணவர்கள் இன்று பகிஷ்கரிப்புப் போராட்டத்தை முன்னெடுக்கின்றனர். இப்போராட்டத்துக்கு அழைப்பு விடுத்து ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். குடாநாட்டில் மாணவர்கள் மீது ஸ்ரீலங்கா இராணுவம் மேற்கொண்டுவரும் தாக்குதல்களைக் கண்டிக்கும் முகமாக இன்று பாடசாலைகள், உயர்கல்வி நிறுவனங்கள்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவிலில் நேற்றிரவு சோதனை

கொக்குவில் சந்தியில் நேற்றிரவு 9 மணியளவில் குவிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையான படையினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

வீதியால் சென்றவர்கள் உடற்சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்கள் பயணித்த வாகனங்களும் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டன. (ஒ-3)

### கல்விச்சுடரில் உள்ளே

இன்று: உயர்தர மாணவர்களின் வணிகக்கல்வி II-I வினாத்தாள், I-II விடைக்குறிப்புகள்:
நாளை: புவியியல் பகுதி I வினாத்தாள், இந்து நாகரிகம் விடைக்குறிப்புகள் வெளிவரும்.

# பாலாவுடன் சொல்ஹெய்ம் புதனன்று லண்டனில் பேச்சு

## அடுத்த சுற்று ஜெனீவாப் பேச்சுகளில் புலிகள் பங்குபற்றுவதை உறுதிப்படுத்தும் முயற்சியாக

கொழும்பு,மார்ச் 27.

**அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அடுத்த மாதம் 3ஆம் வாரத்தில் ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் அடுத்த சுற்றுப் பேச்சுகளில் விடுதலைப் புலிகள் பங்குபற்றுவதை உறுதிப்படுத்தும் முயற்சியாக, நோர்வே அனுசரணைப் பணிக்குப் பொறுப்பான அந்நாட்டு அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் நாளைமறுதினம் புதன்கிழமை லண்டனில் விடுதலைப் புலிகளின் மதியுரைஞரும் புலிகளின் பேச்சுக்குழுத் தலைவருமான அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசுகின்றார்.**

லண்டன், நியூமோர்டனில் உள்ள பாலசிங்கத்தின் இல்லத்தில் இச்சந்திப்பு இடம்பெறவிருக்கின்றது.

நோர்வே வெளிவிவகார அமைச்சின் ஓர் உயரதிகாரி சகிதம் லண்டன் வரும் சொல்ஹெய்ம், லண்டனில் அன்ரன் பாலசிங்கம் - அடேல் பாலசிங்கம் தம்பதியினரைச் சந்தித்து இலங்கை அமைதி முயற்சிகளின் தற்போதைய நிலைமை குறித்து விரிவாகப் பேசுவார் எனத் தெரிகின்றது.

கடந்த மாதம் ஜெனீவாவில் நடைபெற்ற பேச்சுகளின்போது எட்டப்பட்ட முடிவுகளை நடைமுறைப்படுத்துவதில் அரசுத் தரப்பு மெத்தனம் காட்டிவருவதால் விடுதலைப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றில் ஆஜராகுமாறு படை அதிகாரிகளுக்கு உத்தரவு

வவுனியா,மார்ச் 27

வவுனியா மாவட்டத்தில் உள்ள மூன்று இராணுவ முகாம்களின் கட்டளைத் தளபதிகளை வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் இன்று ஆஜராகுமாறு மாவட்ட நீதிவான் எம்.இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

வர்த்தகர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா சாஸ்த்திரிகூழாங்குளத்தில் படுகொலை செய்யப்பட்டார். இக்கொலைச் சம்பவத்தில் இராணுவத்தினருக்குத் தொடர்பு இருப்பதாகத் தாங்கள் சந்தேகிக்கின்றார்கள் என்று பொதுமக்கள் நீதிவானிடம் முறையிட்டிருந்தனர்.

இதையடுத்தே கல்மடு, பம்பைமடு, தாண்டிக்குளம் ஆகிய இடங்களில் உள்ள இராணுவ முகாம்களின் கட்டளைத் தளபதிகளை இன்று நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஒ-13)

## தமிழக மீனவர் மீது கடற்படை தாக்குதல்!

இராமேஸ்வரம்,மார்ச் 27

இராமேஸ்வரம் கடல் பகுதியில் வைத்து தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் நேற்று அதிகாலை கடும் தாக்குதல் நடத்தியுள்ளனர் எனத் தமிழகச் செய்திகள் தெரிவித்தன.

இலங்கைக் கடற்படையினர் நடத்திய தாக்குதல்களை அடுத்து, மீன் பிடித் தொழிலில்

(14ஆம் பக்கம் பார்க்க)

## உடன்பாட்டை முழு அளவில் நடைமுறைப்படுத்த இரு தரப்புக்கும் கண்காணிப்புக்குழு வற்புறுத்தல்

### டோறா தாக்குதலுக்குக் கண்டனம்; துணைப்படைகள் குறித்து விசனம்

கொழும்பு,மார்ச் 27

மன்னாருக்கும் - கற்பிட்டிக்கும் இடையிலான குதிரைமலை முனைப்பகுதியில் கடற்படைப் படகு மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் குறித்து கண்டனத்தை வெளியிட்டுள்ள இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு, போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் உண்மையான அமுலாக்கம் தொடர்பில் ஜெனீவாவில் காணப்பட்ட உடன்பாடுகளை இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் கூடுதல் கவனத்திற்கொள்ளவேண்டுமென வலியுறுத்தியிருக்கிறது.

குதிரைமலைக் கடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவம் குறித்து இலங்கைப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் தாக்குதல்களை ஆரம்பிக்கப்போவதாக கிழக்கில் பொங்கி எழும் மக்கள் அணி எச்சரிக்கை

### இராணுவம், ஒட்டுக்குழுக்களின் அடாவடித்தனங்கள் எல்லை மீறுவதனாலாம்

அம்பாறை, மார்ச் 27

இராணுவம் மற்றும் ஒட்டுக்குழுக்களின் அடாவடித்தனங்கள் மீண்டும் ஆரம்பிக்கின்றன எனக் குற்றஞ்சாட்டியிருக்கிறது மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட பொங்கியெழும் மக்கள் படையணி.

தமிழ் சமூகத்தின் மீதான இந்த அடாவடித்தனங்களையும், அடக்குமுறைகளையும் தொடர்ந்தும் பார்த்துக்கொண்டிராமல் மீண்டும் தனது பணியைத் தொடங்கப்போவதாக மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட பொங்கியெழும் மக்கள் படையணி வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

ஜெனீவாப் பேச்சுகளில் ஏற்றுக்கொண்டபடி ஒட்டுக்குழுவினரின் ஆயுதங்களைக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## காவலரண் மீது தாக்குதல்!

திருகோணமலை,மார்ச் 27

திருகோணமலை மாவட்டம் சேருநுவரவில் 'கரட் போயின்ட்' இராணுவக் காவலரண் மீது நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

சிறு ஆயுதங்கள் கொண்டு விடுதலைப் புலிகள் இத்தாக்குதலை நடத்தினர் என்றும் - இதில் படைத்தரப்புக்குச் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்றும் படைத் தரப்பு மேலும் தெரிவித்தது. (ஒ-3-13-151)

## 8 கடற்படையினரையும் தேடி நேற்றும் வேட்டை

கொழும்பு,மார்ச் 27

மன்னாருக்கும் - கற்பிட்டிக்குமிடையிலான குதிரைமலை கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் காணாமற்போன கடற்படைச் சிப்பாய்கள் எட்டுப்பேரையும் தேடும் பணிகள் நேற்றையதினமும் இடம்பெற்றன.

நிபுணத்துவம் மிக்க சுழியோடிகளின் உதவியுடன் தேடுதல் பணிகள் இடம்பெற்றாலும் வெறும் கழிவுகள் மட்டுமே அகப்பட்டன எனவும் உயிருடனோ அல்லது

(14ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இருநாள்கள் ஹர்த்தால் யாழ்.- கொழும்பு பயணம் ஸ்தம்பிக்கும்

வவுனியா,மார்ச் 27

வவுனியாவில் நாளையும், நாளை மறுதினமும் அனுஷ்டிக்கப்படும் ஹர்த்தாலின் போது ஏ-9 பாதையூடான போக்குவரத்து துண்டிக்கப்படும் என்று போராட்ட ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

வர்த்தகர்களை இலக்குவைத்து நடத்தப்படும் தாக்குதல்களைக் கண்டித்து இரண்டு நாள்கள் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இந்த இரு தினங்களும் வவுனியா ஊடான போக்குவரத்துகள் இடம்பெறமாட்டா.

(14ஆம் பக்கம் பார்க்க)

### கல்விச் செயற்பாடுகளுக்குக் குந்தகம் விளைவிக்கும்

# இராணுவ கெடுபிடிகளுக்குத் தீர்வு காண பகிஷ்கரிப்பில் பங்கேற்குமாறு அழைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 27

கல்விச் செயற்பாடுகளுக்கு குந்தகம் விளைவிக்கும் இராணுவக் கெடுபிடிகளுக்கு தீர்வுகாண இன்றைய பகிஷ்கரிப்புக்கு சகல கல்விச் சமூகத்தினரும் ஒத்துழைக்கவேண்டும்.

– இவ்வாறு யாழ். உயர் தொழில்நுட்ப வியல் கல்வி நிறுவக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

மேற்படி நிறுவகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை அன்னை பூபதி நினைவு நிகழ்வு இடம்பெற்றது. இதில் பங்கேற்ற மாணவர்கள் மீது படையினர் தாக்குதல் மேற்கொண்டனர். இதற்குக் கண்டனம் தெரிவித்து குடாநாட்டில் மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளை இன்று பகிஷ்கரிக்கவுள்ளனர்.

இந்தப் பகிஷ்கரிப்புப் போருக்கு ஆதரவு தெரிவித்தும் இராணுவக் கெடுபிடிகளைக் கண்டித்தும் மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையிலே மேற்படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

தியாகதீபம் அன்னை பூபதியின் நினைவு நாள் நிகழ்வில் அத்துமீறி உள்நுழைந்த இராணுவத்தினர் அச்சுறுத்தி படம்பிடித்ததுடன் தமது ஆயுதங்களாலும் குண்டாந்தடிகளாலும் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் முன்நிலையில் மாணவர்களைக் கண்மூடித்தனமாக தாக்கினார்கள். அங்கு நின்றிருந்த எமது மாணவர் ஒன்றியத் தலைவரையும் தாக்கி கீழ்தரமான வார்த்தை பிரயோகங்களையும் மேற்கொண்டனர். அத்துடன் தொடர்ந்து எம்மையும் எமது விரிவுரையாளர்களையும் வீதிக் கடமையில் ஈடுபடுகின்ற இராணுவத்தினர் அச்சுறுத்துகின்றனர்.

எமது நிறுவன சொத்துகளுக்கு - எமது பிரதான சொத்தாகிய கல்விச் செயற்பாட்டுக்கு - குந்தகம் விளைவிக்கின்ற வகையில் நடைபெறுகின்ற இராணுவக் கெடுபிடிகளுக்கு தீர்வுகாணும் பொருட்டு இன்று நடைபெறவுள்ள பகிஷ்கரிப்புக்கு சகல கல்விச் சமூகத்தினரையும் ஒத்துழைப்புத் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் இவ்வாறான இராணுவ அராஜகங்கள் தொடரும் பட்சத்தில் எதிர் விளைவுகளை சிங்கள இனவெறியர்கள் சந்திக்க நேரிடும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். - என்றுள்ளது. (ஒ)

## மோ.சைக்கிள் மோதி பாதசாரி காயம்!

ஏழாலை,மார்ச் 27

இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக உள்ள வீதியில் நேற்றிரவு 7.30 மணியளவில் நடந்துசென்று கொண்டிருந்த ஒருவர் மீது மோட்டார் சைக்கிள் மோதியது. மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் அதனை நிறுத்தாமல் தப்பிச்சென்றனர்.

இணுவிலைச் சேர்ந்த முத்துலிங்கம் ராசு (வயது-60) என்பவரே இச்சம்பவத்தில் காயமடைந்தார். இவர் மீது மோதிய மோட்டார் சைக்கிளில் மூவர் பயணித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (3-45)

## பொங்கல் விழா

கோப்பாய்,மார்ச் 27

கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பங்குனித் திங்கள் 2ஆம் வார பொங்கல் விழாவும் அபிஷேக பூசையும் இன்று திங்கட்கிழமை காலை 6 மணிக்குஆரம்பமாகி நடைபெறும். பிற்பகல் 5 மணிக்கு அம்பாள் திருவீதி உலா நடைபெறும். (3-72)

## யாழ். இரத்த வங்கிக்கு வன்னியில் இரத்ததானம்

மல்லாவி,மார்ச் 27

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு தேவையான இரத்தத்தைச் சேர்க்கும் நிகழ்வுகள் துணுக்காய் பிரதேச செயலகத்திலும் பாண்டியன்குளம் பிரதேச செயலகத்திலும் நடைபெற்றன.

துணுக்காய் பிரதேச செயலகத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்ற இரத்ததான நிகழ்வில் துணுக்காய் உதவி அரச அதிபர் நா.நந்தகுமார் மற்றும் கிராம சேவகர்கள், பிரதேச செயலக அலுவலர்கள், துணுக்காய் பகுதி ப.நோ.கூ. சங்க பணியாளர்கள், துணுக்காய் பிரதேச சபை அலுவலர்கள், தமிழீழ நிர்வாகசேவை அலுவலர்கள் மற்றும் விளையாட்டுக் கழகங்களின் உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் இரத்ததானம் செய்தனர்.

இந்த இரத்ததான நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி அலுவலர்கள் இரத்தத்தை சேகரித்தனர். (3-322)

## தும்பளையில் இன்று குடியிருப்பு கையளிப்பு

கரவெட்டி,மார்ச் 27

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தும்பளையில் அமைக்கப்பட்டுள்ள புதிய குடியிருப்பு கையளிப்பு நிகழ்வு இன்று முற்பகல் 11 மணிக்கு நடைபெறவிருக்கின்றது.

எஸ்.தேவராஜன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பிராந்திய வெளிக்களப் பணிப்பாளர் த.தமிழழகன், சேவாலங்கா நிறுவன யாழ். மாவட்ட பணிப்பாளர் வி.கேச்வன், கிளிநொச்சி மாவட்ட சேவாலங்கா நிறுவனப் பொறுப்பாளர் அ.ஆனந்தராசா,திட்டமிடல் செயலக நிர்வாக உத்தியோகத்தர் இ.சந்திரன், பருத்தித்துறை பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன், கிராம சேவையாளர் த.நந்தகுமார், வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசப் பொது முகாமையாளர் க.சூரியகுமார் ஆகியோர் பங்கு கொள்வர். (3-70)



இரத்ததான நிகழ்வின்போது..

## மென்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச் 27

யாழ் பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான மென்பந்து துடுப்பாட்டப் போட்டி இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது.

இப்போட்டிகள் ஈச்சமோட்டை வி.க., கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம் ஆகிய மைதானங்களில் இடம்பெறவுள்ளன.

* ஈச்சமோட்டை வி.க.மைதானம் பிற்பகல் 4 மணி - கலைவாணி வி.க. எதிர் கிறீன் கிங்ஸ் வி.க.
* கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய மைதானம் பிற்பகல் 4 மணி - பட்டபிளை வி.க. எதிர் ஜெற்லைனேர்ஸ் வி.க.

(3-190)

## இலங்கை - பாக். ஆட்டம் மழையினால் பாதிப்பு

கொழும்பு,மார்ச்27

பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்ட் ஆட்டம் மழையினால் பாதிக்கப்பட்டுள்ளது. நேற்று எஸ்.எஸ்.ஸி. மைதானத்தில் ஆரம்பமாக இருந்த ஆட்டம் தொடர்ந்து பெய்த கடும் மழையை அடுத்து இடைநிறுத்தப்பட்டது.

இலங்கை அணி ஒருநாள் தொடரை ஏற்கனவே 0-2 என்ற நிலையில் இழந்துவிட்ட நிலையில், டெஸ்ட் தொடரை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தது. மழை அனைத்து எதிர்பார்ப்புக்களையும் கலைத்துவிட்டது. பருவம் தவறிப் பெய்யும் இந்த மழை எதிர்பார்க்கப்படாத ஒன்று என்று அதிகாரிகள் தெரிவித்தனர். பாகிஸ்தான் அணி இதுவரை இலங்கையில் எந்த டெஸ்ட் தொடரையும் இழந்ததில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-3)

# பயிற்சி ஒருநாள் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி தோல்வி!

ராஜஸ்தான், மார்ச் 27

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி, டெஸ்ட் தொடரைச் சமன் செய்த நிலையில் ஒருநாள் தொடருக்குத் தயாராகி வருகிறது. ஏழு ஆட்டங்களைக் கொண்ட ஒரு நாள் தொடர் நாளை ஆரம்பமாகவுள்ளது. இதற்கான பயிற்சியாட்டத்தில் இங்கிலாந்து அணி தோல்வியடைந்தது.

நேற்றுமுன்தினம் ராஜஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையே ராஜஸ்தானில் இந்த ஆட்டம் இடம்பெற்றது. ராஜஸ்தான் அணி 5 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணித்தலைவர் விக்ரம் சோலங்கி முதலில் களத்தடுப் பில் ஈடுபடத் தீர்மானித்தார். இதன்படி களமிறங்கிய ராஜஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ஜெய்தேவ் ஷா (10) மற்றும் கௌதம் காம்பீர் (5) ஆகியோர் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்ட மிழந்தனர். ஆனால் அதன் பிறகு ஜோடி சேர்ந்த சுரேஸ் ரெய்னா மற்றும் மொகமட் கைவ் ஆகியோர் சிறப்பாகத் துடுப்பெடுத் தாடினர்.

சுரேஸ் ரெய்னா 46 பந்துகளில் 10 பவுண்டரிகள் அடங்கலாக 49 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை கொலிங்வூட்டின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். இவர் கைவ்வுடன் ஜோடி சேர்ந்து இணைப்பாட்டமாக 72 ஓட்டங்களைப் பெற்றார். அணித் தலைவர் அஜய் ஜடேஜா 18 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் பார்த்திவ் பட்டேல் 25 ஓட்டங்களைப் பெற்றார். இறுதியில் ராஜஸ்தான் அணி 6 விக்கெட் டுக்களை இழந்து 260 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பாக மொகமட் கைவ் ஆட்டமிழக்காமல் 136 பந்துகளில் இரண்டு சிக்ஸர்கள் 11 பவுண்டரிகள் அடங்கலாக 119 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தார்.

வெற்றியிலக்கைத் துரத்த ஆரம்பித்த இங்கிலாந்து அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக

(13ஆம் பக்கம் பார்க்க)

## வர்ண விளம்பர பக்கங்கள்

வழமையாக ஞாயிறு உதயனுடன் வெளியாகும் விளம்பரங்கள் அடங்கிய வர்ணப் பக்கங்கள் தவிர்க்கமுடியாத காரணத்தால் நேற்று வெளியாகவில்லை. அவை இன்றைய உதயனுடன் சேர்க்கப்பட்டுள்ளன.




# நியூஸிலாந்திற்கு எதிரான 3ஆவது டெஸ்ட் மேற்கிந்தியத் தீவுகள் ஓட்டங்கள் குவிப்பு

நேப்பியர்,மார்ச்27

நியூஸிலாந்திற்கு எதிரான மூன்றாவது டெஸ்டில் மேற்கிந்தியத்தீவுகள் அணி இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 4 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 256 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

நியூஸிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வரும் மேற்கிந்தியத்தீவுகள் அணி மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. இதில் ஒக்லண்ட்டில் நடைபெற்ற முதலாவது டெஸ்டில் 27 ஓட்டங்களினாலும் வெலிங்டனில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்டில் 10 விக்கெட்டுக்களினாலும் மேற்கிந்தியத்தீவுகள் தோல்வியைத் தழுவி ஏற்கனவே தொடரை இழந்துவிட்டது. மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் நேப்பியரில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

நேப்பியரில் பெய்து வரும் மழையினால் முதல் நாள் ஆட்டத்தில் 27 ஓவர்கள் மட்டுமே வீசப்பட்டது. முதலில் துடுப்பெடுத்தாடும் மேற்கிந்தியத்தீவுகள் முதல் நாள் ஆட்டநேரமுடிவில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 93 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்று இரண்டாம் நாள் ஆட்டத்தை லாராவும் டரன்கங்காவும் தொடர்ந்தனர். இருவரும் இணைந்து 74 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை டரன்கங்கா(38) பொண்டினால் போல்ட் செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டார். தொடர்ந்து ஆடுகளம் புகுந்த மோட்ரன், லாராவுடன் இணைந்து ஓட்டஎண்ணிக்கையை உயர்த்தினார்.

மூன்றாவது விக்கெட்டுக்காக அபாரமாக ஆடிக்கொண்டிருந்த லாரா 83 ஓட்டங்களுடன் நதன் அஸ்ரிலினால் 'போல்ட்' செய்யப்பட்டார். அவரைத் தொடந்து வந்த அணித் தலைவர் சந்தர்போல் இரண்டு ஓட்டங்களுடன் 'ரன் அவுட்' முறையில் வெளியேற்றப்பட்டார்.

நேற்றைய ஆட்டநேர முடிவில் மோட்ரன் 70 ஓட்டங்களுடனும் பிராவோ 22 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

போதிய வெளிச்சமின்மை மற்றும் மழை காரணமாக நேற்றைய ஆட்டமும் பாதிக்கப்பட்டது. 51 ஓவர்கள் மட்டுமே பந்துவீசப்பட்டது. (க-3)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# இரட்டை வேட அணுகுமுறை அமைதித் தீர்வுக்கு வழியல்ல

**"நான்கு ஆண்டுகளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த அமைதிச் சூழலின் பயன்கள் எவையும் கிடைக்காமல் மீண்டும் தமிழ் மக்களை போர் நெருக்கடிக்குள் தள்ளிவிடும் நிலைமை உருவாகியிருக்கின்றது."**

**- இவ்வாறு விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்திருக்கின்றார்.**

ஒருபுறம் சமாதானப் பேச்சுகள் - அமைதி முயற்சிகள் - என்ற போக்குத் தென்பட்டாலும் மறுபுறம் அந்த அமைதி முயற்சிகளுக்கு ஆப்பு வைத்து, இலங்கைத் தீவைக் கொடூரப் போருக்குள் தள்ளிவிடும் கைங்கரியமும் நடந்து கொண்டுதான் இருக்கின்றது. அதைத்தான் புலிகளின் மூத்த உறுப்பினர் சுட்டிக்காட்டுகின்றார்.

அமைதி முயற்சிகளுக்கு வாய்ப்பளித்து, யுத்த நிறுத்தம் பேணி, சமாதானப் பேச்சுகளுக்கு வந்திருக்கும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக சர்வதேச ரீதியில் வசைபாடும் திருக்கூத்தும் பெரிய எடுப்பில் - திட்டமிட்ட வகையில் - அரங்கேறிக் கொண்டுதான் இருக்கின்றது. இப்போக்குப்புலிகளை வீணாகச் சீண்டி, ஆத்திரத்தை ஊட்டி, அவர்களைச் சண்டைக்கு இழுக்கும் தந்திரோபாயமின்றி வேறில்லை.

இலங்கைத் தீவில் தங்கியிராமல் உலகம் முழுவதும் சுற்றிப் பறந்து வரும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, சர்வதேச ரீதியில் புலிகளுக்கு எதிரான பிரசாரப் பணியைப் பொறுப்பேற்று, முழுவீச்சில் அவ்விடயத்தில் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றார்.

தமக்கு முன்னர் இப்பணியை - வெளிவிவகார அமைச்சுப் பொறுப்பை - ஆற்றிய லக்ஷ்மன் கதிர்காமர் போன்றே இவரும் ஒவ்வொரு நாடு நாடாக - அவற்றின் தலைநகரங்கள் தோறும் - பிரசன்னமாகி, புலிகள் எதிர்ப்புப் பிரசாரத்தை முன்னெடுத்து வருகின்றார். அதுவும் வழமையான தந்திரோபாயங்களைப் பின்பற்றி.

இலங்கை அரசாங்கம் மீது அழுத்தம் தருவதை விடுத்து 'பயங்கரவாதிகளான" புலிகளை ஒடுக்குவதில் மூச்சாக ஈடுபடுங்கள் என சர்வதேசத்தைக் கெஞ்சி வருகின்றார் அவர்.

சில தினங்களுக்கு முன்னர் ஐரோப்பிய ஒன்றியம் அமைந்துள்ள பிரஸல்ஸ் நகரில் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார கமிட்டிக்கு முன்னால் அமைச்சர் மங்கள சமரவீர உரையாற்றினார். புலிகள் 'பயங்கரவாதிகள்' என்றும், 'ஜனநாயக விரோதிகள்' என்றும், 'கொலைகாரர்கள்' என்றும் அங்கு வாங்குவாங்கென்று திட்டித் தீர்த்திருக்கின்றார் அவர்.

அதேநேரம் இலங்கை இராணுவத் தளபதியும் எல்லை மீறி, அரசியலுக்குள் தலையிட்டு, புலிகளுக்கு எதிராக 'அபஸ்வரம்' பாடி வருகின்றார்.

நீண்ட தேக்கத்தின் பின்னர் கடந்த மாதம் ஜெனிவாவில் அரசு - புலிகள் பேச்சு நடைபெற்றது. அந்தப் பேச்சில் எட்டப்பட்ட முடிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை.

அதனை நிறைவேற்றத் தவறியமையால் தமிழர் தாயகத்தில் பதற்றம் பரவி வருகின்றது.

எட்டப்பட்ட முடிவை நடைமுறைப்படுத்தாமல் அரசுத் தரப்பு இழுத்தடித்துவர, மறுபக்கத்தில் சர்வதேச ரீதியில் புலிகளின் பெயரைக் கெடுத்து, குட்டிச்சுவராக்கி, புலிகளின் செல்வாக்கை இழக்க வைக்கும் எத்தனங்களும் அரசுத் தரப்பினால் படுமும்முரமாக முன்னெடுக்கப்படுகின்றன.

இவை, பேச்சு முயற்சிகளின் மீதும், பேச்சு மூலமான தீர்வில் இலங்கை அரசுக்குள்ள பற்றுறுதி குறித்தும், புலிகளுக்கு அளவிலா சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.

அமைதி வழித் தீர்வுக்கு எதிராகக் கடுமையான பௌத்த - சிங்கள மேலாண்மை வாதப் போக்கை ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி. போன்றன கடைப்பிடித்து வருகின்றன. அவற்றுடனான கூட்டை - நட்புறவை - கூட ஜனாதிபதி மஹிந்தர் இன்னும் துறக்கவில்லை.

அரசுக் கூட்டுக்குள் - கூட்டமைப்புக்குள் - இந்தக் கட்சிகள் நேரடியாகப் பங்களிக்கா விட்டாலும் இலங்கைத் தீவின் இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் எத்தனத்தில் இந்த மேலாண்மை வாத சக்திகளின் செல்வாக்கு குறைத்து மதிப்பிடத்தக்கதல்ல.

இத்தகைய பேரினவாதக் கட்சிகளின் குழப்பகரமான அடக்குமுறைச் சிந்தனைப் போக்குக்குள் சிக்கி நின்று கொண்டு - சர்வதேச ரீதியில் தமிழர்களின் ஏக, அதிகாரபூர்வ பிரதிநிதிகளான புலிகளை தனது வெளிவிவகார அமைச்சர் மூலம் திட்டித் தீர்த்து அவர்களுக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்தி, அழிவுப் பிரசாரம் செய்து கொண்டு - யுத்த வெறியும் தீவிரமும் கொண்ட அதிகாரியை இராணுவத் தளபதியாக வைத்து இராணுவ ரீதியான அச்சுறுத்தல்கள், நெருக்குவாரங்களைப் புலிகளுக்குக் கொடுத்துக் கொண்டு - அமைதி முயற்சிகளை முன்னெடுப்பது போல இலங்கை அரசு சர்வதேச சமூகத்துக்குப் 'படம்' காட்டுகின்றது

அமைதி முயற்சிகள் ஆக்கபூர்வமான திசையில் நகர்வதற்கு அரசுத் தரப்பின் இந்த இரட்டை வேட அணுகுமுறை உதவப் போவதில்லை.

நான்கு வருட அமைதி முயற்சிகளை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் எத்தனங்களாகவே இவை கொள்ளப்படத்தக்கவை.

# புங்குடுதீவுக்கு மின்சாரம் வழங்கும் பணிகள் பூர்த்தி: இணைப்புப்பெறுவதற்கு மக்கள் ஆர்வம் காட்டவில்லை

## வேலணை மின் அத்தியட்சகர் கவலை

வேலணை, மார்ச்27

புங்குடுதீவில் பிரதான் வீதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ள நிலையிலும் மக்கள் மின் இணைப்பைப் பெறுவதில் பெரிதும் ஆர்வம் காட்டவில்லை என்று வேலணை பிரதேச மின் அத்தியட்சகர் ஜே.செபஸ்ரியாம்பிள்ளை கவலை தெரிவித்தார்.

இது விடயமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஊர்காவற்றுறை, வேலணை பிரதேசங்களுக்கு தற்போது 24 மணி நேர மின்சாரம் வழங்கப்படுகிறது.இதனையடுத்து இதுவரை காலமும் மேற்படி பிரதேசங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட மின்பிறப்பாக்கிகள் தற்போது புங்குடுதீவுக்கு எடுத்துச்செல்லப்பட்டு பொருத்தப்பட்டுள்ளன.

அத்துடன், புங்குடுதீவின் பிரதான வீதிகளில் மின் கம்பங்கள் நடுகை செய்யப்பட்டு மின் இணைப்பு வேலைகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

மின் இணைப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதை அடுத்து குடியிருப்பாளர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே மின்சார இணைப்புப் பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்களை வழங்கியிருந்தோம். ஆனால், இதுவரை பூர்த்திசெய்யப்பட்ட எந்தவொரு விண்ணப்பமும் எமது அலுவலகத்துக்குக் கிடைக்கவில்லை. இது பிரதேச மக்கள் மின்சாரம் பெறுவதில் அக்கறையற்றவர்களாக உள்ளனர் என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

எனவே, வேலணைப் பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச கிராம அலுவலர்கள் மின்சாரம் பெறுவது தொடர்பான ஊக்கத்தைப் பொதுமக்களுக்கு வழங்க வேண்டும்.

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் புங்குடுதீவுக்கு மின்சாரம் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளோம் என்று பிரதேச மின் அத்தியட்சகர் மேலும் கூறினார். (எ-167)

# கிராமிய மேம்பாட்டு அமைப்புகளின் இணையத்துக்கு ஊர்காவற்றுறையில் தனியான கட்டடம் அமையும்

ஊர்காவற்றுறை,மார்ச்27

ஊர்காவற்றுறையில் உள்ள கிராமிய மேம்பாட்டு அமைப்புகளின் இணையத்திற்கான புதிய கட்டடம் ஒன்று விரைவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரி வீதியில் சிறுவர் பூங்காவிற்கு சமீபமாக இந்தக் கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கான அடிக்கல் நடும் வைபவம் அண்மையில் இடம்பெற்றது. தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன், போரூட் நிறுவனத்தின் ஆற்றுப்படுத்தல் உத்தியோகத்தர் க.குணேந்திரதாசன், போரூட் நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் என்.கோகுலதாஸ் ஆகியோர் கட்டடத்திற்கான அடிக்கல்லை நட்டு வைத்தனர்.

இந்தக் கட்டடம் சுமார் முப்பது லட்சம் ரூபா செலவில் போரூட் நிறுவனத்தின் அனுசரணையுடன் நிறைவேற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(எ-16)

# வண்ணை காமாட்சி அம்மன் ஆலயத்தில் 'விஸ்வப்பிரம்மா' விக்கிரகம் பிரதிஷ்டை

யாழ்ப்பாணம், மார்ச்27



யாழ்வண்ணை - குளங்கரை மருதடி ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தில் (நாச்சிமார் கோயில்) எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை விஸ்வப் பிரம்மாவின் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது.

உலகிலேயே முதன்முறையாக தாமிர விக்கிரகமாக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.இதனை தமிழகத்தைச் சேர்ந்த ஸ்தபதி விஸ்வப்பிரம்ம ஸ்ரீ தேவ சேனாதிபதி வடிவமைத்துள்ளார்.

வண்ணை நாச்சிமார் கோயிலில் பிரதிஷ்டை செய்வதற்கென தமிழகத்திலிருந்து எடுத்துவரப்பட்டுள்ள விஸ்வப்பிரம்மா விக்கிரகமும் மாரியம்மன் விக்கிரகமும் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். கஸ்தூரியார் வீதியில் உள்ள பாஸ்கரன் ஆச்சாரியின் சிற்பக் கலைக் கூடத்திலிருந்து ஆலயத்துக்கு ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்படும். கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி வீதி வழியாக வண்ணை சிவன் ஆலயத்தை வந்தடையும் இந்த ஊர்வலம் பின்னர் கே.கே.எஸ். வீதியூடாக நாச்சிமார் கோயிலில் நிறைவடையும்.

ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தின் (நாச்சிமார் கோயில்) ஜீர்ணோத்தாரண நவகுண்ட பக்ஷ சுவர்ணபந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் அடுத்த மாதம் 3 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.15 மணிக்கு நடைபெறும். (எ)

# ஆத்திசூடி விநாயகர் ஆலயத்தில் இன்று ஔவையார் தின விழா

யாழ்ப்பாணம்,மார்ச்27

யாழ்.கந்தர்மடம் ஆத்திசூடி வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை ஔவையார் தின விழா நடைபெறவுள்ளது.

இன்று முற்பகல் 10 மணிக்கு ஸ்நபன அபிஷேகம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து விசேட பூசை, அன்னதானம் என்பன இடம் பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (எ)

# நிலாவரையிலிருந்து அச்சுவேலிக்கு குடிதண்ணீர் குழாய்கள் பொருத்தும் பணிகள் ஆரம்பமாகின்றன

அச்சுவேலி, மார்ச்27

புத்தூர் - நிலாவரையிலிருந்து அச்சுவேலிக்கு குடிதண்ணீர் விநியோகிப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்டமாக, குடிதண்ணீர் விநியோகத்துக்கான குழாய்களைப் பொருத்தும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் இது தொடர்பான பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

'மஹிந்த சிந்தனை' திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட 20 லட்சம் ரூபா நிதியினைப் பயன்படுத்தி புத்தூர் நிலாவரையில் விரைவில் குழாய்க் கிணறு ஒன்று தோண்டப்படவுள்ளது. இந்தக் குழாய்க்கிணற்றில் இருந்து அச்சுவேலியில் உள்ள 30 குடிதண்ணீர் தொட்டிகளுக்கும் குடிதண்ணீர் வழங்கப்படும் எனக் கூறப்பட்டது.

நிலத்தடி நீர் உவர்த்தன்மை வாய்ந்ததாகவுள்ள அச்சுவேலி வடக்கு, வல்லை வீதி, அச்சுவேலி தெற்கில் சில இடங்களில் இந்த தண்ணீர்த்தொட்டிகள் நிறுவப்பட்டுள்ளமை தெரிந்ததே. (எ-11)

## நாளை

பங்குனி 14
செவ்வாய்க்கிழமை
28.03.2006
திதி : சதுர்த்தசி
முன்னிரவு: 06.50
நட்சத்திரம் : பூரட்டாதி
முன்னிரவு : 09.20
சுபநேரம் : 10.44 - 12.14
ராகுகாலம் :03.14 - 04.44
(யாவும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

**உழைப்புத்தான் ஒரு மனிதனை மற்றொரு மனிதனைவிட உயர்ச்சி அடையச் செய்கின்றது.**

*- ஓர் அறிஞர்.*



# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

றொயட்டா ஹயஸ் 54-xxxx தொடர் இலக்கமுடைய டாக்டரின் பாவனையில் நல்ல நிலையில் உள்ள வான் திருகோணமலையில் உடன் விற்பனைக்குண்டு. (4 Door, A/C, P/S) தொடர்பு: T.P.:0777-173073, 026 2221341. (சி-48541)

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் இலங்கை வங்கிக்கும் ஹற்றன் நஷனல் வங்கிக்கும் இடையில் ஒரு பரப்பும் ஒரு குளியும் உடைய கடைத்தொகுதி விற்பனைக்குண்டு. வங்கிக்கும் நிறுவனங்களுக்கும் உகந்தது. வாகன தரிப்பிடமும் சகல வசதிகளும் உடையது. தொடர்பு: விளம்பர இல. 2840, மே/பா, உதயன் பணிமனை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (48567)

## தவறிவிட்டது

24.03.2006 வெள்ளிக்கிழமை பி.ப.1.30 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி கோயில் சுற்றாடலில் பொதி ஒன்று வங்கிப்புத்தகங்கள் (ஒரு தொகைப் பணத்துடன்), காப்புறுதிப் பத்திரங்கள், வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரம், மூக்குக் கண்ணாடி என்பனவற்றுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். T.P.NO: 060-2213443, 0779007579 (சன்மானம் வழங்கப்படும்). (48589)

வேலுப்பிள்ளை விசுவநாதர் என்பவரது சாரதி அனுமதிப்பத்திரம், வரிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் என்பன 22.03.2006 அன்று திருநெல்வேலிச் சந்திக்கும் கைதடிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கனகா றேடேர்ஸ், திருநெல்வேலிச் சந்தி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (சி-48547)

## வாடகைக்கு

நல்லூர் ஆனைப்பந்தியில் சகல வசதிகளும்கொண்ட A/c, non A/c அறைகள் நாள், கிழமை, மாத வாடகைக்கு உண்டு.தொலைபேசி இல. 0779024387. (48428)

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியில் இரண்டு அறைகள் கொண்ட வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: 0776567487. (48591)

## குத்தகைக்கு

சங்கானை சந்தைக்கு அருகில் சகல வசதிகளுடன் மில் குத்தகைக்கு உண்டு. தொடர்பு: கி.சிவலிங்கம், சந்தை வீதி, சங்கானை. T.P.: 0776080610. (48592)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், வயது 31, கார்த்திகை நட்சத்திரம் 4 ஆம் பாதம், செவ்வாய்க் குற்றம் இல்லாத கிரகபாவம் 11½, உயரம் 5' 5'' உடைய டாக்டர் (M.B.B.S) மணமகனுக்கு டாக்டர் or விரிவுரையாளர் or உயர் பதவி வகிக்கும் மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2839, மே/பா.உதயன் , யாழ்ப்பாணம். (48552)

## கெட்டிக்காரர்கள் - இமயம்

பேராதனைப் பல்கலைக்கழக நாடகப் பணியில் தொடர்ச்சியாக கலாபூசணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதிய 21 நவீன நாடகங்களைக் கொண்ட இரு நூல்கள். மாணவர்கள் படிப்பதற்கும் நடிப்பதற்கும் பொருத்தமான நாடகங்கள். (48550)

## யாழ்.பிரத்தியேக கல்விச்சேவை

தரம் 5 புலமைப்பரிசில் உட்பட தரம் 6 முதல் 11 வரையிலான சகல மாணவர்களுக்கும் அனைத்துப் பாடங்களும் வீட்டிற்கு வந்து தனியாகவோ, குழுவாகவோ சிறப்பான முறையில் கற்பித்துக் கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு:

(48538)(26-39-11-45) **0779785716.**

## பனிப்புலத்தில் 10 பேருக்கு கடனுதவி கிடைத்தது

காரைநகர்,மார்ச் 27

காரைநகர் இலங்கை வங்கிக் கிளையினால் மிக வறிய குடும்பங்களுக்கு கடன் வழங்கும் மிகச் சிறிய (சூக்ஸ்ம) கடன் திட்டத்தின் கீழ் பனிப்புலம் கிராம சேவையாளர் பிரிவில் உள்ள பத்துக் குடும்பங்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை வங்கியின் காரைநகர் கிளை முகாமையாளர் தா.குகநேசன் தெரிவித்தார்.

அண்மையில் காலையடி மறுமலர்ச்சி மன்ற மண்டபத்தில் வைத்து தெரிவு செய்யப்பட்ட 10 பயனாளிகளுக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் கடன் வழங்கப்பட்டதாகவும்-

பயனாளிகளின் சொந்தக் கிராமத்துக்கு- அவர்களது வீட்டு வாசற்படிக்குச் சென்று- கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஏ-73)

## பன்றிகளால் பயிர் அழிவு

தென்மராட்சிப் பிரதேசத்தில் அண்மைக் காலமாக பன்றிகளின் தொல்லை அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இரவு வேளைகளில் குடியிருப்புக்கள் மற்றும் விவசாய நிலங்களுக்கு கூட்டம் கூட்டமாக வரும் பன்றிகள் பெரும் அழிவுகளை ஏற்படுத்திச் செல்கின்றன.

தென்னை நாற்று மேடைகள், பனம் பாத்திகள் போன்றவற்றையும் விவசாய நிலங்களில் உள்ள கிழங்கு வகைகள் மற்றும் பயிர்களையும் சேதமாக்கி அழித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## சாவகச்சேரி நவீனசந்தை முன்பாக சைக்கிள்விடத் தடை

தென்மராட்சி,மார்ச் 27

சாவகச்சேரி நவீன சந்தைக்கு முன்பாக வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள், மிதிவண்டிகள் நிறுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது என்று நகரசபை செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் அறிவித்துள்ளார்.

ஏ-9 வீதியில் பெருமளவு வாகனங்கள் போக்குவரத்துச் செய்வதால் நவீன சந்தை முன்பாக நிறுத்தப்படும் வாகனங்களால் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

மோட்டார் சைக்கிள்கள், மிதிவண்டிகள் ஆகியவற்றுக்கான பாதுகாப்பு நிலையங்கள் நகர சபையினால் அமைக்கப்பட்டுள்ளன. அந்த இடங்களில் இரு சக்கர வாகனங்களை நிறுத்துமாறும் பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதனை மீறுவோரின் இரு சக்கர வாகனங்கள் பொலீஸாரின் உதவியுடன் நகர சபைக்கு கொண்டு செல்லப்பட்டு வாகன உரிமையாளரிடம் தண்டம் அறவிடப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

## நூலகத்தினுள் தொலைபேசி பயன்படுத்தத் தடை

சாவகச்சேரி நகர சபை பொது நூலகத்தினுள் கையடக்கத் தொலைபேசி பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது என்று நகர சபை செயலாளர் திருமதி குணமணி தேவி ஆறுமுகம் அறிவித்துள்ளார்.

பொது நூலக வாசகர்கள் முறைப்பாடு தெரிவித்ததையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ-117)


கல்வியாண்டு 2006 இற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

Master of Business Administration (MBA)



Available - Accessible - Affordable personalized education

Sikkim Manipal University

The Sikkim Manipal University of Health, Medical and Technological Science was established by an Act of the Sikkim State Legislature in 1995. The University as the approval of University of University of Grants Commission, All India Council for Technical Education, Medical Council of India, Distance Education Council and Nursing Council of India.

Manipal is the nucleus of 53 educational institutions which have an enrollment of 30,000 students. There are 2 Universities, 27 professional colleges. The student body represents 32 countries and the degrees are recognized in over 40 countries.

M B A

Now for the first time you have the opportunity of obtain a prestigious MBA at the only "Authorized" International Study Centre of Sikkim Manipal University in Sri Lanka. The course aims to train graduates in Infrastructure Management Skills required at the higher levels of management. Students will be exposed to the concept of management and the latest Technologies and Strategies required by the relevant industries.

Eligibility: Degree or equivalent profe-ssional qualification

added advantages

Duration 2 years (Part time)

FIRST SEMESTER
Management process and organization behavior
Internet Application
Marketing Management
Human Resource Management
Operation Management
Financial Management
Management Information System

SECOND SEMESTER
Strategic Technology Management
Management of Technology transfer, -absorption & IPR
Business Process, Re-Engineering
Enterprise Resource Planning
E-customer Relationship Management & -Supply Chain Management
Conflict Management & Negotiation Skills
History of Management, Case studies

[illegible] SEMESTER
Infrastructure Management
Fundamentals of Infrastructure Project Finance
Infrastructure Development & Policy Planning
Project Management
Decision Support System

FOURTH SEMESTER
Electives *
Project

* HRD + MKT / Finance + MKT / System + MKT

IIS CITY CAMPUS
# 181, Navalar Road, Jaffna.
T.P. No. : 021 222 8060 / 021 222 2201



புரட்ஸ்டேட் -PROSTATE- பிரச்சினைகளா?

அறுவை சிகிச்சை பக்க விளைவுகள் ஏற்படுத்தும். எமது ஆயுர்வேத மருந்து குணப்படுத்தும். சுகம் தரும்.

இலவச ஆலோசனை :
திங்கள் - வெள்ளி காலை 9.00 - மாலை 5.00
சனிக்கிழமை காலை 9.00 - பி.ப. 2.00

FAIR PHARMA (PVT) LTD
(Manufacturers of Ayurvedic Medicines)
L5/ET/1C, World Trade Centre, Colombo 01.
Tel : 0094-11-5517897, 5551879, 5558442 Fax : 0094-11-5517756
Website : www.fppvtl.org E-mail : fppvtl@lankabellnet.com
Available On Line
A BOI Approved & ISO 9001:2000 QMS Certified Company


### வட பிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவைச் சங்கம் (தலைமையகம்)

41, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்

**புதிய நிர்வாக சபை உறுப்பினர் பட்டியல்**

19.03.2006 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வருடாந்த பொதுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவர்கள்

| | | |
|---|---|---|
| 01) திரு.மு.தர்மகுலராசா | - தலைவர் | A-6 |
| 02) திரு.செ.யோகநாதன் | - உப தலைவர் | V-5 |
| 03) திரு.சு.தனராஜ் | - செயலாளர் | V-5 |
| 04) திரு.ந.குகானந்தராசா | - உப செயலாளர் | V-5 |
| 05) திரு.பொ.செல்வநாயகம் | - பொருளாளர் | H-1 |
| 06) திரு.இ.புவியழகன் | - நிர்.உறுப்பினர் | V-5 |
| 07) திரு.வை.ரவிச்சந்திரன் | - நிர்.உறுப்பினர் | H-1 |
| 08) திரு.இ.துரைராசசிங்கம் | - நிர்.உறுப்பினர் | C-2 |
| 09) திரு.பூ.இராஜேஸ்குமார் | - நிர்.உறுப்பினர் | C-J-34 |
| 10) திரு.மா.சிவசுப்பிரமணியம் | - போசகர் | |

ஒட்டோ உரிமையாளர்- சாரதிகள் சங்கத்தின் விதிமுறைகளைக் கடைப்பிடித்து பயணிகள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் சேவையிலீடுபடுமாறு அறியத்தருகின்றோம்.

(48580) (39-65-11) - நிர்வாகம்.

## எழுத்துத் தேர்வு

தமிழீழ வைப்பகத்திற்கு உதவி உத்தியோக உதவியாளர் பணிநிலையில் ஆட்சேர்ப்பதற்கான எழுத்துத்தேர்வு எதிர்வரும் 01.04.2006 சனிக்கிழமை காலை 9 மணி முதல் 11 மணி வரை கிளி/ கிளி நொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறும். உரிய பரீட்சார்த்திகளிற்கு அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் அருகிலுள்ள தமிழீழ வைப்பகக் கிளைகளில் தங்களது பெயர் விவரங்களைப் பார்வையிடலாம்.

மனிதவள மேலாளர்,
மனிதவளப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(கி.48596) (39-11-95)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம் உத்தியோகபூர்வ முடிவுகள்

766 சிவப்பு

இடபம்



24-03-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 5087268-5101729

வெற்றி இலக்கங்கள் **08 17 46 51**

**ஜக்பொட் பரிசு ரூபா 10,00,000/-வெல்லப்பட்டுள்ளது**

மொத்தப் பரிசுத் தொகை ரூபா 80,75,410/-
தொடர் இல. 4174713 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கெட்டுக்கள் 2006 மார்ச் 28 ஆம் திகதி செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 3,20,152 | 10/- | 32,01,520/- |
| 2 இலக்கங்கள் | 29,354 | 20/- | 5,87,080/- |
| 1 இல+லக்கினம் | 29,152 | 30/- | 8,74,560/- |
| 2 இல+லக்கினம் | 2,720 | 100/- | 2,72,000/- |
| 3 இலக்கங்கள் | 776 | 500/- | 3,88,000/- |
| 3 இல+லக்கினம் | 80 | 5,000/- | 4,00,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 1,00,000/- | 3,00,000/- |
| 4 இல+லக்கினம் | 1 | 10,00,000/- | 10,00,000/- |
| மொத்தம் | | | 70,23,160/- |
| முச்சக்கர வண்டிகள் | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,82,243 | | 80,75,410/- |

**இந்த செவ்வாய்க்கிழமை ரூபா 10,00,000/-**

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 05 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கொழும்பு | 5094664-5-06 |
| நுவரெலியா | 5088300-5-50 |
| மாத்தளை | 5095175-1-10 |
| குருநாகல் | 5101587-7-29 |
| மட்டக்களப்பு | 5093135-6-08 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, [illegible] வீதி
கொள்ளுப்பிட்டி, கொழும்பு-03

# நிரந்தர மருத்துவர்கள் எவருமின்றி அக்கராயன் சுற்றயல்கூறு ஆஸ்பத்திரி

கிளிநொச்சி, மார்ச்27

கிளிநொச்சி அக்கராயன் சுற்றயல் கூறு மருத்துவமனையில் நிரந்தர மருத்தீவர்கள் பணியில் இல்லாது இயங்கிவருகின்றது.

இம் மருத்துவமனையில் குறைந்தது இரு மருத்துவர்கள் பணிபுரிய வேண்டும். ஆனால், தற்போது மீள் நியமனம் பெற்ற மருத்துவர் ஒருவரே பணியில் உள்ளார்.

இதன் காரணமாக வெளிநோயாளர்கள் பிரிவில் சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் நீண்டநேரம் காத்திருந்தே சிகிச்சை பெறவேண்டியுள்ளது.

1996ஆம் ஆண்டு கிளிநொச்சியை 'சத்ஜெய' படை நடவடிக்கைமூலம் ஸ்ரீலங் காப் படையினர் ஆக்கிரமித்தனர்.

இதன் காரணமாக இடம்பெயர்ந்த கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை அக்கராயன் சுற்றயல்கூறு மருத்துவமனையில் இயங்கி வந்தது.

அக்கராயன் சுற்றயல்கூறு மருத்துவமனையினை மாவட்ட மருத்துவமனையாக தரமுயர்த்தி தொடர்ந்து இயங்க வைப்பதென முடிவு எடுக்கப்பட்டு கட்டட வசதிகள் உருவாக்கப்பட்டன.

இந்த நிலையில், 1998ஆம் ஆண்டு 'ஓயாத அலைகள் - 2' நடவடிக்கை மூலம் புலிகளால் கிளிநொச்சி நகரம் ஸ்ரீலங்காப் படைகளின் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி நகரில் பெருமளவு மக்கள் மீளக்குடியமர்ந்து வரும் சூழ்நிலையில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை 2002ஆம் ஆண்டு மீண்டும் கிளிநொச்சியில் இயங்கத் தொடங்கியது.

அக்கராயன் சுற்றயல்கூறு மருத்துவமனையில் 1985ஆம் ஆண்டு தொடக்கம் நிரந்தர மருத்துவர்களாக பணியாற்றிய இருவர் யாழ்ப்பாணத்திற்கு 2003ஆம் ஆண்டு மாற்றம் பெற்றுச்செல்ல இன்றுவரை அக்கராயன் மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவர்கள் பணிக்கு நியமிக்கப்படவில்லை.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு பணிக்கு வரும் மருத்துவர்கள்கூட அக்கராயன் மருத்துவமனையில் நிலவும் தொலைபேசி, போக்குவரத்து வசதியீனங்களைக் காரணம் காட்டி அங்கு பணியாற்றுவதற்கு பின்னடிக்கின்றனர்.

அக்கராயன் மருத்துவமனையினை நம்பி வன்னேரிக்குளம், பூநகரி, அம்பலப்பெருமாள்குளம், ஸ்கந்தபுரம், கோணாவில், ஆனைவிழுந்தான், 4ஆம் கட்டை முட்கொம்பன், கண்ணகைபுரம் ஆகிய இடங்களைச் சேர்ந்த மூவாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன.

அக்கராயன் மருத்துவமனையில் மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்கள் பற்றாக்குறையால் அது ஒரு மத்திய மருந்தக நிலையில் இயங்குகிறது. (த-420)

## முல்லை.மாவட்ட மக்கள் அதிகளவில் போசாக்குக் குறைபாட்டால் பாதிப்பு

பரந்தன், மார்ச் 27

அதிகளவான போசாக்குக் குறைபாடுள்ள மக்கள் வாழும் மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டம் உள்ளது என முல்லைத்தீவு மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் இ.கோகுலதாசன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:-

போர்க்காலத்தில் எமது மாவட்டத்திலேயே அதிகளவான போசாக்கு உணவுகள் உற்பத்தி செய்யப்பட்டன. எனவே, எமது மாவட்ட மக்களும் அந்தக் காலத்தில் போசாக்குடையவர்களாக இருந்தனர்.

சமாதான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு ஏ-9 வீதி திறந்துவிட்டதன் பின்னர் நெல் உற்பத்தியிலேயே எமது மக்கள் அதிக ஆர்வம் காட்டினார்.

போசாக்கான உணவுகளிற்குத் தட்டுப்பாடு நிலவியது. இதனால் எமது மாவட்டத்தில் அதிகளவான போசாக்குக் குறைபாடு ஏற்பட்டுள்ளது - என்றார். (த-352-202)



பழைய முருகண்டியில் நடந்த காணி இடம்பெயர் சேவையின் போது... (படம் - மல்லாவிச் செய்தியாளர்)

## பாலியாறு கிராமத்தில் பொது மருத்துவ சிகிச்சை

மன்னார், மார்ச்27

தமிழீழ சுகாதார சேவைகளின் லெப். கேணல் கௌசல்யன் நடமாடும் மருத்துவ சேவையினரால் கடந்த 23ஆம்திகதி மன்னார் மாவட்டத்தின் வைத்தியசாலை வசதிகள் குறைந்த பாலியாறு பொதுநோக்கு மண்டபத்தில் பொது மருத்துவ சிகிச்சை நடத்தப்பட்டது.

இதில் 250 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் கலந்துகொண்டு சிகிச்சை பெற்றுள்ளனர். (த)

## மல்லாவியில் திறந்தவெளி அரங்கு

மல்லாவி, மார்ச்27

'நிக்கொட்' திட்டத்தின் கீழ் மல்லாவியிலுள்ள துணுக்காய் பிரதேச பொது விளையாட்டு மைதானத்தில் திறந்தவெளி அரங்கம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

12 லட்சம் ரூபா செலவில் இந்த திறந்த வெளி அரங்கு துணுக்காய் பிரதேச சபையின் அனுசரணையுடன் துணுக்காய் உதவி அரச அதிபர் பணிமனையில் அமைக்கப்பட்டு வருகிறது. (எ-322)

## இலங்கை வங்கியின் பிரதிமுகாமையாளர் திங்களன்று முல்லைத்தீவுக்கு விஜயம்

புதுக்குடியிருப்பு, மார்ச் 27

இலங்கை வங்கியின் நிர்வாக அபிவிருத்தி பிரதிப் பொது முகாமையாளர் பி.ஏ.சி. பெர்னான்டோ முல்லைத்தீவுக்கு விஜயம் செய்துள்ளார்.

கடந்த 20 ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் வடக்கு உதவிப் பொதுமுகாமையாளர் பி.ஏ. அருமைநாயகம், வன்னிப் பிரதேச முகாமையாளர் ச.திருச்செல்வம் ஆகியோருடன் பிரதிப் பொதுமுகாமையாளர் முல்லைத்தீவுக்கு வருகைதந்து, வங்கி செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை பார்வையிட்டார்.

வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், ஓய்வூதிய சங்கத்தினர் மற்றும் வாடிக்கையாளர்களுடன் கலந்துரையாடினார்கள்.

அவர்களின் கோரிக்கைகளுக்கு பதிலளித்ததுடன் பிரச்சினைகளுக்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர்.

வாடிக்கையாளர்கள் நகை அடகு சேவையை ஒழுங்குபடுத்தித் தருமாறு கேட்டனர். அதனை மிக விரைவில் ஆரம்பித்து வைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் கூறினார். (த-353)

## ஜெயபுரம் அ.த.க.பாடசாலையில் கிராமிய வங்கிக்கிளை திறப்பு

பரந்தன், மார்ச் 27

கிராமிய அபிவிருத்தி வங்கி தனது 13 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஜெயபுரம் அ.த.க.பாடசாலையில் விரிவாக்கல் கிளை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

கிளையின் திறப்பு விழா கடந்த 16 ஆம் திகதி சிரேஷ்ட மாணவத் தலைவர் ஆனந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.

கிராமிய அபிவிருத்தி வங்கியின் பெயர்ப் பலகையை வங்கி மேலாளர் எஸ்.ஸ்ரெனிஸ் திரை நீக்கம் செய்து வைத்தார். கட்டடத்தை கோட்டக் கல்விப் பணிப்பாளர் தி.கணபதிப்பிள்ளை நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

நிகழ்வில் குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்ட மூவருக்கு சிறப்பு பரிசில்களும் வழங்கப்பட்டன. (த-352-202)

## சைவசித்தாந்த கருத்தரங்கும் பரிசளிப்பு நிகழ்வும்

கிளிநொச்சி, மார்ச் 27

கிளிநொச்சி திருநெறிக் கழகத்தின் சைவ சித்தாந்தக் கருத்தரங்கும் சைவ சித்தாந்த திறனாய்வுப் போட்டிமற்றும் சைவநெறிப் போட்டிப் பரீட்சையில் முதன்மைப் புள்ளிகளைப்பெற்ற உயர்தர மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இன்று கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இன்று காலை 9 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி முதல்வர் இ.இராஜமகேந்திரம் தலைமையில் கருத்தரங்கும் பிற்பகல் 2மணிக்கு கரைச்சிப் பிரதேச சபை சிறப்பு ஆணையர் பொன்.நித்தியானந்தம் தலைமையில் பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறும். (த-352)

## பழைய முருகண்டியில் காணி இடம்பெயர்சேவை

மல்லாவி, மார்ச்27

பழைய முருகண்டி கிராமத்தில் வசிக்கும் மக்களின் காணி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் முகமாக துணுக்காய் உதவி அரச அதிபர் பணிமனையின் காணிப் பகுதியினரால் இடம்பெயர்சேவை ஒன்று இந்தக் கிராமத்தில் கடந்த 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டது.

இந்த இடம்பெயர் சேவை மூலம் கிராம மக்களின் காணி தொடர்பான பிரச்சினைகளும் முறைப்பாடுகளும் ஆராயப்பட்டு உடனடியாக உரிய தீர்வுகளும் காணப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-322)

## புதுக்குடியிருப்பில் ஆங்கில பாடவகுப்பு

புதுக்குடியிருப்பு, மார்ச் 27

முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சேவை மன்றம் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் ஆங்கில பாட வகுப்புகளை ஆரம்பித்துள்ளது.

இளையோர் மேம்பாட்டு அமைப்பின் தொழிற்கல்வி பயிற்சி நிலையத்தில் நடத்தப்பட்டுவரும் இப் பயிற்சி வகுப்பின் ஆரம்ப நிகழ்வு கடந்த 17ஆம் திகதி வைபவ ரீதியாக நடைபெற்றது.

நிகழ்வில் தமிழீழ தேசியத் கொடியை இளையோர் மேம்பாட்டு அமைப்பின் பொறுப்பாளர் நரேன் ஏற்றினார்.

கருத்துரைகளை முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சேவை மன்றப் பணிப்பாளர் க.சண்முகவடிவேல், இளையோர் மேம்பாட்டு அமைப்பின் பொறுப்பாளர் ஆசிரியர் இராசதுரை ஆகியோர் வழங்கினர். (த-352-202)




## முள்ளியவளை நுண்கலைக் கல்லூரியில் சிறப்புற நடைபெற்ற ஆண்டுவிழா

முல்லைத்தீவு, மார்ச்27

தமிழீழ நுண்கலைப் பிரிவின் முள்ளியவளை நுண்கலைக் கல்லூரியின் ஏழாவது ஆண்டு நிறைவு விழா கல்லூரியின் அதிபர், திருமதி மணிமொழி கிருபாகரன் தலைமையில் வெகுசிறப்பாக நடைபெற்றுள்ளது.

கடந்த 19 ஆம் திகதி பிற்பகல் 4 மணியளவில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நிகழ்வு ஆரம்பமாகியது.

கல்லூரி மாணவ மாணவிகளின் பண்ணிசை, பேச்சு, மெல்லிசைப்பாடல், தற்காப்புப் பயிற்சிக் கலை, கவியரங்கம், கர்நாடக சங்கீதக்கச்சேரி, நாட்டிய சங்கமம், முல்லை வலய அழகியல்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி உ.முனீஸ்வரனின் இசைக்கச்சேரி என்பன இடம்பெற்றன.

முதுபெரும் கலைஞர் கௌரவிப்பும், நல்லாசான் விருது வழங்கல் நிகழ்வும் சிறப்பாக நடைபெற்றன. தமிழீழத்தின் முதுபெரும் கலைஞர்கள் துறைரீதியாகக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்தக் கௌரவிப்பு நிகழ்வில் பொய்கை செல்லத்துரை, திருமதி இசைக்கலைமணி உதயராணி முனீஸ்வரன், திருமதி புவனா இரத்தினசிங்கம், என்.எஸ். மணியம், ஓவியர் ராஜன், சங்கீத பூஷணம் பாலசிங்கம், இசைக்கலை திருமதி சாந்தகுமாரி கமலகாந்தன் ஆகியோர் பொன்னாடை போர்த்து விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

விருதுகளை தமிழீழ அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் வழங்கிக் கௌரவித்தார்.

கலைஞர் பற்றிய அறிமுக உரையைத் தமிழீழ நுண்கலைப் பிரிவுப் பொறுப்பாளர் க.கண்ணதாஸ் நிகழ்த்த கலைஞர்களின் சேவைகள், அர்ப்பணிப்புகள் பற்றிய விளக்கவுரையை நிதர்சனப் பிரிவைச் சேர்ந்த சங்கர் நிகழ்த்தினார்.

முள்ளியவளை நுண்கலைக் கல்லூரியின் ஆசிரியர்கள், பரீட்சைகளில் வெற்றியீட்டிய பல்துறை மாணவர்கள் ஆகியோருக்கும் சிறப்புப் பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (த)




நலமுடன் வாழ நல்வாழ்த்துக்கள்

உயர் திரு.
கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்
(முன்னாள் உதவிப் பொதுமுகாமையாளர், இலங்கை வங்கி, வடபிராந்தியம்)

அன்பும் அறமும் பண்புடனே
ஆற்றியசேவையில் காட்டினீரே - மக்கள்
இன்பம், துன்பம் யாதெனிலும்
ஈகை மைந்தனாய் திகழ்ந்தவனே!
உங்கள் அகவை அறுபதினிலே
செல்வம், செழிப்பு நீங்கள் பெற்று
சீர் பூத்திட வாழியவே.

Sri Palm Beach Restaurant
Raja Complex 1st Floor,
205, Kasthuriyar Road,
Jaffna.
0777 222180 (48551)(18-19-45)

Palm Beach Restaurant
169, Sri Pon Ramanathan Road,
Thirunelvely
0777283595

## காணி இரத்துச் செய்தல்

(காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் பிரிவு 106 இன் கீழ்)
பிரதேச செயலகம், கரைதுறைப்பற்று

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மதவளசிங்கன்குளம் கிராம அலுவலர் பிரிவின் பூதன்வயல் என்னும் கிராமத்தில் கீழ்வரும் விவரங்களுடைய இரண்டு காணித்துண்டங்கள் இரத்துச் செய்யப்படவுள்ளன.

| காணி உரிமையாளர் பெயர் | பட.இல | கா.து.இல. | உ.ப.இல. |
|---|---|---|---|
| 1. S.M.E. யோசேப் | P.Plan 1 | 06 | 17976 |
| 2. வினாசித்தம்பி பரமலிங்கம் | P.Plan 1 | 17 | 17961 |

எனவே, மேற்படி காணிகளுக்கு உரிமைகோருவோர் எதிர்வரும் 26.04.2006 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு எமது பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள விசாரணையில் தகுந்த ஆதாரங்களுடன் சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

உதவி பிரதேச செயலாளர்,
கரைதுறைப்பற்று. (48562) (24-11-14)

## இறைதியான வழிபாடுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்27

போல் றொபின்சன் அடிகளாரின் இறைதியான வழிபாடுகள் இன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு கொழும்புத்துறை செ.ப.மாலை அன்னை ஆலயத்திலும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்திலும் மாலை 6 மணிக்கு நவாலி புனித இராயப்பர் ஆலயத்திலும் இடம்பெறவுள்ளன.

(எ-202)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் தம்பு பசுபதி

அன்னைக்கும் அன்னையாய்
ஆருயிர்த் தந்தையாய் தன்னைக்
கரைத்து எமது உயர்வுக்காய்
தன்னை அர்ப்பணித்த எம்
குலவிளக்கே! நீங்கள் எம்மைப் பிரிந்து
ஓராண்டு ஆகிறதோ!....

வீரபத்திரர் கோயிலடி தெற்கு,
உடுப்பிட்டி. (48544) (24-11-14) கு.சாந்தன்.

## 31ஆம் நாளில் நினைவு கூருகின்றோம்

கர்த்தரின் படைப்பு
07 - 01 - 1939



கர்த்தரின் அழைப்பு
24 - 02 - 2006

திருமதி
### பர்னாந்து பிலோமினா
(திரேசம்மா)

அன்புச் சிறகடித்து வாழ்வுச் சோலையில்
இன்பத் தென்றலாய் இனிமை சொரிந்த அம்மாவே!
துன்ப துயரத்தை ஆனந்தமாக்கினாய் அம்மா!
கவலைக் கண்ணீரைத் தந்து நீ சென்றுவிட்டாய் அம்மா,
கணவன், பிள்ளைகளுக்காய் ஆசை உறவுகளுக்காய்
எப்போதும் வாழ்ந்த எம் அம்மாவே! தேவனிடம் சென்றது ஏனோ?
காற்றும் கடலும் கொந்தளித்த பயணத்தில்
நேற்றுவரை துணையாகி நின்ற எம் அம்மாவே!
தாரமாய் தாயாய் உறவு சொல்லி - இன்று
தூரமாய் தேவனிடம் சென்றது ஏனோ?
பசித்த முகம் பார்த்து பாசச் செடி நட்ட எம் பாசத் தாயே!
உம் தசையும் உடலும் மரணப் போர்வையால்
- தேவனிடம் சென்றதுவோ?
கடந்த நாள்களின் நினைவுகள் கைவீசி இன்னமும் - நடந்து
திரியுதம்மா எம் நெஞ்சத் தரையிலே!
தோளைத் தொட்டிலாக்கி குருதியைப் பாலாக்கி - நாளை
வரும் வாழ்வில் எம்மை நலன் பெறச் செய்தாயே அம்மா!
மெழுகுதிரி போல் உருகும் எம் தாய்மை கண்டு
எம் விழிகள் கலுவி, நீரோட கரைகின்றோம் பாரம்மா!
நீ நினைக்காமல் கிடைத்த செல்வம் நாம் - என்றும்
உமக்கு வாடாத மலர்கொட்டி கண்ணீரால் அஞ்சலிப்போம் அம்மா!
அழியாத பெரும் பேறு தந்தாயே அம்மா - பூவினில்
புன்னகை பூத்திட்ட உன் முகம் மறவாமல்
வழிந்தோடும் கண்ணீரைக் காலமெல்லாம்
- காணிக்கையாக்கிடுவோம் அம்மா!!!

இல.9, 2ஆம் குறுக்குத்தெரு,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

உம் பிரிவால் நெஞ்சம் நெகிழ்ந்து
துயருற்றிருக்கும்:
கணவர் (ராசி),
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(48580) (24-11-14)

## ஆறாத துயரத்தில் ஆறு திங்கள் வந்ததையா.....



அன்னை மடியில்
26 ★ 04 ★ 1953

ஆண்டவன் அடியில்
01 ★ 10 ★ 2005

### அமரர் பொன்னுத்துரை சரவணபவன்
(ராசா - மண்டைதீவு - 6)

ஆறு திங்கள் ஆனதப்பா!
அவனி விட்டு நீங்கள் சென்று
அத்தி பூத்தது போல் அவனியிலே அதிசயமாய்
அப்பா! வருவாரென ஆவலோடு இருக்கின்றோம்
யார் எமக்கு உண்டென்று
அங்கே நீர் நின்றுவிட்டீர்,
அரைச் சாமம் எழுந்து நாங்கள்
அலறித் துடிக்கின்றோம்
ஆற்றிட வாரும் ஐயா அன்பான அப்பாவே!
கொள்ளிக்கு என் தீர்க்க வென்றோ
கொடுங்கைக்குள் வைத்திருந்தோம்
குலக் கொழுந்தே! குல விளக்கே!
எம்மை எல்லாம் இங்கு விட்டு
எங்கே நீ சென்று விட்டாய்?
கனவு கண்டு துடித்தெழுந்து
நாடி உனைத் தேடி ஓடி
நனவாக மாறாதா! என்று நாம் ஏங்குகின்றோம்
நடைப் பிணமாய் மாறி விட்டோம்
நாயகனே! ஓடித்தான் ஒருமுறை வா!
படைப்பினிலே இறப்பும் உண்டு
பிறப்பினன்றே எழுதி விட்டான்
அதை உமக்கு ஏன் விரைவில்
ஆண்டவனும் தந்து விட்டான்
எம் அப்பா! எம் செல்வா! ஓலமிடும்
எம்மிடத்தில் ஒரு நொடி வந்திருந்து
ஓர் இன்பம் தந்திடுக.

59, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

- குடும்பத்தினர்.

(சி/48539) (39-11-14-24)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை ஜெகதீசன்



முருகேஸ் பண்டிதர் வீதி,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.
தொ.பே.:- 077-9059526

சுழிபுரம், நெல்லியானையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை ஜெகதீசன் 19.03.2006 அன்று லண்டனில் காலமாகி விட்டார்.

அன்னார் வேலுப்பிள்ளை - சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மகனும் இல்ஷாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணமூர்த்தி, தேவராஜா, தனபாலன் செல்வத்திலகம் ஆகியோரின் அன்பு சகோதரனும் குணபாக்கியத்தின் (மணி) மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2006) திங்கட்கிழமை லண்டனில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (48564) (24-11-14)

தகவல்:
ஈருபாலா, ஸ்ரீபாலா, ஜெயபாலா, நிர்மலா (பெறாமக்கள்).

# அமைதியைக் குழப்பும் தொடர் சம்பவங்களால் ஆழிப்பேரலை பாதித்த மக்கள் பெரும் கவலை

கடந்தவாரம் மட்டு.- அம்பாறை மாவட்டங்களில் சிறுசிறு சம்பவங்கள் நடந்தேறின. எனினும் மக்கள் மத்தியில் தொடரும் அறிக்கைகள் எழுப்பும் சந்தேகங்கள் அடுத்த ஜெனீவாப் பேச்சுகளைப் பொய்ப்பித்து வருகின்றன. தேர்தல் விடயம் எதிர்பார்த்ததே.

பவ்ரல் அமைப்பின் தலைவர் பகிரங்கமாகக் கூறிய "ஜிகாத்" விடயம் முஸ்லிம்களால் பலத்த எதிர்ப்பை உண்டுபண்ணியிருந்தது. அதனால் நழுவப் பார்த்து எழுதிய மடலால் மீண்டும் அதே தமிழ் நாளிதழில் அவரை தனது எழுத்து நேர்மைத்திறனால் மாட்டி வைத்துள்ளது. இரு தரப்பையும் பார்க்கின்றபோது நெருப்பில்லாமல் புகையாது என்ற முடிவுக்குவர வேண்டியுள்ளது.

நிற்க, ஆழிப்பேரலை வீடமைப்பு பற்றி அமைச்சர் பேரியல் அஷ்ரப்பும் ஜனாதிபதி



மஹிந்த ராஜபக்ஷவும் தற்போது அழுத்தம் கொடுக்க ஆரம்பித்துள்ளனர். எல்லாம் உள்ளூராட்சித் தேர்தலையொட்டி என்று சொன்னாலும் மக்கள் பயன்பெற்றால் சரி. ஆழிப்பேரலை தாக்கி 14 மாதங்கள் கடந்தாலும் மீண்டும் அதன் தாக்கம் மற்றும் வீடமைப்புத் தொடர்பாக இரைமீட்டுப்பார்க்க வேண்டிய தேவையுள்ளது.

அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கரையோரத்தில் கல்முனை (முஸ்லிம்) பிரதேசம் ஆயிரத்து 730 பேரையும் தமிழ்ப் பிரதேசம் ஆயிரத்து 364 பேரையும்

**ராஜபுத்திரன்**

காரைதீவுப் பிரதேசம் 824 பேரையும் இழந்து முதல்மூன்று பாரிய அழிவு இடம்பெற்ற பிரதேசங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

முற்றாக அழிந்த பிரதேசமாக அக்கரைப்பற்றை அடுத்துள்ள 40 ஆம் கட்டை, தம்பட்டை ஆகிய கிராமங்களைக் குறிப்பிடலாம். அம்பாறை மாவட்டத்தில் மொத்தமாக 27 ஆயிரத்து 155 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. அவற்றில்ஆக 414 வீடுகளே இதுவரை மீளக் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன.ஏனையவற்றுக்கு வீடமைப்பு மானியமாக இதுவரை100 கோடி ரூபா வரை வங்கிகளூடாக வழங்கப்பட்டுள்ளதாக மேலதிக அரச அதிபர் யூ.எல்.ஏ.அசீஸ் கூறுகிறார்.

2 லட்சத்து ஆயிரத்து 592 பேர் பாதிக்கப்பட்டாலும் 91 ஆயிரத்து 630 பேர் இடம்பெயர்ந்து 6 ஆயிரத்து 14 இடைத்தங்கல் முகாம்களில் தற்போது சீவியம் நடத்தி வருகின்றனர். 40 பாடசாலைகள் அழிக்கப்பட்டன. இதுவரை 11 பாடசாலைகளில் மட்டுமே கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதாவது ஏழு பாடசாலை கூட கட்டப்பட்டு திறக்கப்படவில்லை. 17 ஆசிரியர்கள் பலியாகியும் அவர்களுக்குரிய 55 வயது வரையிலான மாதாந்த வேதனம் வழங்க ஒரு வருடமாகியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

கரையோரப் பிரதேசத்தில் 30.75 வீதமானோர் இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களிலும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

ஆழிப்பேரலையின் பின்னர் கரையோரப் பிரதேசத்திற்கென மேலதிக அரச அதிபராக சிரேஷ்ட நிர்வாக அதிகாரி யூ.எல்.ஏ. அசீஸ் நியமிக்கப்பட்டு குறிப்பிட்ட ஆளணியுடன் கல்முனையில் தலைமையகத்தை ஏற்படுத்திச் செயற்பட்டு வருகிறார்.

ஒருவருடம் பூர்த்தியாகிய நிலையில் மேலதிக அரச அதிபர் யூ.எல்.ஏ. அசீஸ் அவரது அலுவலக உத்தியோகத்தர்களான இர்சாத், யுகைர் ஆகியோர் பல தரவுகளை மனங்கோணாது தந்துதவினர் (உதயனுக்காக).

அம்பாறை மாவட்டத்தில் ஐயாயிரத்து 920 பேர் ஆழிப்பேரலையால் பலியானார்கள். ஆறாயிரத்து 706 பேர் காயமடைந்தனர். மேலும் மொத்தமாக 38ஆயிரத்து 104 குடும்பங்களைச் சேர்ந்த 91 ஆயிரத்து 630 பேர் இடம்பெயர்ந்தனர். 55 ஆயிரத்து 619 குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சத்து ஆயிரத்து 592 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 27 ஆயிரத்து 155 வீடுகளும், 40 கல்விக்கூடங்களும், 8சுகாதார நிலையங்களும், நூறு வணக்கஸ்தலங்களும், மூவாயிரத்து 452 மீன்பிடிக்கலங்களும், 436 பொதுக்கட்டடங்களும் சேதமடைந்துள்ளன.

இதுவரை ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு வீடிழந்த 27ஆயிரம் பேரில் 414 பேருக்கு மாத்திரமே நிரந்தர வீடுகள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன.

அட்டாளைச்சேனை - ஆலங்குளம்பகுதியில் 50 வீடுகளைப் பெண்கள் அபிவிருத்தி நிலையம் அமைத்தது. திருக்கோவில் - மண்டானைப் பகுதியில் நூறு வீடுகளை இலங்கை புகையிலைக் கூட்டுத் தாபனமும், பி.ஏ.எஸ்.எவ். நிறுவனமும் பொத்துவில் - சர்வோதயபுரம், கோமாரிக்காடு ஆகிய பகுதிகளில் 170 வீடுகளையும் வாகுகலையில் 60 வீடுகளையும் அமைத் துள்ளன. இதைத் தவிர தன்னார்வ நிறுவனங்கள் நாவிதன்வெளியில் 15 வீடுகளையும், கோமாரியில் 20 வீடுகளையும் அமைத்துக் கொடுத்துள்ளன.

எது எப்படியிருந்த போதிலும் 26 ஆயிரத்து 741 குடும்பங்கள் நிரந்தர வீடின்றி ஒருவருட முடிவிலும் முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர் என்பது வெள்ளிடைமலை. முகாம்களுக்குச் சென்று கேட்கும்போது மக்கள் அரசியல் வாதிகளையும் அதிகாரிகளையும் குற்றஞ்சாட்டி பாதிக்கப்படாதவர்களின் "பொக்கட்" நிரப்புவதற்கு வழிவகை செய்துள்ளனர் என்கின்ற னர்.

நிரந்தர வீடு என்பது 99 வீதமான மக்களின் உளவியல் சார்ந்த பாரிய எதிர்பார்ப்பாக இருப்பது புலனாகிறது. இந்த நிலையில் இப்பகுதி வாழ் மக்களின் கருத்துக்கள் சிலவற்றை இங்கு பகிர்ந்து கொள்கின்றோம்.

**சவளக்கடை அகதிமுகாமில் வசிக்கும் பெரியநீலாவணையைச் சேர்ந்த கு.ரஞ்சிதமலர் (வயது 40) கூறுகையில்:-**

ஆழிப்பேரலையின் பின்னர் இடம்பெயர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கட்டித் தந்த இந்தக் கொட்டிலில் வாழ்ந்து வருகிறேன். படிக்கிற 4 பிள்ளைகள் உள்ளனர். அவருக்குத் தொழிலில்லை.

உணவு முத்திரை, விசேட கொடுப்பனவான ரூபா ஐயாயிரம் என்பன மூன்று தரத்துடன் நிறுத்தப்பட்டுள்ளன. பிள்ளைகள் கல்முனைப் பாடசாலையில் படிக்கின்றனர். பாடசாலை செல்வதற்கு 'சைக்கிள்கள்' இல்லை. பஸ்ஸை விட்டால் படிப்பு இல்லை.

எமது முகாமிற்குள் கிணறு ஒன்று உள்ளது. அது உப்பாக இருக்கிறது. மூன்று நாளைக்கு ஒருதடவை பவுசரில் தண்ணீர்வரும். மொத்தத்தில் இந்த ஒரு வருடகாலம் ஒரு யுகமாகக் கழிந்தது - என்றார்.

**பெரியநீலாவணை விஷ்ணு ஆலய அகதிமுகாமில் வசிக்கும் ந.வள்ளியம்மை (வயது 51) கூறுகையில்:-**

இம்முகாமிலிருந்து எங்களை எழும்பச் சொல்றாங்க. நாம் இங்கிருந்து எங்க போறது? சோப்பு சீப்பு தாறாங்க. அது போதுமா? நிம்மதி வேண்டாமா? தமிழர் புனர்வாழ்வுக்கழகம் எமக்கு உதவிசெய்தது. கூரைக்கு கிடுகு கட்டித்தந்தார்கள். அண்மைய காற்றில் அவை பறந்து போய்விட்டன. அது மீள தகரத்தாலாவது மாற்றியமைக்கப்பட வேண்டும்.

சுயதொழில் வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். பாடசாலையை மீள அதே இடத்தில் இயங்கவைக்குமாறு அருட்தந்தையூடாக கல்வி அதிகாரிகளைக் கேட்டுள்ளோம் - என்றார்.

**காரைதீவு 'கோல்' அகதிமுகாமிலுள்ள ரி.சுமதி (வயது 32) கருத்துக் கூறுகையில் :-**

ஆழிப்பேரலையிலிருந்து நாம் ஏன் தப்பினோம்? என்று தினமும் அழுகின்றோம். 'ஓஎல்' படிக்கும் எனது மகளை இழந்து தவிக்கும் எனக்கு 2 குமர்ப்பிள்ளைகள் உள்ளனர். நாம் கடற்கரைக்கருகில் எவ்வித நோய் நொடியுமில்லாமல் நிறைய சம்பாத்தியத்துடன் மகிழ்ச்சியாக வாழ்ந்துவந்தோம்.

ஆனால், இன்று தினமும் அழுகையும் கவலையும் எம்மை வாட்டுகின்றன. எனது குமர்கள் இந்தச் சின்னக் கொட்டிலில் எப்படிப் படிப்பது? உறங்குவது? உடைமாற்றுவது? 65 மீற்றருக்குள் எமது வீடு இருந்தது. இன்று வீடுகூட இல்லை. நஞ்சைக் கொடுத்துவிட்டு நானும் சாகத்தான் விரும்புறன்.

முகாமில் கை நீட்டினாலும் கஷ்டம், கால் நீட்டினாலும் கஷ்ரம். பச்சை அரிசியும், பருப்பும், புழுத்தமாவும் எத்தனை நாளைக்கு? எமக்குத் தேவை நிரந்தரமான வீடுதான்." என்றார்.

**பெரியநீலாவணையைச் சேர்ந்த கே. ராஜேஸ்வரி (வயது 56) கருத்துரைக்கையில்:-**

'நிவாரணங்கள் கிடைத்தன. எனது புருஷன் ஓய்வூதியக்காரர் என்பதால், ஆழிப்பேரலை உணவு முத்திரையையும் விஷேட கொடுப்பனவு ரூபா ஐயாயிரத்தையும் வெட்டி விட்டார்கள்.

கொட்டிலொன்று அடித்துத் தந்துள்ளார்கள். அங்கு நாயும் படுக்காது. கஷ்டத்தின் மத்தியில் காலத்தைத் தள்ளுகிறோம். தேவையானவர்களுக்கு உதவி போய்ச்சேரவேண்டும். இதனை அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும்'' - என்றார்.

**காரைதீவைச் சேர்ந்த ஓய்வூதிய சங்கத் தலைவரும் ஓய்வுபெற்ற அதிபருமான வே.கிருஷ்ணபிள்ளை (வயது 66) கூறுகையில் :-**

ஆழிப்பேரலையில் எனது மனைவியை இழந்து சொத்துக்களையும் இழந்து மகளது வீட்டில் வாழ்ந்து வருகிறேன். கண்டி மனித அபிவிருத்தித் தாபனம் ஒரு கொட்டிலை அமைத்துத் தந்தது.

ஓய்வூதியம் பெறுவதால் அரச ஊழியர் எனக் கருதி ஆழிப்பேரலை முத்திரையையும் ஐயாயிரம் ரூபா கொடுப்பனவையும் நிறுத்திவிட்டனர். இது சரியென்று படலாம். ஆனால், ஓய்வுபெற்றவர் என்பதால் அரசிலோ, நிறுவனங்களிலோ கடன்கூடத் தருகிறார்களில்லை. இது எமது அணியினருக்கு இழைக்கப்படும் அநீதி, பாரபட்சமாகும்.

பகுதியாக உடைந்த வீடுகளும் இன்று வெடிப்புகளுடன் உடைந்து வருகின்றன. அதனால், மேலும் உளப்பாதிப்புக்கள் கூடி வருகின்றன. இதை எந்த நிறுவனமும் கவனிப்பதாயில்லை. கடலோரத்தில் சிறிய வீடுகளுடன் இருந்தவர்களுக்கு தற்போது ஓரளவு திருப்தியிருக்கலாம். ஆனால், எம்மைப் போன்று வசதியுடன் வாழ்ந்தவர்களின் பாடு அதோகதிதான். அரச ஊழியருக்கு நஷ்டஈடு கொடுக்கப்படவேண்டும் - என்றார்.

**பாண்டிருப்பு தாதன் முகாமைச் சேர்ந்த எஸ்.தேவராஜா (வயது 30) கருத்துத் தெரிவிக்கையில் :-**

எனக்கு இரு பெண்கள் உள்ளனர். அவர்களின் எதிர்காலத்தை நினைத்து வாடுகிறேன். நிவாரணம் கிடைக்கின்றது. சமுர்த்தியால் மேசன் தொழிலுபகரணங்கள் தந்தார்கள். வீடுகட்டித் தருவதாகப் பதிந்தார்கள். ஆனால், இன்னும் காணவில்லை. எப்ப வருவார்கள் என்பதைப் பார்த்துக்கொண்டிருக்கின்றேன். - என்றார்.

**கல்முனை தரவைப் பிள்ளையாராலய முகாமிலுள்ள இ.நேசம் (வயது 50) என்பவர் கூறுகையில்:-**

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு எல்லையிலுள்ள முகாமில் வாழ்ந்து வரும் எமக்கு நிம்மதியில்லை. அண்மையில் இனமுறுகலில் மீண்டும் இடம்பெயர வேண்டியதாயிற்று. அரசியல்வாதிகளுக்கு இது விளங்குமா? நிம்மதியில்லாமல் நடைப்பிணமாக வாழ்ந்து வருகிறோம். குளத்தை நிரப்பி வீடு கட்டித் தாருங்கள் - என்றார்.

**கல்முனை மும்மாணிக்க அகதிமுகாமில் வசிக்கும் ஏ. தியாகராஜா (வயது - 57) என்பவர் கூறுகையில்:-**

"ஆழிப்பேரலை தாக்கி ஒருவருடமாகிய போதிலும் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. நான் சைக்கிள் திருத்தும் கடை வைத்து சீவியம் நடத்திவந்தேன். 65 மீற்றருக்குள் எனது வீடு இருந்தது. அரிசி, சீனி, மா என்றால் கிடைக்கிறது.

ஆனால், ஒழுங்கான வீட்டுத்திட்டமொன்று இல்லை. இங்கு பிரதேச செயலாளரோ,கிராம

**அம்பாறைமடல்**

சேவகரோ வந்து பார்ப்பது கிடையாது. அநாதைகள் மாதிரி கிடக்கிறோம். சுயதொழிலுக்கு எவ்வித உதவியுமில்லை. 'மீண்டும் பழைய நிலைக்குத் திரும்ப இரு வருடங்கள் எடுக்கலாம். நாம் குடும்பத்தில் ஆறுபேர். ஒரு சின்னக்கொட்டிலில் எப்படி வாழ்வது?

எமக்கு நிவாரணம் வேண்டாம் நிரந்த வீடு அமைத்துத் தாருங்கள் - என்றார்.

**பெரிய நீலாவணை- கே. நாகேஸ்வரி (வயது -33) கூறுகையில்:-**

ஆழிப்பேரலைக்குப் பின்னர் ஒரு வளவில் 10 முகாம்களுடன் கூடிய கொட்டிலைத் தந்தார்கள். 6 மாதம் பாவிக்கக் கூடிய மலசலகூடம், குடிக்கத் தண்ணீர் இல்லை, குளிக்க குளத்திற்குச் செல்லவேண்டும்.வீடு கிடைக்குமென்ற நம்பிக்கையில் வாழ்ந்து வருகிறேன் என்றார்.

## வீடமைப்புப் பணிகளில்கூட பின்னடைவு ஏற்படுவதாகப் புகார்



ஆழிப்பேரலை அகதிகளின் வீடில்லாப் பிரச்சினை பற்றி இங்கு சிலரின் செவ்வியை இங்கு புட்டுக்காட்டிய நோக்கம் என்னவெனின் நாட்டில் சமாதான சூழல் நிலவினால் மட்டுமே இவர்களது நிரந்த வீடுகள் நிஜமாகும் என்பதனாலாகும்.

எனவே தொடரும் சிறு சிறு சம்பவங்கள் நிறுத்தப்படவேண்டும். அதனையுணர்ந்து, எந்தத் தரப்பெனினும் மரத்தால் வீழ்ந்தவனை மாடேறி மிதித்த கதைக்கு அந்த மக்கள் தள்ளப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மீண்டும் யுத்தம், சுற்றிவளைப்பு, ஆர்ப்பாட்டம், கொந்தளிப்பு என யுத்த நிறுத்த மீறல்கள் திரைமறைவில் தொடர்ந்தால் ஏலவே எழும்பமுடியாமல் திணறிக்கொண்டிருக்கும் ஆழிப்பேரலை அகதிகளை யார் பார்ப்பார்கள்? யார் கவ னிப்பார்கள்?

இது மட்டு. - அம்பாறைக்கு மட்டுமல்ல, முழு வடக்கு - கிழக்கு மற்றும் இலங்கைக்கும் பொருந்தும்.

சமகால நிலைவரங்களைச் சீர்தூக்கிப் பார்க்கும் அதேவேளை அடிபட்ட சமூகமொன்று சமகாலத்தில் தலை தூக்கமுடியாதளவிற்கு பின்தள்ளப்பட்டுள்ளது. எனவே அதனையுணர்ந்து அரசியல் (தேர்தல்) லாபம் கருதாமல் செயற்பட முன்வரவேண்டும். ✱

## தவக்காலச் சிந்தனை 27

### இறை நம்பிக்கை வீண் போகாது

அரச ஊழியர் இயேசுவிடம் வந்து ஐயா என் மகன் இறக்கும் முன் வாரும் என்றார். இயேசு அவரிடம் "நீர் புறப்பட்டுப்போம். உம் மகன் பிழைத்துக் கொள்வான்" என்றார். அவரும் இயேசு தம்மிடம் சொன்ன வார்த்தையை நம்பிப் புறப்பட்டுப் போனார். (யோவா 4:49-50)

இங்கே அந்த அரச ஊழியன் இயேசுவிடம் கொண்டிருந்த அளவற்ற அன்பையும் அவரது வார்த்தையில் அவன் கொடிருந்த அசைக்கமுடியாத விசுவாசத்தையும் நாம் அறிய முடிகின்றது. ஆனால், இன்று நாம் இறை அன்பராம் இயேசுவிடத்தில் எத்தகைய அன்புடனும் விசுவாசத்துடனும் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம் என்று சிந்திக்கின்றபோது நாம் ஆன்மீகப் பார்வை பலவீனமடைந்தவர்களாக உலக மாயையில் சிக்கி போலிக் கிறிஸ்தவர்களாகவே வாழ்கின்றோம். எமது வேண்டுதல்களை இறைவன் நிறைவேற்ற வேண்டும் என்ற எதிர்பார்ப்புக்கள் எம் ஒவ்வொருவருக்கும் இருக்கவே செய்கின்றன. ஆனால் அதற்குத் தகுதியானவர்களாக நாம் வாழ்கின்றோமா....?

இன்று எமது வாழ்க்கை எப்படி அமைகின்றது? சமூக, சமுதாய அமைப்புக்களிலே செல்வம், அந்தஸ்து, சாதி, மதம், இனம், மொழி, பண்பாடு, செல்வாக்கு, இன்ன பிறவைகள் மூலம் நீதிக்கு விரோதமாக அநீதமான செயல்களுக்கு நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ ஆதரவு தந்து கொண்டிருக்கும் இழி நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இந்த நிலையில் இறைவன் எப்படி எம்மை நாடுவார். ஆகவே இவைகளைத் துறந்து உலக மாயையில் சிக்காது இறைவனுக்கு ஏற்புடையவர்களாக வாழ்வோமாக! இறைவனின் அன்புக்கு நாம் பாத்திரர்களாவோம்.

ம.அனுஷானந்தன், குருநகர்.

# நன்றி நவிலலும் ஆன்ம ஈடேற்ற பிரார்த்தனை அழைப்பும்

பிறப்பு 03 - 01 - 1934



இறப்பு 26 - 02 - 2006

வல்வெட்டித்துறை காட்டுவளவைச் சேர்ந்த

திருமதி

## மங்கையற்கரசி யோகீஸ்வரர்

26-02-2006 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத்தெய்வத்தின் மரணச்சடங்கில் பங்கெடுத்தவர்களுக்கும் தொலைபேசி மூலமும் அஞ்சல் மூலமும் இரங்கல் செய்தி தெரிவித்தவர்களுக்கும் எமது துயரில் பங்கெடுத்து ஆறுதல் வார்த்தை கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, நாளை (28-03-2006) செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு வல்வெட்டித்துறை, ஊறணி மடத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.30 மணியளவில் பருத்தித்துறையிலுள்ள எமது இல்லத்தில் நடைபெறும் ஆன்ம ஈடேற்றப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*59, ஐயனார் கலட்டி,*
*பருத்தித்துறை.*

(48574) (26.45)

-குடும்பத்தினர்.

### பொதுசன மாதாந்த உதவிப் பணம்

தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவின் மார்ச் மாதத்துக்குரிய பொதுசன மாதாந்த உதவிப் பணம் தற்போது அஞ்சலகங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது.

கொடிகாமம் அஞ்சலகத்திற்குட்பட்ட உப அஞ்சல் அலுவலகங்களை மிருசுவில், வரணி, மந்துவில், கச்சாய், விடத்தற்பளை ஆகியவற்றில் தற்போது இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருவதாகவும்- உதவிப்பணம் பெறுவோர் காலம் தாழ்த்தாது கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும்- அறிவிக்கப் பட்டுள்ளது. (எ-122)

### இறைச்சிக்காக பசுமாடு வெட்டுவதற்குத் தடை

ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் அனுமதி வழங்கப்பட்ட மாட்டிறைச்சிக்கடைகளில் இறைச்சிக்காக பசுமாடு வெட்டுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

இதனை மீறி பசுமாடு வெட்டப்பட்டு அவை விற்கப்படுமாயின் மாட்டிறைச்சிக்கடையினை நடத்துபவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மாட்டிறைச்சிக்கடைகளில் பசுமாடு வெட்டப்பட்டு அவற்றின் இறைச்சி விற்கப்படுவதாக பொது மக்கள் தெரிவித்த முறைப்பாட்டையடுத்தே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பிரதேச சபை உப அலுவலக பொறுப்பதிகாரி தெரிவித்தார். (எ-16)

### முறைசாராக் கல்விப் பிரிவில் பெண்களுக்கான மாலை நேரக் கணனிப் பயிற்சிநெறி

இடம்:- யா/ இராமநாதன் கல்லூரி - கணனிப்பிரிவு
ஆரம்பம்:-03-04-2006
விண்ணப்ப முடிவுதிகதி :-30-03-2006

விண்ணப்பப் படிவத்தை காரியாலயத்தில் பெற்று விண்ணப்பிக்கவும்.

தொ.பே.இல:021 222 7762

(48546)(26.45)

## எச்சரிக்கை

மக்களின் நம்பிக்கை வென்ற WATERTEC தயாரிப்புகளைப் போன்ற அதற்குச் சமமான அமைப்புக்களைக் கொண்ட போலி சின்க் டெப் வகைகள் தனி நபரினாலோ அல்லது ஒரு குழுவினராலோ இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுவதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது

இது தரம் குறைந்த போலி தயாரிப்புகளை விற்பனை செய்து லாபமீட்டும் திட்டமிட்ட மோசடியாகும்.

மேலே சுட்டிக்காட்டப்பட்ட போலியான தயாரிப்புகள் மலேசியாவில் தயாரிக்கப்பட்டவை அல்ல என்பதை பொது மக்களுக்கு அறியத் தருகின்றோம்.

இந்த தரம் குறைந்த பொருட்களை தயாரிக்கும் அல்லது இறக்குமதி செய்பவர்கள் தொடர்பாக தகவல் கொடுப்பவர்களுக்கு மலேசிய WATERTEC நிறுவனத்தின் மூலம் பரிசு வழங்கப்படுவதோடு மோசடிக்காரர்கள் மீது சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.

இந்த மோசடியை தவிர்ப்பது எவ்வாறு?
WATERTEC தயாரிப்புகளை வாங்கும் போது

WATERTEC
Simply Better

உண்மையான சின்னம் இருக்கிறதா என்று பாருங்கள்




செண்ட் அந்தனிஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டெட்
524: ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2324261-5, 2337283-5 ,பெக்ஸ்: 2446554

License No : 59445

# தமிழீழ வைப்பகம் 27.03.2006 திங்கள் முதல்

BANK OF TAMILEELAM

கிளிநொச்சி அரச அதிபர் செயலகத்திற்கு அருகில் பணியாற்றி வந்த கிளிநொச்சிக் கிளை, கரடிப் போக்கில் அமைந்துள்ள புதிய கட்டடத் தொகுதியில் கணனி மயப்படுத்தி, காலை 9 மணி தொடக்கம்,

நாச்சிக்குடா சந்தியிலுள்ள புதிய கட்டடத் தொகுதியில், முழங்காவில் கிளை முதன்மைக் கிளையாக தரம் உயர்த்தப்பட்டு நண்பகல் 12 மணி தொடக்கம்

## தன் பணியை வழங்கவுள்ளது என்பதை வழமையாளர்களுக்கு உவகையுடன் அறியத்தருகிறோம்.

★ உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தை ஒளியூட்ட,

* பிள்ளைகள் தேட்டம்,
* அமுதம்,
* உங்கள் விருப்பில் தமிழ்ப் பெயர் சூட்டப்படின் தமிழீழ வைப்பகத்தால் தமிழமுதம் தேட்டக் கணக்குத் தொடங்கி வழங்கல்.

★ பன்முகப்படுத்தப்பட்ட,

* வைப்புத்திட்டங்கள்,
* கடன் திட்டங்கள்,
* வைப்பகத்தின் ஏனைய பணிகள்.

(அ)(48523)(51.4526)

## தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்

# காரைநகருக்கான தனியான பிரதேச சபையை புத்தாண்டு முதல் இயக்குவதற்கு ஏற்பாடுகள்

ஊர்காவற்றுறை,மார்ச்27

காரைநகருக்கான தனியான பிரதேச சபையை எதிர்வரும் சித்திரைப்புத்தாண்டு முதல் இயக்குவதற்கான நடவடிக்கைகள் துரிதமாக நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக அதிகாரிகள் மட்டத்தில் இது தொடர்பான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் - கூறப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் காரைநகர் பிரதேசம் ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதியாக இருந்து வருகிறது.

தற்சமயம் ஊர்காவற்றுறை பிரதேச சபையின் இரண்டு உப அலுவலகங்கள் காரைநகர்ப் பகுதியில் செயற்பட்டுவருகின்றன. காரைநகர் வடக்கு மற்றும் காரைநகர் தெற்கு ஆகிய பகுதிகளில் இவை செயற்பட்டு வருகின்றன.

இவ்வாறு புதிதாக அமையவுள்ள பிரதேச சபையின் ஆளணி மற்றும் சொத்துக்களைப் பகிர்ந்தளிப்பது தொடர்பான வேலைகள் ஊர்காவற்றுறைப் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதற்கமைய ஊர்காவற்றுறை பிரதேச சபையின் சகல உப அலுவலகங்களினதும் சொத்துக்களை இருப்பெடுக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இவை நிறைவுபெற்றதும் ஊர்காவற்றுறைப் பிரதேச சபையில் இருந்து எவ்வளவு ஆளணியினர் மற்றும் சொத்துகளை பகிர்ந்தளிப்பது என்பது தீர்மானிக்கப்படும் என்று பிரதேச சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

காரைநகர் பிரதேசத்துக்கு தனியான உதவி அரசாங்க அதிபர் பணிமனை தனியாக நிறுவப்பட்டு செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-16)

## வீதி புனரமைப்பு

குருநகர், மார்ச் 27

யாழ். இராசாவின் தோட்டம் வீதி யாழ். மாநகரசபை வேலைப் பகுதியினரால் தற்போது செப்பனிடப்பட்டு வருகிறது.

முன்னைய புகையிரதக்கடவை அமைந்துள்ள இடத்தில் இருந்த பள்ளம் நிரவப்பட்டு இந்த வீதி புனரமைக்கப்பட்டுள்ளது. (எ-51)

## முதியோர் சங்கத்துக்கு புதிய நிர்வாகம் தெரிவு

காரைநகர், மார்ச்27

காரைநகர் மத்தி முதியோர் சங்கத்தின் மூன்றாவது வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த திங்கட்கிழமை காரை. மத்தி முதியோர் பகல் பராமரிப்பு நிலையத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் சங்கத்தின் புதிய தலைவராக அம்பலம் குணராசாவும் செயலாளராக வீரகத்தி கதிரமலையும் பொருளாளராக அ.சின்னத்துரையும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் காரை. மத்தி கிராம சேவையாளர் எஸ்.கே.சிவலிங்கம், சமூக சேவை அபிவிருத்தி உதவியாளர் எஸ்.சிவானந்தன் மற்றும் அறுபதிற்கும் அதிகமான முதியோர்கள் கலந்துகொண்டனர். (எ-73)

## யாழ். ஆயரின் இறைபணியைப் பாராட்டி வாழ்த்துப்பா கையளிப்பு

குருநகர்,மார்ச் 27

ஆயர் பணியில் 25ஆவது வருட வெள்ளிவிழாவைக் கொண்டாடும் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் இறைபணியைப் பாராட்டி சக்கோட்டை மக்கள் வாழ்த்துப்பா ஒன்றை யாழ். ஆயரிடம் நேரில் கையளித்துள்ளனர்.

அல்வாய் சக்கோட்டை புனித பிரான்சிஸ்கு சவேரியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாத்திருப்பலியைக் கடந்த 13ஆம் திகதி யாழ். ஆயரால் நிறைவேற்றப்பட்டது.

இந்த நிகழ்வில் வைத்து மேற்படி தேவாலயத்தின் பங்குச் சபையினர் சார்பில் இந்த வாழ்த்துப்பா வழங்கப்பட்டதுடன் தேவாலயப் பங்குத்தந்தை வண.பிதா எம்.பத்திநாதர் அடிகளாரால் பங்கு மக்கள் சார்பில் சிறு அன்பளிப்பு வழங்கப்பட்டது.

எதிர்வரும் ஜூலை மாதம் 30ஆம் திகதி யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தமது ஆயர் பணியின் 25ஆவது வருட நிறைவைப் பூர்த்திசெய்யவுள்ளார். (எ-51)



கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்தில் கடந்த மாதம் நடைபெற்ற தரம் ஒன்று மாணவர்களின் கால்கோள் விழாவில் பாடசாலை அதிபர் இ.இரவீந்திரன், தென்மராட்சி கல்வி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜே.ஏ.தேவராசா மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் தரம் ஒன்று மாணவர்களுடன் இணைந்து எடுத்துக்கொண்ட படம். (படம்: சாவகச்சேரிச் செய்தியாளர்)

## சமுர்த்தி வங்கிக்கு புதிய கட்டடம்

கோப்பாய்,மார்ச் 27

கோப்பாய் பிரதேசத்திற்குரிய சமுர்த்தி வங்கிக்குப் புதிய நிரந்தர கட்டடம் கோப்பாய் வடக்கு பிராமனோடையில் அமைக்கப்பெற்றுவருகிறது.

தற்போது இவ்வங்கி கோப்பாய் - மானிப்பாய் வீதியிலுள்ள தனியார் கட்டடத்தில் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (எ-72)




# நீர்வேலி மத்தி, வடக்குப் பகுதிகளில் இரவு வேளைகளில் திருடர் நடமாட்டம்

**மக்கள் நித்திரையின்றி விழிப்பு**

கோப்பாய், மார்ச் 27

நீர்வேலி மத்தி மற்றும் நீர்வேலி வடக்கு ஆகிய பகுதிகளில் கடந்த சில வாரங்களாக இரவுவேளைகளில் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் அப்பகுதியில் உள்ள வீடொன்றினுள் ஓடு பிரித்து உள் இறங்கிய திருடர்கள் வீட்டுக்காரர்கள் விழித்துக் கொண்டதையடுத்து தப்பியோடிவிட்டனர்.

மேலும் சில வீடுகளுக்குள் உள் நுழைய முற்பட்ட திருடர்கள் வீட்டுக்காரர்கள் விழிப்பினால் தப்பியோடிவிட்டனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இத்தகைய சம்பவங்களை அடுத்து இப்பகுதி மக்கள் இரவுவேளைகளில் நித்திரையின்றி விழித்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-72)

# தென்மராட்சி வலயத்தில் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு மாற்று ஏற்பாடு

தென்மராட்சி,மார்ச் 27

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள ஆங்கில பாட ஆசிரியர் பற்றக்குறையைப் போக்கும் வகையில் ஏனைய ஆசிரியர்களுக்கு ஆங்கில கல்விப் பயிற்சியினை வழங்க வலயக் கல்விப் பணிப்பாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

முதல் கட்டமாக ஆரம்பப் பிரிவு வகுப்புகளில் ஆங்கிலம் கற்பிக்கத் தகுதியுள்ள ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 30 ஆம் திகதி சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் பயிற்சி வகுப்புகள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் இந்தப் பயிற்சி வகுப்பினை ஆரம்பித்து வைத்தார்.

வலய ஆங்கிலப் பிரிவினர் இப்பயிற்சி வகுப்புகளை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## குருநகரில் வெள்ளியன்று சிலுவைப்பாதை

குருநகர்,மார்ச்27

குருநகரில் எதிர்வரும் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு பொதுச் சிலுவைப்பாதையும் திருப்பலியும் நடைபெறவுள்ளன.

இந்தச் சிலுவைப்பாதை குருநகர் தொடர்மாடியில் இருந்து ஆரம்பமாகி குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் அமைந்துள்ள வியாகுல மாதா கெபியில் நிறைவுபெறும். அதனைத் தொடர்ந்து திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். (எ-51)

# மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலய மைதானத்திற்கு காணி கொள்வனவு

தென்மராட்சி,மார்ச்27

மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்திற்கென 30 பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலைக்கு அருகில் - மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலுக்கு முன்பாக இந்தக் காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

காணி கொள்வனவுக்கான நிதியினை வெளிநாடுகளில் உள்ள பாடசாலையின் பழைய மாணவர்களும் அப்பகுதி பொது மக்களும் வழங்கியிருந்தனர்.

இதுவரை காலமும் பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய வீதியில் நடத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-117)

## வலுக்குறைந்த மின்சாரம் வழங்கப்படுவதாகப் புகார்

கோப்பாய்,மார்ச் 27

நீர்வேலி வடக்கு, கதிர்காம கோயிலடி, கேராளிவத்தை ஒழுங்கைப் பகுதி வீடுகளுக்கு கடந்த மூன்று மாதமாக வலுக்குறைந்த மின்சாரம் கிடைத்து வருவதாகக் கவலை தெரிவிக்கப்பட்டது.

இதனால், பல மின்சாதனங்கள் பழுதடைந்துள்ளதாகவும் மாணவர்களின் படிக்கும் நேரம் குறைவடைவதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் மகஜர் மூலம் கோரிக்கை விடுத்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் - அவர்கள் மேலும் கூறினர். (எ-72)

# கரவெட்டி மருந்தகங்களில் பரவலாக மாறுபட்ட விலையில் மருந்து விற்பனை

கரவெட்டி,மார்ச்27

கரவெட்டிப் பகுதியிலுள்ள மருந்தகங்களில் ஒரே வகையான மருந்துகள் வெவ்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுவதாகப் பாவனையாளர் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

கரவெட்டிப் பிரதேசத்திலுள்ள சில மருந்தகங்கள் மருந்துகளை நிர்ணயிக்கப்பட்ட விலையில் விற்பனை செய்வதில்லை என்றும் -

மாறுபட்ட விலைகளில் அவை விற்பனை செய்யப்படுவதுடன் விற்பனைப் பொருள்களுக்கான பற்றுச்சீட்டுகளும் வழங்கப்படுவதில்லை என்றும் விசனம் தெரிவிக்கப்படுகிறது. (எ-70-202)

# ஆஸ்பத்திரி விடுதியில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர் பயன்படுத்த உருக்கு 'லொக்கர்'

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ். மாவட்ட மருத்துவமனை விடுதிகளில் சிகிச்சை பெறும் நோயாளர்கள் பயன்படுத்துவதற்கு உருக்கு 'லொக்கர்'கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கென ஆயிரம் உருக்கு லொக்கர்கள் யாழ். சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

இவை மாவட்டத்திலுள்ள மருத்துவமனைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

இதுவரை காலமும் மரப்பலகையில் தயாரிக்கப்பட்ட 'லொக்கர்'களையே நோயாளர்கள் பயன்படுத்தி வந்தமை தெரிந்ததே. (எ-117)




செலிங்கோ ஆயுள் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ். கிளையின் வாடிக்கையாளர் திருமதி இராசு வெங்கிடலட்சுமி விபத்து ஒன்றில் பலியானதை அடுத்து அவருக்குரிய இழப்பீட்டுத்தொகையான 10 லட்சத்து 72 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை அண்மையில் அவரது கணவரிடம் கையளிக்கப்பட்டது. கூட்டுத்தாபனத்தின் யாழ். முதன்மைக் கிளையில் நடைபெற்ற இதுதொடர்பான நிகழ்வில் பிராந்திய முகாமையாளர் பா.நந்தகுமார் காசோலையைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். அருகில் விற்பனை நிறைவேற்று அதிகாரி அ.அசோக் காணப்படுகின்றார். (எ-203)

## உலக உணவுத்திட்டத்தின் கீழ் மயானங்கள் புனரமைப்பு

சாவகச்சேரி பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உலக உணவுத்திட்டத்தின் கீழ், இந்த அண்டு பொது மயானங்கள், மண் வீதிகள் என்பன புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. மேற்படி வேலைத் திட்டங்களின் செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் பிரதேச சபையின் தலைமையகத்தின் சபையின் செயலாளர் கு.ந.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் சபையின் பிரதம லிகிதர் எஸ்.சிவராசா, தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்-

உலக உணவுத்திட்டத்தின் மாவட்ட இணைப்பாளர் எஸ்.குலதுங்க இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு உலக உணவுத் திட்ட வேலைகளின் செயற்பாடுகள் குறித்து விளக்கம் அளித்தார். (எ-122)

## குண்டும் குழியுமான வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

சங்கரத்தை, சின்னம்மா பாடசாலையில் இருந்து சங்கானை தேவாலய வீதி எல்லை வரை செல்லும் வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. நீண்ட காலமாக எதுவித திருத்த வேலைகளையும் மேற்கொள்ளப்படாததையடுத்து சேதமடைந்துள்ள இந்த வீதியூடாகப் பயணிக்கும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை மாணவர்கள், விவசாயிகள் மற்றும் வாகன உரிமையாளர்கள் இந்த வீதியைப் பயன்படுத்துவதால் சம்பந்தப்பட்டவர்கள் இது விடயத்தில் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-29)


### வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபல்யமானவர்.

சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 222 2459
(36228) (26.19.45)

### காணி விற்பனைக்கு

நீர்வேலி வடக்கு, அரசகேசரிப் பிள்ளையார் கோயிலுக்கு முன்னால் 200 மீற்றர் தூரத்தில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: **திருமதி லி.ரகுநாதன்,**
மாத்தளன் - முள்ளிவாய்க்கால்,
முல்லைத்தீவு,
(சி/48551) (26.19.45)

### ஜெனிக்கா அழகுக்கலை நிலையம்

- முக அழகுக்கலை (facial)
- Modal Icing அனைத்துவித Icing வகை
- Hear Style
- அனைத்துவித சேலை Works
- Cookery
- பூச்செண்டுகள் தயாரித்தல்
- தையல் அனைத்தும் கற்றுக்கொள்ள சிறந்த ஆசிரியர்களால் பயிற்றுவிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.

புதிய வகுப்புகள் 01-04-2006ஆரம்பம்.
நாடவேண்டியது:
**077488184 , 0776184412**
பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(48583) (26.19.45)


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

**IRQUE தகவல் தொழில்நுட்ப வகுப்புகள்/ பரீட்சைகள்**

யாழ். பல்கலைக்கழக கணனி அலகினால் IRQUE செயற்றிட்டத்தின் கீழ் வாரஇறுதி வகுப்புகளாக நடத்தப்பட்டுக் கொண்டிருந்த கலை மற்றும் முகாமைத்துவ வணிக பீட மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்ப வகுப்புகள் எதிர்வரும் 02.04.2006 ஞாயிறு முற்பகல் 9 மணிக்கு கணனி அலகில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கணனி அலகினால் IRQUE செயற்றிட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட "Resource Book in Information. Technology" பகுதி 1 புத்தகம் பெற்றுக்கொண்டவர்கள் பகுதி 2 புத்தகத்தை எதிர்வரும் 30.03.2006 முதல் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ். பல்கலைக்கழக கணனி அலகினால் IRQUE செயற்றிட்டத்தின் கீழ் நடத்தப்படும் தகவல் தொழில்நுட்ப எழுத்துப் பரீட்சைகள் எதிர்வரும் 15.04.2006 சனி முற்பகல் 10 மணிக்கு பகுதி 1 உம், பிற்பகல் ஒரு மணிக்கு பகுதி 2 உம் இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும்.

**- Director**
**IRQUE Project**
**University of Jaffna.**
24.03.2006. (C/48544)(26.19.45)

### ஒத்து மாறல்

வவுனியா மாவட்டத்தில் பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்ற ஒருவர் யாழ்ப்பாண மாவட்டத்தில் பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்ற ஒருவருடன் ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்பு: 077 6345313
077 6544522
(48553)(26.19.45)

### மறைந்தும் மறவாத நினைவலைகள்

3 ஆம் மாதம் | 2ஆம் ஆண்டு



**முருகேசபிள்ளை ஒப்பிலாமணி**
[ஓய்வு பெற்ற கிராமசேவையாளர்]
அமாவாசைத்திதி

மலர்வு 19.10.1929 — உதிர்வு 30.12.2005



**திருமதி புவனேஸ்வரி ஒப்பிலாமணி**
அமரபக்க திரயோதசித் திதி

மலர்வு 07.01.1932 — உதிர்வு 18.03.2004

உயிர்மை குன்றா நினைவுகளில்
உருகி உருகிக் கரைவதெல்லாம்
பெருகும் கண்ணீர்ப் பூக்கொண்டு
பெற்ற பொற்பாதங்கள் அர்ச்சனைக்கே

556, கஸ்தூரியார்வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
சுமதி ஒப்பிலாமணி
(மகள்)

### கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் கடமையாற்றும்
**திரு.விநாசித்தம்பி ஜெகதீஸ்வரன் (பாடசாலை ஊழியர்)**
அவர்களின் தந்தை

**சின்னப்பொடி விநாசித்தம்பி**

அவர்கள் 23-03-2006 வியாழக்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
**யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி,**
பருத்தித்துறை.
(48560) (26.19.45)

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 08 - 02 - 1916



மறைவு 25 - 02 - 2006

திருமதி
**இரத்தினம் மகாலெச்சுமி**
(முறிவு நெரிவு வைத்தியர்)

25.02.2006 அன்று இறைபதம் எய்திய எமது குடும்ப ஒளிவிளக்கின் மரணச் செய்திகேட்டு உதவிகள் பல புரிந்தும் ஆறுதல் கூறியும் தெலைபேசிகள் மூலம் அனுதாபங்கள் தெரிவித்தோருக்கும் கண்ணீா அஞ்சலி வெளியிட்டும் மலர் வளையங்கள் வைத்தும் தமது துயரங்களைப் பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம். அத்துடன், இன்று (27.03.2006) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

45/4, கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (48582) (39.26.19.45) -குடும்பத்தினர்.


## COMPUTER COURSES

**IIS CITY CAMPUS**

New Batches Start on :

01/04/2006 (Weekend Batch)

03/04/2006 (Weekday Batch)

at 10.00 A.M.

IIS CITY CAMPUS
# 200, Sivan pannai Road
(Near Vaitheeswara Junction)
Jaffna
Tel : 021 222 8060
Fsx : 021 222 6933
Email : iiscc@sltnet.lk

### Diploma in Software Engineering

- Introduction to Information Technology
- System Analysis and Design
- Data Analysis and Database Design
- Software Engineering Techniques
- Software Engineering Implementation Project
- Introduction to Programming
- Visual Programming

### Diploma in Internet Engineering

- Introduction to Information Technology
- Multimedia and Internet Technology
- Data Communications and Networking
- Advanced Website Management
- Internet Engineering Implementation Project
- Internet Science
- Website Management

### Diploma in Business Information Systems (Accounting)

- Introduction to Information Technology
- Skills for Manual Accounting Systems
- Financial Accounting and Quantitative Methods
- Fundamentals of Financial Management
- Computerized Accounting Packages
  *ACCPAC, Quick Book Pro, Tally & TATA EX - Next Generation*
- Business Information Systems Implementation Project

### Diploma in Hardware Engineering

- Introduction to Information Technology
- Computer Platforms
- Computer Networking
- Multimedia
- Hardware Engineering Implementation Project
- Troubleshooting PC Hardware
- Troubleshooting Software
- Preventive Maintenance

**கற்கைநெறிகளின் சிறப்புகள் :**

- முழுமையான சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்
- மேற்படி கற்கைநெறிகளில் இணைந்து கொள்ளும் மாணவர்கள் HND கற்கைநெறிக்கான பாடவிதான விலக்கைப் பெற்றுக்கொள்வதுடன் கட்டணச் சலுகையும் பெற்றுக்கொள்ளமுடியும்
- முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தின் பிரயோகம்
- முழுமையான பிரயோகக்கல்வியினை அடிப்படையாகக் கொண்ட கற்பித்தல் முறைமை
- ஒரு பிரிவில் 20 மாணவர்களுக்கு மட்டுமேயான அனுமதி
- தகுதியும் அனுபவமும் வாய்ந்த விரிவுரையாளர்களின் ஒருங்கிணைந்த சேவை

# தந்தையும் 2 புதல்விகளும் அகதியாக வவுனியாவில் இருந்து கரூர் வருகை


முத்துராஜாவையும் அவரது இரு புதல்விகளையும் இராமேஸ்வரம் பொலீஸார் விசாரணை செய்கின்றனர்.

இராமேஸ்வரம்,மார்ச்27

இலங்கை, வவுனியாவைச் சேர்ந்த தந்தை ஒருவரும் அவரது இரு புதல்விகளும் அங்கிருந்து வெளியேறி தமிழகத்துக்கு அகதிகளாக வந்து சேர்ந்துள்ளனர்.

வவுனியாவைச் சேர்ந்த முத்துராஜா (வயது 58) அவரது மகள் சுதா (வயது 21), மோகனா (வயது 12) ஆகியோரே கடந்த வெள்ளிக்கிழமை இரவு மன்னார் பேசாலைக் கடற்பரப்பில் இருந்து புறப்பட்டு நள்ளிரவு இராமேஸ்வரம் சோரன்கோட்டை கடற்பகுதியில் கடற்கரையில் வந்து இறங்கினர். பின்னர் ஓட்டோ ஒன்றில் இராமேஸ்வரம் பொலீஸ் நிலையத்துக்கு வந்த இவர்களைப் பொலீஸார் விசாரணை செய்தனர்.

1990ஆம் ஆண்டு கரூர் முகாமில் குடும்பத்துடன் அகதியாகத் தங்கி இருந்தவர் முத்துராஜா. பின்னர் 2004இல் மீண்டும் இலங்கை திரும்பிய இவரது குடும்பம் தற்போது மறுபடியும் தமிழகத்துக்கு வந்துசேர்ந்துள்ளது. (ஐ)

# தமிழில் குடமுழுக்கு நடத்தக்கோரி உண்ணாவிரதம் இருந்தோர் கைது!

## தமிழகம் கரூர் பசுபதீஸ்வரர் ஆலயத்தில்

சென்னை,மார்ச்27

தமிழகத்தில் கரூர் மாவட்டம் பசுபதீஸ்வரர் கோயிலில் தமிழில் குடமுழுக்கு நடத்தக்கோரி கோயிலுக்குள் வெள்ளிக்கிழமை சாகும்வரை உண்ணாவிரதம் தொடங்கிய சிவனடியார்கள் 13 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

கரூர் பசுபதீஸ்வரர் கோயில் குட முழுக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி நடைபெறுகிறது. குடமுழுக்குப் பூஜைகளைத் தமிழில் நடத்த வேண்டுமெனக் கோரி சிவனடியார்கள், தமிழ் ஆர்வலர்கள் ஆகியோர் அங்கு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

தமிழில் குடமுழுக்கு நடத்தவேண் டும். ஆகம விதிமுறைகளை மீறிய அர்ச்சர்களுக்குப் பதிலாக பக்தர்களே சுவாமியைத் தொட்டு தரிசனம் செய்ய அனுமதிக்கவேண்டும் என்பன உட்படப் பல கோரிக்கைகளை வலியுறுத்தி அமைச்சர், இந்துசமய அறநிலையத்துறை ஆணையர், இணை ஆணையர் ஆகியோருக்கு மனுக்கள் அனுப்பப்பட்டுள்ளன.

'உண்ணாவிரதம் தொடர்ந்தால், கைது செய்யப்படுவீர்கள்' என எச்சரித்தும் உண்ணா விரதத்தைச் சிவனடியார்கள் கைவிடவில்லை. அதனால் 13 சிவனடியார்களையும் பொலீஸார் கைதுசெய்தனர். (ஐ)

# மதம் மாறியவருக்கு இரக்கம் காட்ட பாப்பரசர் வேண்டுகோள்





வத்திக்கான்,மார்ச்27

கிறிஸ்தவ மதத்தைத் தழுவியதால் மரண தண்டனையை எதிர்நோக்கியிருப்பதாகக் கருதப்படும் ஆப்கானிய பிரஜையான அப்துல் ரஹ்மானுக்கு இரக்கம் காட்டுமாறு பாப்பரசர் 16ஆவது பெனடிக்ட் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதியைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

அப்துல் ரஹ்மான் மதத் துரோகம் புரிந்துள்ளார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

பாப்பரசர் ஆப்கானிஸ்தான் அதிபருக்கு விடுத்துள்ள ஒரு வேண்டுகோளில் அந்த நாட்டு அரசியல் சட்டத்தில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள மனித உரிமைகளை கௌரவிக்கும்படியும் வலியுறுத்தியுள்ளார்.

அப்துல் ரஹ்மானின் விவகாரம் தொடர்பாக ஆலோசிக்கப்பட்டுவருவதாகவும் அவர் விரைவில் விடுவிக்கப்படலாம் என்றும் ஆப்கான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ரஹ்மான் இஸ்லாத்தை புறக்கணித்தார் என்ற குற்றச்சாட்டின்மீது விசாரிக்கப்பட்டு வருவதாகவும் சட்டத்தின்படி அவருக்கு மரண தண்னை விதிக்கப்படலாம் என்றும் முன்னர் வெளியான செய்திகள் கூறின. பாப்பரசரின் வேண்டுகோள் வத்திக்கான் அரசின் செயலாளர் கர்தினால் அஞ்சலோ சொடனோவினால் கடித ரூபத்தில் ஆப்கான் அதிபருக்கு அனுப்பியுள்ளார். (ப)

# பறவைக்காய்ச்சலுக்கு பலியான 11 ஆவது சீனப் பெண்

பீஜிங்,மார்ச்27

சீனாவில் பறவைக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டு உயிரிழந்தவர்களில் 11ஆவது நபர் என்ற வகையில் 29 வயதான பெண் ஒருவர் மரணமாகியுள்ளார் என்று சீன செய்தி ஊடகங்கள் அறிவித்துள்ளன.

'லீ' என்றுமட்டுமே அறியப்பட்ட அப்பெண் ஷங்காய்க்கு இடம்மாறி வந்தவர். 'எச்5என்1' வைரசினால் பாதிக்கப்பட்ட இப்பெண் கடந்த செவ்வாய்க்கிழமை மரணமானதாக ஷின்ஹூவா செய்தி அமைப்பு அறிவித்தது.

இப்பெண் எவ்வாறு தொற்றுக்குள்ளானார், அவர் எங்கிருந்து வந்தார், அவருடைய முழுப் பெயர் என்னவென்ற விவரங்கள் கிடைக்கவில்லை. (ப)

## உலக அரங்கில்

# எம்.பிக்களின் 'ஆதாயம் தரும் பதவி' விவகாரம்: இந்திய மத்திய அரசு கட்சிகளோடு ஆலோசனை

நாடாளுமன்றம் மற்றும் சட்டப் பேரவை உறுப்பினர்கள் 'ஆதாயம் தரும்' இன்னொரு பதவியை வகிப்பதால் அவர்களது எம்.பி. மற்றும் எம்.எல்.ஏ. பதவிகளுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. எனவே, அப்பிரச்சினையை சமாளிக்க முழுமையானதொரு சட்டத்தை இயற்ற வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. இந் நிலையில்,அது தொடர்பாக முக்கிய அரசியல் கட்சிகளுடன் ஆலோசனையைத் தொடங்கியுள்ளது இந்திய மத்தியஅரசு.

இப் பிரச்சினை தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங்கை நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் பிரியரஞ்சன் தாஸ் முன்ஷி சனிக்கிழமை சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

எம்.பி. அல்லது எம்.எல்.ஏக்கள் அப்பதவி தவிர, ஆதாயம் தரும் வேறு பதவி எதையும் வகிக்கக் கூடாது. அவ்வாறு வகித்தால் அவர் எம்.பி.யாகவோ, எம்.எல்.ஏயாகவோ இருக்கும் தகுதியை இழந்துவிடுகிறார் என்று சட்டம் கூறுகிறது. அதன் காரணமாக ஏற்கெனவே மாநிலங்களவை உறுப்பினர் ஜெயா பச்சன் எம்.பி பதவியை இழந்துவிட்டார். அதே சிக்கல் காரணமாக சோனியா காந்தியும் எம்.பி.மற்றும் தேசிய ஆலோசனைக் குழுத் தலைவர் பதவி என்பவற்றை ராஜினாமாச் செய்துள்ளார்.

மக்களவைத் தலைவர் சோம்நாத் சட்டர்ஜி உட்பட மேலும் பல எம்.பிக்கள், எம்.எல்.ஏக்கள் தொடர்பாக ஏராளமான புகார்கள் தேர்தல் ஆணையகத்துக்கு வந்துள்ளன. என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# அமெரிக்க தாக்குதல் பற்றி சதாமுக்கு ரஷ்யா உளவுத் தகவல் வழங்கியதா?

வாஷிங்ரன்,மார்ச்27

அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படைகள் 2003 ஆம் ஆண்டு ஈராக் மீது போர் தொடுத்த போது அதுபற்றிய தகவலை சதாம் ஹுசேய்னுக்கு ரஷ்யா வழங்கியதா?

இவ்வாறான தகவல் ஒன்றை அமெரிக்கா இராணுவத் தலைமையகமான பென்டகன் வெளியிட்டிருக்கிறது.

அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் இதுகுறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

கடந்த 2003 ஆம் ஆண்டு ஈராக் மீது அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படைகள் போர் தொடுத்தன. இதில் அமெரிக்க படைவீரர்கள் எந்த இடத்தில் தாக்குதல் நடத்தப் போகின்றனர், எந்த வழியாக அவர்கள் செல்கின்றனர், போன்ற தகவல்களை அதிபர் சதாம்ஹுசேய்னுக்கு ரஷ்யா வழங்கியுள்ளது. அமெரிக்க இராணுவ வட்டாரங்களுடன் ரஷ்யாவுக்கு தொடர்பு உள்ளது. இதன் மூலம் தகவல்களை திரட்டி, ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் உள்ள ஈராக்கின் தூதரக அதிகாரிக்கு ரஷ்யா வழங்கியுள்ளது.

முந்திய ஈராக் அரசின் முக்கிய ஆவணங்களை அமெரிக்க படையினர் கைப்பற்றியுள்ளனர். அதில் உள்ள இரண்டு ஆவணங்கள் மூலம் இந்த உண்மை தெரியவந்துள்ளது. ஈராக் தலைநகரைச் சுற்றி குண்டுகளை வீசி மக்களைப் பீதியடையச் செய்து வெளியேற்ற அமெரிக்கா திட்டமிட்டிருந்த தகவல்களும் சதாம் ஹுசேய்னுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பென்டகனின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் பென்டகனின் தகவலை ரஷ்யா அடியோடு மறுத்துள்ளது. (ஐ)

# விடுவிக்கப்பட்ட கனேடியர்கள் நாடு திரும்புகிறார்கள்



பக்தாத், மார்ச் 27

ஈராக்கில் பணயம் வைக்கப்பட்டிருந்து பல்தேச படைகளினால் விடுவிக்கப்பட்ட கனேடிய அமைதிப் பணியாளர்கள் இருவரும் தம் தாயகத்துக்கு புறப்பட்டுச்சென்றுள்ளார்கள்.

32 வயதான ஹார்மீட் சிங் சோடன், 41 வயதான ஜேம்ஸ் லோனி ஆகிய இரு கனேடியர்களும் 74வயதான ஒரு பிரிட்ஷ் பிரஜையும் சுமார் 4 மாதங்களின் பின் ஒரு வீட்டிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

கிறிஸ்தவ அமைப்பான குழுவைச் சேர்ந்த இவர்கள் ஈராக்கில் அமைதி ஏற்படுவதற்காகப் பணியாற்றிவந்ததாகக் கூறியுள்ளார்கள். (ப)

# 9,200 கிலோமீற்றர் தூரம் விமானத்தில் பறந்தார் பிளேயர்

மெல்பேர்ன், மார்ச் 27

ஐரோப்பாவின் பெல்ஜியம் நாட்டில் உள்ள பிரஸ்ஸல்ஸ் நகரத்தில் இருந்து புறப்பட்டு, வழியில் எங்கும் நிற்காமல், 9, 200 (வான்) கிலோ மீற்றர் தூரம் விமானத்தில் பறந்து, ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரத்துக்கு வந்து சேர்ந்து உலக சாதனை படைத்துள்ளார் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர்.

பிரஸ்ஸல்ஸ் விமான நிலையத்தில் 138 மெட்ரிக் தொன் எரிபொருளை நிரப்பிக்கொண்டு புறப்பட்ட அந்த விமானம் 18 மணி நேரம் 45 நிமிடங்களில் மெல்பேர்ன் வந்து சேர்ந்தது.

பிரதமர் பிளேயர் அவரது மனைவி செர்ரி பிளேயர், அரச அதிகாரிகள், பத்திரிகையாளர்கள், விமான ஊழியர்கள் 12 பேர், 4 விமானிகள் உட்பட 50பேர் பயணம் செய்த அந்த 'போயிங் 777' வகை விமானம் பிரிட்டிஷ் 'ஏயர்வேய்ஸ்' நிறுவனத்துக்குச் சொந்தமானது. 280 பேர் பயணம் செய்யக்கூடிய அந்த விமானத்தில் 50 பேரே பயணம் செய்ததால் குறைந்த எடை காரணமாக வழியில் எங்கும் நிற்க வேண்டிய - எரிபொருள் நிரப்ப வேண்டிய - அவசியம் ஏற்படாமல் 9, 200 கி.மீ. தொலைவு பறக்க முடிந்துள்ளது.

இத் தகவலை விமானத்தின் பைலட் ராட் மிட்செல் தெரிவித்தார்.

இதுவரை, சிங்கப்பூரில் இருந்து விமானம் புறப்பட்டு, வழியில் எங்கும் நிற்காமல் 8,200 (வான்) கிலோ மீற்றர் தூரம் பறந்து அமெரிக்காவின் நியூயோர்க் நகரத்துக்கு வந்து சேர்ந்ததுதான் சாதனையாக இருந்துவந்தது. 'சிங்கப்பூர் எயார்லைன்' விமானம் அச்சாதனையை நிகழ்த்தியிருந்தது. (ஐ)

# செவ்வாய்க்கிரகத்தின் படம் அமெ.விண்கலம் அனுப்பியது

லொஸ்ஏஞ்சல்ஸ், மார்ச் 27

சமீபத்தில் அமெரிக்கா அனுப்பிய விண்வெளி ஆராய்ச்சி விண்கலம், தனது முதல் புகைப்படமாக, செவ்வாய்க் கிரகத்தை புகைப்படம் எடுத்து அனுப்பியுள்ளது.

மார்ச் 10ஆம் திகதி விண்வெளிக்கு ஏவப்பட்ட இந்த விண்கலம் வியாழக்கிழமை அனுப்பியுள்ள முதல் புகைப்படம் இது. கடல் மட்டத்தில் இருந்து 2,490 கிலோமீட்டர் உயரத்தில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது என்று நாசா விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

புகைப்படம் எடுக்கப்பட்ட பகுதியில் மலைகளும், பள்ளத்தாக்குகளும் இருப்பது போல் தெரிவதாகவும் அவீர்கள் கூறுகின்றனர்.

தற்போது நீள்வட்டப் பாதையில் சுற்றி வரும் விண்கலம், சில நாள்களில் சரியான வட்டப்பாதைக்குள் வந்து இன்னும் பல கோணங்களில் அருகிலிருந்து புகைப்படங்களை எடுத்து அனுப்பும் என்கின்றனர் விஞ்ஞானிகள். (ஐ)

# சட்டிஷ்கரில் நிலக்கண்ணியில் சிக்கி 13 பேர் பலி!

புதுடில்லி,மார்ச்27

இந்தியாவின் மத்திய மாநிலமான சட்டிஷ்கரில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் நடத்திய ஒரு நிலக்கண்ணித் தாக்குதலில் 13 சிவிலியன்கள் உயிரிழந்தனர்.

ஹங்கர் மாவட்டத்தில் வர்த்தகர்கள் பயணம் செய்துகொண்டிருந்த ஜீப் வண்டி ஒன்றினை இலக்குவைத்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது என்று பொலீஸார் தெரிவித்தனர். (ஐ)

# மாணவரின் ஜனநாயக உரிமைகளை ஆயுதமுனையில் அடக்க நினைத்தால் விளைவுகள் விபரீதமாகும்

## கஜேந்திரன் எம்.பி.காட்டமான அறிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்27

மாணவரின் ஜனநாயக உரிமைகளை ஆயுத முனையில் அடக்க நினைத்தால் விளைவுகள் விபரீதமாகும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன்.

யாழ். உயர்தொழில் நுட்பநிறுவனத்துள் புகுந்த படையினர், நிறுவனத்தின் சொத்துக்களைச் சேதப்படுத்தியதையும் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியதையும் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே கஜேந்திரன் எம்.பி. இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில், கடந்த வெள்ளிக்கிழமை காலை மேற்படி நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் அனைவரும் தியாக தீபம் அன்னை பூபதியின் நினைவு நிகழ்வுகளை அமைதியான முறையில் நடத்தினர்.

நிகழ்வின் முடிவில் தேசியக் கொடியினை இறக்கிவிட்டு அவர்கள் தமது கற்றல் நடவடிக்கைகளைத் தொடர்ந்தபோது திடீரென நிறுவனத்தினுள் புகுந்த நூற்றுக்கும் அதிகமான படையினர் நிறுவனத்தினை சுற்றிவளைத்துள்ளனர்.

அவ்வேளையில் விடயமறிந்த போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் அவ் விடத்திற்கு வந்தனர். எனினும், படையினர் கல்வி நிறுவனத்தினுள் அத்துமீறி நுழைந்து மாணவர் ஒன்றியத் தலைவர் சுகந்தனையும் ஏனைய மாணவர்களையும் துப்பாக்கிப் பிடிகள், கொட்டன்கள் கொண்டு சப்பாத்துக் கால்களாலும் காட்டுமிராண்டித் தனமாகத் தாக்கியுள்ளனர்.

அதேவேளை,

இங்குள்ள அலுவலகக் கண்ணாடிகளை எல்லாம் அடித்து நொறுக்கினர். குறிப்பாக கல்வி நிறுவன அதிபருடைய அலுவலகக் கண்ணாடிகளும் அடித்து நொறுக்கப்பட்டுள்ளதுடன் அதிபர், ஆசிரியர்களும் மிரட்டப்பட்டுள்ளனர். மாணவிகள் கூட இராணுவத்தினரால் தாக்கப்பட்டுள்ளனர்.

511ஆவது படைப்பிரிவிலிருந்து வந்த இராணுவத்தினரே இந்த வெறியாட்டத்தினை நிகழ்த்தியுள்ளனர். இச்சம்பவதினை நான் மிக வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

மாணவர்கள் மீதான வெறியாட்டம் உடன் நிறுத்தப்பட வேண்டும். கல்வி நிறுவனத்தினுள் அத்துமீறி நுழைந்த படையதிகாரிகளும் ஏனைய காடையர்களும் உடன் கைது செய்யப்படவேண்டும். இல்லையேல் மாணவர்கள் வன்முறையில் ஈடுபடும் நிலையும் அதனால் மீண்டும் போர் மூளுவதும் தவிர்க்க முடியாததாகும் - என்றுள்ளது. (எ)

## தம்பாட்டியில் இன்று கலைஞர் சந்திப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்27

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையினால் விரைவில் நடத்தப்படவுள்ள தேசிய கலை இலக்கியப் பெருவிழா தொடர்பான கலைஞர் சந்திப்பு இன்று மு.ப. 10 மணிக்கு ஊர்காவற்றுறை, தம்பாட்டி காந்திஜி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

கலை, இலக்கியப் பெருவிழாவில் பிரதேச மட்டக் கலைநிகழ்வுகளை இடம்பெறச் செய்வது தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கலைஞர் சந்திப்பில், ஊர்காவற்றுறை பிரதேச கலாசார உத்தியோகத்தர் மற்றும் கலாசார அபிவிருத்தி உதவியாளர் ஆகியோர் பங்குபற்றுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ)

## ஆஸ்பத்திரிச் சுற்றாடல் மாணவர்களால் சிரமதானம்

கோப்பாய், மார்ச் 27

கோப்பாய் சுற்றயல்கூறு மருத்துவமனை சுற்றாடல் கடந்த வாரமுற்பகுதியில் கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய மாணவர்களால் சிரமதான அடிப்படையில் துப்புரவு செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் தரம் 9 ஆம், 10 ஆம், 11 ஆம் வகுப்புகளில் கற்கும் மாணவர்களும் ஆசிரியர்களும் பங்கேற்றனர். (எ-72)


### ஆறாத நினைவில் ஆறாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 01 - 06 - 1959



உதிர்வு 02 - 04 - 2000

திருமதி தெய்வேந்திரன் சத்தியகலா (கலா)

திதி: திரயோதசி

அம்மா ஆண்டுகள் ஆறு கடந்தும்
ஆறவில்லை எம் துயரம்
நித்தமும் உங்கள் நினைவில்
நெஞ்சுருகி வாழ்கின்றோம்...

(48553)
(26-54-11-45)

'கலா பவனம்'
64, செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

கணவர், பிள்ளைகள்,
சகோதரர்கள், மருமகன்
அற்புத ஜெயம் (G.S.) குடும்பம்.






25.03.2006 ஆம் திகதி சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி எண்கள் சுப்பர் எண்

05 07 35 68 04

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 300967582 இலிருந்து 301003789

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 2,46,66,500/- வெல்லப்பட்டுள்ளது

| வெற்றி எண்கள் | வெற்றி வெற்றியாளர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 01 | 2,46,66,550/- | 2,46,66,550/- |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 29 | 5,000/- | 1,45,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 434 | 1,000/- | 4,34,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,431 | 500/- | 7,15,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 21,091 | 40/- | 8,43,640/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 20,005 | 20/- | 4,00,100/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,99,735 | 10/- | 29,97,350/- |
| மொத்தம் | | | 3,12,02,140/- |
| [illegible] | 5 | 1,00,000/- | 6,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,42,732 | - | 3,18,02,140/- |

இந்த புதன்கிழமை
சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 20,00,000/-

| | |
|---|---|
| [illegible] | 300993644-4-99 |
| [illegible] | 300997742-7-?? |
| [illegible] | 300988624-1-99 |
| [illegible] | 300989444-1-99 |
| [illegible] | 301021826-3-99 |





## இன்றும் நாளையும்



அருட்தந்தை
போல் ரொபின்சன் வழங்கும்

### தவக்கால தியானமும் குணமாக்கல் வழிபாடும்



- இன்று திங்கள் மாலை 6-10மணி வரை கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயம்.
- நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30-12 மணிவரை குருநகர் புனித யாகப்பர் ஆலயம்.
- செவ்வாய் மாலை 6-10 மணி வரை நவாலி புனித பேதுரு ஆலயம்.

பாவ விடுதலை பெற்று நிறைவாழ்வு கண்டு அமைதிபெற அனைவரையும் அழைக்கின்றோம்.

இறைதியான குழுவினர். (48593) (54-11-45) - ஆயர் இல்லம் யாழ்ப்பாணம்.



### விற்பனையாளர்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு விற்பனையாளர்கள் (ஆண்) தேவை.
(வயது18 -25 இடை யில்)
தொடர்பு: ஐங்கரன் மோட்டோர்ஸ்
சந்தைமுன்பாக, மானிப்பாய்.
தொ.பே.: 222 5412 (48587)



### வெள்ளிவிழாக் காணும் தம்பதியரை வாழ்த்துகின்றோம்



இன்று (27.03.2006) திங்கட்கிழமை இனிய இல்லறத்தில் இணைந்து வெள்ளிவிழாக் காணும்
திரு. திருமதி
கருணாநாயகம்
பானுமதி
தம்பதியருக்கு மனம் நிறைந்த வாழ்த்துக்கள்

அன்னையாய்த் தந்தையாய்
அன்புக்கோர் உடன் பிறப்பாய்
ஆதரவுத் திருவுருவாய்
எங்களுயிர் வளர்த்தெடுத்த
அக்காவும் அத்தானும்

இனிய இல்லறத்தில்
இருபத்து ஐந்தாண்டில்
ஈருடலும் ஒருயிராய்
நூறாண்டு வாழ்கவென
வாழ்த்துகின்றோம். வாழியவே!

என்றும் அன்புடன்
சகோதர, சகோதரிகள், மைத்துனி,
மைத்துனர்கள், மருமகள், பெறாமக்கள்.

நி.முகவரி:
மாவிட்டபுரம் வீதி,
கீரிமலை.

(சி-48559)
(54-11-45)

த.முகவரி:
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.



### பாராட்டி வாழ்த்துகிறோம்



திரு. அம்பலம்
இரவீந்திரதாசன் J.P.

நல்லூர் பிரதேச செயலகத்தின் மகா சங்கத்தின் உபதலைவரும் திருநெல்வேலி சமுர்த்தி வங்கி உபதலைவரும் நீராவியடி கிராம அபிவிருத்திச் சங்க முன்னாள் செயலாளரும், யா.ப.நோ.கூ. சங்கம் கிளை J/5A, J/5B ஆகியவற்றின் முன்னாள் கிளைக்குழுத் தலைவருமாகிய அம்பலம் இரவீந்திரதாசன் (J.P.) அவர்கள் 06.03.2006 அன்று யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் அகில இலங்கை முழுவதுக்குமான சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதையிட்டு கொண்டலடி விநாயகர் நிர்வாக பரிபாலன சபையினர் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றனர். அவரின் பொதுச் சேவை தொடர எல்லாம் வல்ல விநாயகர் அருள்பாலிப்பார்.

(48586)
(54-11-45)

கொண்டலடி விநாயகர்
ஆலய பரிபாலன நிர்வாகத்தினர்.



### பாராட்டி வாழ்த்துகின்றோம்

2ஆம் குறுக்கு வீதி, கச்சாய் றோட்,
சாவகச்சேரியைச் சேர்ந்த
திரு.கனகசபை பாலசுந்தரம் J.P.
(அகில இலங்கை சமாதான நீதிவான்)



கடந்த 06-02-2006 அன்று யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் இளைப்பாறிய அரசாங்க எழுது வினைஞரும், சத்திய மொழி பெயர்ப்பாளரும் தமிழ்- ஆங்கில தட்டெழுத்தாளரும், தற்போதைய எமது ஆங்கில ஆசானும் முன்னாள் பகுதி நேர ஆங்கில ஆசிரியரும், சாரதா சனசமூக நிலையப் பொருளாளரும், சிறந்த சமூக சேவையாளருமாவார்.

இவர் ஸ்ரீ மீனாட்சி அம்பாளின் அருளால் மேலும் பல பட்டங்கள், பதவிகள் பெற்று வளமோடு நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
சங்கத்தானை வாழ் மாணவர் சமூகம்.

(48594)
(54-11-45)



### 3 ஆம் ஆண்டு நினைவில்

தோற்றம் 17 - 03 - 1921



மறைவு 27 - 03 - 2003

அமரர் பண்டிதர் மா. மாணிக்கம்

நேசமாய்க் கதைப்பீர் வந்து நெருங்கிய நண்பர்போலே
பாசமாய் வளர்த்தீர் எம்மை பரிவுடன் பார்த்துவந்தீர்
வேகமாய் எமை விட்டு விரைந்து தான் சென்றதெங்கே?
நின்னது பிரிவை என்றும் நினைக்கவே முடியவில்லை
பின்னது என்ன இங்கே பிதற்றிப் பயன் ஏதுவுமில்லை
சொன்னது சொன்னார் சான்றோர் வாழ்வியல் இயல்வு சொன்னார்
என்னதோ இறைவன் சித்தம் இசைந்து நாம் ஒன்றிநிற்போம்.

நினைவுகளில் என்றும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்.

13A 1/6, பசல்ஸ் லேன்,
வெள்ளவத்தை.

(48588)
(54-11-45)

30/1, குமாரசாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

# 'மினி' தேர்தலின் பிரசாரம் இன்று நள்ளிரவுடன் முடிவு

கொழும்பு,மார்ச். 27

எதிர்வரும் வியாழனன்று நடைபெற விருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் வாக்களிப்புக்கான பிரசார நடவடிக்கைகள் இன்று நள்ளிரவுடன் முடிவடையவுள்ளன.

அதனையொட்டி, தேர்தல் சட்ட திட்டங்களை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்று பொலீஸ் தலைமையகம் அறிவித்திருக்கின்றது.

தேர்தல் பிரசாரத்தின் இறுதித் தினமான இன்று வன்முறைச் சம்பவங்கள் அதிகளவில் இடம்பெறுமென்று எதிர்பார்க்கப்படுவதால் நாட்டின் முக்கியமான இடங்களில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில் 30 ஆம் திகதி நடைபெறும் தேர்தலின் பெறுபேறுகள் ஏப்ரல் முதலாம் திகதியே முழுமையாக வெளியிடப்படுமென்று தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்திருக்கிறார்.

## பயிற்சி ஒருநாள்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தது. அணித் தலைவர் விக்ரம் சோலங்கி ஓட்டமேதும் பெறாத நிலையில் ஆட்டமிழந்து வெளியேறி ஏமாற்றம் அளித்தார்.

அடுத்து களமிறங்கிய ஒயிஸ்ஸா 2 ஓட்டங்களுடன் ஆர்.பி சிங்கின்பந்தில் வெளியேறினார். தொடர்ந்து வந்த கெவின் பீற்றர்சன் 43 பந்துகளில் 23 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து ரண் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

ஆரம்ப வீரராகக் களமிறங்கிய விக்கெட் காப்பாளர் மத்தியூ பிரியர் 10 பவுண்டரிகளுடன் 55 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்கும்போது இங்கிலாந்து 97 ஓட்டங்களிற்கு 4 விக்கெட்டுகளை இழந்து தவித்தது. பின்னர் இணைந்த கொலிங்வூட் (34), மற்றும் இயன் பெல் ஆகியோர் 66 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்று அணியைச் சரிவிலிருந்து மீட்டனர். பிளாக்வெல் தன் பங்கிற்கு 23 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். கொலிங்வூட் மற்றும் பிளாக்வெல் ஆகியோர் 'ரண் அவுட்' முறையில் ஆட்டமிழக்க இயன் பெல் ரெய்னாவின் பந்து வீச்சில் கைவ்விடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

கடைசி ஓவரில் வெற்றிக்கு 15 ஓட்டங்கள் தேவைப்பட்டது. அந்த இலக்கை அடைய முடியாது இங்கிலாந்து தோல்வி அடைந்தது.

# ஜே.வி.பியினர் மீதான தாக்குதல்கள்: முறையிட்டாலும் நடவடிக்கையில்லை!

## ஜனாதிபதி குறித்து அதன் எம்.பி. கடும் விசனம்

கொழும்பு, மார்ச் 27

ஜே.வி.பி. ஆதரவாளர்கள் மீது தேர்தல் காலத்தில் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் முறையிட்டாலும் அதற்குரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்று விசனம் தெரிவிக்கிறார் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சந்திரசேகரன்.

தேர்தல் காலத்தில் ஜே.வி.பி உறுப்பினர்கள் தாக்கப்படுவது குறித்து கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு அவர் கூறினார். அவர் மேலும் கூறியதாவது: -

எமது உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் தாக்கப்படுகின்றமை பற்றி நாம் ஜனாதிபதி மற்றும் பொலீஸ்மா அதிபரிடம் முறையிட்டிருக்கிறோம். ஆனால், உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் தேர்தல் காலத்தில் நடந்துகொள்ளும் விதமானது ஐக்கிய தேசியக் கட்சியினரின் நடத்தையை விட மோசமாக உள்ளது. சுதந்திரக் கட்சியின் பிராந்தியத் தலைவர்கள் தமது இருப்பை உறுதி செய்துகொள்வதற்காக ஜே.வி.பியினர் மீது தாக்குதல் நடத்துகின்றனர்.

ஜனாதிபதி மஹிந்த இவற்றைக் கருத்திக்கொள்ள வேண்டும். அன்று மஹிந்த சிந்தனையைக் கடுமையாக விமர்சித்த ஆறுமுகம் தொண்டமான் உட்பட மலையகத் தலைவர்களைத் தன்வசம் வைத்துக்கொண்டிருக்கும் ஜனாதிபதி, ஜே.வி.பி. குறித்து சீர் தூக்கிப் பார்க்க வேண்டும். - என்றார் பெ.சந்திரசேகரன் எம்.பி.

(க)

## பொங்கல்

சுழிபுரம்,மார்ச் 27

சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலய எட்டாம் நாள் பொங்கல் வேள்வி ஆராதனை நாளை செவ்வாய்க்கிழமை அதிகாலை முதல் நடைபெறவுள்ளது.

பொங்கல் மடை மற்றும் நிகழ்வு அன்று நள்ளிரவில் நடைபெறும். (3-28)

# மரண அறிவித்தல்

## கந்தையா தம்பிராசா



முகமாலையைப் பிறப்பிடமாகவும் எழுதுமட்டுவாழை நிரந்தர வசிப்பிடமாகவும் துன்னாலையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தம்பிராசா அவர்கள் நேற்று (26.03.2006) ஞாயிற்றுக் கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கனகம்மாவின் பெறாமகனும் இராசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தெய்வானை தம்பதியரின் அருமை மருமகனும் அமரர் செல்வி சறோஜினி தேவி, திருமதி க.நாகேஸ்வரி, த.சோதிலிங்கம் (அதிபர், மிருசுவில் அ.த.க. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கந்தசாமி, திருமதி சோ.நந்தினி ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை, கணபதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற பிஸ்கால் உத்தியோகத்தர் - வவுனியா), குலசேகரம்பிள்ளை (J.P) மற்றும் நடராசா (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், யாழ்.மாநகர சபை), பேரம்பலம் (ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்), திருமதி தி.பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமதி செல்லம்மா, திருமதி தங்கம்மா, திருமதி நாகம்மா, காலஞ்சென்ற உலகாம்பிகை, திருமதி தெய்வானைப்பிள்ளை, அமரர் தியாகராசா ஆகியோரின் மைத்துனரும் முகுந்தன் (லண்டன்), வினிதா, கெஜன் (லண்டன்), சுமணன், தனுஜா, கஜனி, தர்மிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2006) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் தற்காலிக வசிப்பிடத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**த.சோதிலிங்கம் (மகன்).**
*(அதிபர், யா/மிருசுவில் அ.த.க.பாடசாலை).*

*தற்காலிக முகவரி:*
*செம்பாட்டு வீதி, துன்னாலை மத்தி,*
*கரவெட்டி.*
*தொ.பே:021226 4097.*
(48606) (25-17-12-49)


## COLLEGE OF ABACUS

ஆசிரியர்களுக்கான அபாக்கஸ் பயிற்சிநெறி யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

A/L படித்த ஆங்கில அறிவுடன் ஆசிரிய பணியில் ஆர்வமுடையவர்கள் விண்ணப்பிக்கலாம். யாழ்ப்பாணத்தில் சகல பகுதிகளிலிருந்தும் ஆசிரிய மாணவர்கள் உள்வாங்கப்படவுள்ளனர்.

- அபாக்கஸ் அறிமுக பயிற்சிக்கு கட்டணம் இல்லை. குறிப்பிட்ட எண்ணிக்கையான ஆசிரிய மாணவர்கள் மட்டும் முதல் பிரிவில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர். சுயவிவரங்களுடன் விண்ணப்பங்களை மூன்று நாள்களுக்குள் அனுப்பிவைக்கவும்.

*முகவரி:*
(சி-48560) (25-12-17)
**விளம்பர இல.2842**
**மே/பா உதயன், யாழ்ப்பாணம்.**


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும்

*தோற்றம்* 01 . 02 . 1924



*மறைவு* 25 . 02 . 2006

## ஐயம்பிள்ளை செல்லையா

**(சண்டிலிப்பாய் மத்தி) - 27.03.2006**

*குடும்பத்தின் ஒளி விளக்காய் வாழ்ந்து - எம்மை*
*வாழ வழிகாட்டிய எம் அன்புத் தெய்வமே!*
*நீர் பாசத்தின் உறைவிடமாய் திகழ்ந்து - எம்மை*
*இவ் உலகில் விட்டுவிட்டு நீங்கள்*
*விண் உலகம் சென்றதேனோ?*
*என்றும் உங்கள் நினைவுடனே - நாங்கள் வாழ்கின்றோம்.*

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.**

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*'செல்வமகால்'*
*சண்டிலிப்பாய் மத்தி,*
*சண்டிலிப்பாய்.*

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள்.**

(48584) (25-12-17)


## உலகின் எட்டாவது அதிசயம்

*மாமனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட பிரமாண்டமான சாகசச் சித்திரம் உலகெங்கும் வசூலில் சக்கைபோடு போடுகிறது.*

விருதுகள் பல வென்ற தரமான படைப்பு

பாடசாலை மாணவர்களுக்கு விசேட காட்சிகள் காண்பிக்கப்படும்

**கிங் கொங் (King-Kong)**

தங்கத் தமிழ் மொழியில்...

வெள்ளி (31.03.2006) முதல் நாதன்ஸ் திரையரங்கில்...

## நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

*விஷால், மீராஜஸ்மின் நடித்த*

**சண்டக் கோழி**

காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
தினசரி நான்கு காட்சிகள்

## ராஜா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
ஸ்ரீகாந், மீராஜஸ்மின், கருணாஸ் நடித்த

**மெர்க்குறிப் பூக்கள்**

காட்சி நேரம் மாற்றப்பட்டுள்ளது
10.30, 2.00, 6.00, 9.00, (பு.நே.) ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

## நாகம்ஸ் சுன்னாகம்

21 - 27 வரை
எம். ஜி. ஆர், ஜெயலலிதா
நடித்த

**ஒளி விளக்கு**

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுகிர்தநாயகம் நகுலேஸ்வரி



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் சோதிவேம்படி மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சுகிர்தநாயகம் நகுலேஸ்வரி அவர்கள் நேற்று (26.03.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம் - நாகரத்தினம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுகிர்தநாயகத்தின் அன்பு மனைவியும் செல்வநாயகம் - சுகிர்தம் தம்பதியினரின் மருமகளும் சுகிர்தாஸ்வரி (சுவிஸ்), சுரேந்திரன், கேதீஸ்வரி (சுவிஸ்), திருச்செல்வம் ஆகியோரின் அன்புத் தாயாரும் இந்திரன் (சுவிஸ்), கலாறஞ்சினி, பாலஸ்கந்தன் (சுவிஸ்), சர்மிலா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பவித்திரா (சுவிஸ்), மாலவன் (சுவிஸ்), கபிலன், செந்தூரன் (சுவிஸ்), வேனுசன் ஆகியோரின் பேர்த்தியும் மகாதேவன், கௌசலாதேவி, சவுந்தலாதேவி காலஞ்சென்ற பேரின்பதேவி, காலஞ்சென்ற வாமதேவன், சறோஜினிதேவி, கிருஷ்ணகுமார், உமாதேவி, யசோதா ஆகியோரின் அன்புச் சகோதரியும் பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான மதியாவர்ணம், தணிகாசலம், செல்வராசா, பாக்கியநாதன் மற்றும் மனோன்மணி, ராஜேந்திரம், குகனேஸ்வரன் காலஞ்சென்ற பத்மாதேவி மற்றும் பாலநாயகம், புனிதவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.03.2006) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'புனித இல்லம்'*
*சோதி வேம்படி ஒழுங்கை, மானிப்பாய்.*
(48599) (25-12-17)
*தகவல்:*
**குடும்பத்தினர்.**

## இளையதம்பி கென்றி ஞானரத்தினம்

மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகக் கொண்ட இளையதம்பி கென்றி ஞானரத்தினம் (ஓய்வூதியர் - களஞ்சியப் பொறுப்பாளர், யாழ்.மாநகர சபை) அவர்கள் நேற்று (26.03.2006) ஞாயிற்றுக் கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் அமரர் இளையதம்பி - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் அமரர் சின்னையா - பத்தினி தம்பதியரின் பாசமிகு மருமகனும் சின்னம்மாவின் அன்புக் கணவரும் ஞானசோதி (ஆசிரியை, யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை), ஞானசற்குணவதி, ஞானேந்திரன் (பிரான்ஸ்), ஞானகுமாரி (ஜேர்மனி), ஞானவதி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமரர் இரகுநாதன் (கூட்டுறவுப் பரிசோதகர்), குமாரசாமி (E.V.K) அமரர் விநாயகமூர்த்தி, சுகுணா (பிரான்ஸ்), இரகுநாதன் (ஜேர்மனி), அமரர் மாமாங்கரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அமரர் குணரத்தினம் (ஓய்வூதியர், வன இலாகா யாழ்ப்பாணம்), பாக்கியரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் அமரர் ஜெயமலர், வெற்றிவேலு (ஓய்வூதியர் - நிதி உதவியாளர், யாழ். கல்வித் திணைக்களம்), அமரர் கந்தையா, பற்பநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (27.03.2006) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் நேரியதூ சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'ஞானபதி'*
*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.*
(48602) (25-12-17)
*தகவல்:*
**வீ.குமாரசாமி (E.V.K)**
**குடும்பம்.**

## திருமதி இராசையா அன்னப்பிள்ளை



வேலன்குளம், நெடுங்கேணியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி மத்தியை வதிவிடமாகவும் கொண்ட இராசையா அன்னப்பிள்ளை அவர்கள் நேற்று (26.03.2006) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை, சின்னார், சின்னத்தம்பி, சின்னக்குட்டி மற்றும் நாச்சிப்பிள்ளை, சுப்பையா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் மற்றும் பாலசிங்கம் (தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை) அவர்களின் பாசமிகு தாயாரும் மனோன்மணியின் அன்பு மாமியாரும் மற்றும் பகீரதன் (கதிரியலாளர், யாழ்.போதனா வைத்தியசாலை), பிரதீபா, சுதர்சன், வசீகரன், கிரிதரன் ஆகியோரின் பேர்த்தியும் கியூசாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2006) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீர்வேலி தெற்கு,*
*நீர்வேலி.*
(48604) (25-12-17)
*தகவல்:*
**இ.பாலசிங்கம்(மகன்)**

# இந்தியத் தூதரகத்தில் விசா பெற்று இந்தியாவுக்குத் தப்பினார் கருணா

## ஆங்கில வார இதழ் பரபரப்புச் செய்தி

கொழும்பு, [illegible]ச் 27

விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து நீக்கப்பட்ட கருணா கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் 2005ஆம் ஆண்டு விசா பெற்று இந்தியாவிற்குத் தப்பியோடியிருந்தார் என்று கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

கருணாவின் சகாக்களால் பயண முகவர் நிலையம் ஒன்றின் ஊடாகவே இந்தியத் தூதரகத்தில் விசாவிற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. வழமையான பயணிகளைப் போன்று கருணா பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச விமான நிலையத்தின் ஊடாகவே இந்தியாவிற்குச் சென்றிருந்தார்.

கருணா இந்தியாவிற்குச் சென்று மூன்று தினங்களின் பின்னர் அவரது மனைவி இந்தியாவிற்குச் செல்வதற்குத் தனியாக விண்ணப்பித்திருந்தார். எனினும், அவரின் விசா விண்ணப்பத்தைத் தடுத்துவைத்த அதிகாரிகள் அவரது விசா விண்ணப்பத்தை நிராகரித்திருந்தனர். அவரது விசா நிராகரிக்கப்பட்டதையடுத்து ஏற்கனவே கருணா இந்தியாவிற்குச் செல்ல அவருக்கு விசா வழங்கியமை தொடர்பாக, கருணாவின் சகாக்களுக்கும் தூதரக அதிகாரிகளுக்கும் இடையில் ஏதேனும் தொடர்புகள் இருந்தனவா என்பதை அறிவதற்கான விசாரணைகள் நடைபெற்றன.

கருணா இந்திய விசா பெற்று இந்தியாவிற்குச் சென்றுள்ளாரென்றும், இது தொடர்பாக தூதரக மட்டத்தில் உள்ளக விசாரணைகள் நடைபெற்றன என்றும் இந்தியத் தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவிற்குச் சென்ற கருணா அங்கிருந்து சிங்கப்பூரிற்குச் சென்று தனது மனைவியுடன் இணைந்து கொண்டுள்ளாரென்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய ஜனாதிபதி மஹிந்த, கருணா இந்தியாவிற்குத் தப்பிச்சென்ற சமயம் பிரதமராக இருந்தார். எனினும், கருணா எங்கிருக்கிறார் என்பது பற்றி அவருக்கு அறிவிக்கப்படவில்லையென்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

- இவ்வாறு அந்த ஊடகம் மேலும் தெரிவித்தது. (க-3)

## தமிழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபடாமல் அனைத்து மீனவர்களும் உடன் கரைக்குத் திரும்பிச் சென்றனர்.

முப்பதுக்கும் மேற்பட்ட படகுகளில் இருந்த மீன்பிடி உபகரணங்கள் இத்தாக்குதலில் சேதமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் கற்பிட்டி குதிரைமலை கடற்பரப்பில் கடற்படையினரின் 'டோறா'ப் படகொன்று தாக்குதலுக்குள்ளான சம்பவத்தையடுத்து, ஆத்திரமடைந்த நிலையிலுள்ள இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்களின் மீதான இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. (க-3)

## 8 கடற்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சடலங்களாகவோ எவரும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் கடற்படைப் பேச்சாளர் டி.கே.பி.தஸநாயக்க தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை, இவ்விவகாரம் குறித்து நேற்றுப்பிற்பகல் அறிக்கையொன்றை விடுத்திருக்கும் தேசிய பாதுகாப்பமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம், ஆயுதங்களை ஏற்றிச்சென்ற புலிகளின் படகைச் சோதனையிட கடற்படையினர் முற்பட்ட போது அது வெடித்ததாகவும் இதனால் கடற்படைப்படகும் பாதிக்கப்பட்டு தீப்பிடித்து நீரில் மூழ்கியதாகவும் தெரிவித்திருக்கின்றது.

போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பயன்படுத்தி மீன்பிடிப் படகுகள் மூலம் புலிகள் ஆயுத உபகரணங்களையும், வெடி மருந்துப் பொருள்களையும் கடத்தி வருகின்றனர் என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-3)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் ஏ-9 பாதையூடான வடக்கு - தெற்கு போக்குவரத்து ஸ்தம்பிக்கும்.

இதேவேளை - குடாநாட்டிற்கும் புளியங்குளத்துக்கும் இடையிலான போக்குவரத்து வழமைபோன்று இடம்பெறும். இவ்வாறு போராட்ட ஏற்பாட்டாளர்கள் கூறினர். (ஒ-3)

# ஜே.வி.பி. ஆர்ப்பாட்டத்தில் தாக்குதல் எம்.பி. உட்பட ஒன்பது பேர் படுகாயம்

காலி, நாகொடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாதலகம என்ற இடத்தில் ஜே.வி.பியினர் மீது கும்பலொன்று நடத்திய தாக்குதலில் ஒன்பது பேர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் ஒருவர் காலி மாவட்ட ஜே.வி.பி. உறுப்பினரான திலகரத்ன விதாரண ஆராச்சி என தெரிவிக்கப்படுகிறது.

நேற்று அதிகாலை ஜே.வி.பி. ஆதரவாளர்கள் மீது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆதரவாள்ர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலைக் கண்டித்து நேற்று ஜே.வி.பி. உறுப்பினர்களால் ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டதாகவும் -

அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் மீதே கும்பலொன்று தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் - கூறப்படுகிறது.

தாக்குதலில் படுகாயமுற்ற ஒன்பது பேரும் காலி, கராப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (க-3)

## பாலாவுடன் சொல்ஹெய்ம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் சீற்றமுற்றிருக்கின்றனர்.

இதனால், அடுத்த சுற்றுப் பேச்சுகளில் பங்குபற்றாமல் விடுவது குறித்து அல்லது அந்தப் பேச்சைத் தள்ளிப்போடுவது குறித்து புலிகளின் தலைமை ஆராய்கிறது என்ற சாரப்பட புலிகளின் பேச்சுக்குழுத் தலைவர் பாலசிங்கமும், புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனும் அண்மையில் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதனால், அடுத்த சுற்றுப்பேச்சு திட்டமிட்டபடி ஏப்ரல் மூன்றாம் வாரத்தில் இடம்பெறுமா என்ற சந்தேகம் எழுந்துள்ள பின்னணியிலேயே லண்டனில் பாலாவை எரிக் சொல்ஹெய்ம் சந்திக்கின்றார்.

எப்படியும் திட்டமிட்டபடி அடுத்த சுற்றுப் பேச்சில் விடுதலைப் புலிகள் பங்குபற்றுவதை உறுதிப்படுத்துமாறு புதனன்று சந்திப்பின்போது சொல்ஹெய்ம் வலியுறுத்திக் கேட்பார் எனத் தெரிகின்றது.

இலங்கை அமைதி முயற்சிகளுக்கான நோர்வேயின் புதிய விசேட தூதுவராக நியமிக்கப்பட்டிருக்கும் ஹன்ஸன் போவர் விரை வில் இலங்கைக்குத் தாம் மேற்கொள்ளவிருக்கும் விஜயத்தின்போது, கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்து இதே விடயம் குறித்துப் பேசுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (க-3)

## முதற்கட்டமாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் தனியார் கல்வி நிலையங்களில் கற்றல் செயற்பாடுகளைப் பகிஷ்கரித்து எதிர்ப்பை வெளிக்காட்டுவோம்.

இந்திய ஆக்கிரமிப்பு இராணுவ அராஜகத்திற்கு எதிராக உண்ணா நோன்பிருந்து மறைந்த தாயை நினைவுகூர்வது தவறா? உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினுள் அத்துமீறி நுழைய சிறிலங்காப் படைக்கு அதிகாரம் கொடுத்தது யார்? ஸ்ரீலங்கா நீதித்துறை இதனை அனுமதிக்கிறதா? அத்துமீறி கல்வி நிறுவனங்களுள் ஆயுதங்கள் சகிதம் நுழைந்து மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களைப் படையினர் தாக்குவதற்கும், கட்டடங்களை சேதப்படுத்துவதற்கும் எந்தச் சட்டம் அதிகாரமளிக்கிறது?

இலங்கைத்தீவில் ஸ்ரீலங்கா, தமிழீழம் எனும் இரு தேசங்கள் உண்டு என்பதை உணராமல் இருப்பது ஏன்?

இலங்கை நீதித்துறை இழைத்த தவறே எமது அண்ணாமார், அக்காமார் அனைவரையும் ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்பாளருக்கு எதிராக ஆயுதம் ஏந்தவைத்தது -

இறுதியாகச் சொல்கின்றோம். இலங்கைத்தீவு காலனித்துவத்தின் கீழ் இருந்து விடுதலை பெற்றமை போன்றும் தமிழீழத் தேசம் முழுமையான விடுதலையை அடைய ஆசைப் படுவதில் என்ன தவறு...? எமது தேசியக் கொடியை நாம் ஏற்றியே தீருவோம். இது எங்கள் உறுதியான முடிவு. எனவே, முதல் கட்டமாக இன்று அனைத்து கற்றல் செயற்பாடுகள் (பரீட்சைகள்) என்பனவற்றை நிறுத்துகின்றோம்.

அதன்பின்னரும் இராணுவ அத்துமீறல்கள் தொடர்ந்தால் அரச செயற்பாடுகள், ஆக்கிரமிப்புப் படைகளின் அத்துமீறல்கள் அனைத்திற்கும் முடிவு கட்டுவோம்.- இவ் வாறு தமிழ் மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ஒ)

## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களையாது, அவர்களுக்கு பொலீஸ், இராணுவம் மற்றும் இராணுவப் புலனாய்வுத் துறையினர் பாதுகாப்புகளை வழங்கி முகாம் அமைத்து வருகின்றார்கள். களுவாஞ்சிக்குடியில் கடத்தப்பட்ட யுவதி மற்றும் கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக உறுப்பினர்கள் குறித்து இதுவரையில் எதுவுமே தெரியவில்லை. இந்நிலையில் மேலும் மாணவர் கள் மற்றும் இளைஞர், யுவதிகள் தொடர்ந்து கடத்தப்படுகின்றார்கள்.

சிங்கள இராணுவம் எமது மக்களின் கலாசாரத்தைத் திட்டமிட்டு சீரழித்து வருகின்றது. மாணவர்களை மது பாவனைக்கு அடிமையாக்கல், யுவதிகளைப் பாலியல் ரீதியாக இம்சைப்படுத்தல் போன்றவற்றுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் 'எய்ட்ஸ்'போன்ற ஆட்கொல்லி நோய்களைப் பரப்புவதிலும் ஈடுபட்டுவருகின்றார்கள். எனவே, அண்மைக்காலமாக எம்மால் நிறுத்திவைக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும்,மீண்டும் தொடங்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

எமது மக்களின் விடிவுக்காகத் தேசியப் போராட்டத்தை முன்னெடுக்கவேண்டிய கடப்பாடு எல்லோருக்கும் உள்ளது. ஆகவே, நாம் அனைவரும் அணிதிரண்டு 'எம்மை தாக்குபவனை தாக்குவோம்' என்ற மக்கள் படையணியின் கொள்கைக்கு அமைவாக நடவடிக்கைகள் தொடங்கவுள்ளோம். எமது தாக்குதலின் கொடூரத்தை இராணுவத்தினர் மற்றும் கூலிப்படைகள் நன்கறிவார்கள்.

- இவ்வாறு அந்தத் துண்டுப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-3)

## உடன்பாட்டை முழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு நேற்று அறிக்கையொன்றை விடுத்துள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது -

குதிரைமலை கடலில் இலங்கைக் கடற்படைப் படகு மீது நடத்தப்பட்ட தாக்குதலை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வன்மையாகக் கண்டிக்கின்றது. இது தொடர்பான விசாரணைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்த சம்பவத்தில் தமக்குத் தொடர்புகள் எதுவும் இல்லையென்று விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர். ஆனால், போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கடந்த கால அனுபவத்தை ஒப்பிட்டு பார்க்கும்போது விடுதலைப் புலிகளின் பங்களிப்பு இதில் இல்லையென்று கூறிவிட முடியாது. எனவே, இந்தத் தாக்குதல் எவ்வாறு இடம்பெற்றது, எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்களை தவிர்ப்பது எப்படி என்பனவற்றை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு கண்காணிப்புக் குழுவிற்கும், இலங்கை அரசுக்கும் புலிகள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம்.

கடந்த சில வாரங்களாக மோசமான அளவில் வன்முறைகள் இடம்பெற்று வருகின்றன. இரண்டாவது கட்டப் பேச்சுகளுக்கு நான்கு வாரங்களே இருக்கையில் - அப்பேச்சுகளுக்குத் தரப்புகள் தயாராகிவரும் நிலையில் - இத்தகைய போக்கு ஏற்பட்டிருப்பது மிகவும் கவலையளிப்பதாக உள்ளது.

திருகோணமலையில் கடந்த வாரம் இடம் பெற்ற பல தொடர் சம்பவங்கள் இலங்கைக் கடற்படையினருக்கும் புலிகளுக்கும் இடையே நேரடித் துப்பாக்கிச் சூட்டுப்பரிமாறல் சம்பவங்கள் வரை சென்றிருக்கின்றன.

போர்நிறுத்த ஒப்பந்தத்தைச் செம்மையாக அமுல்படுத்துவதைவிட்டு இரு தரப்பினரும், முரண்பாடான - ஆத்திரமூட்டும் வகையிலான - நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என்றே இவற்றைக் கருதவேண்டியுள்ளது.

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதக் குழுக்கள் இருப்பது தொடர்பான செய்திகளை இலங்கை இராணுவம் அண்மையில் நிராகரித்திருந்தது. ஆனால், கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கைகள் மற்றும் அனுபவங்களைப் பார்க்கும்போது இந்த விடயத்தில் நாம் இராணுவத்தினருடன் உடன்பட முடியாது. எனவே, இந்த விடயத்தில் கண்களை மூடிக்கொள்ளாமல் அரச கட்டுப்பாட்டுப் பகுதி யிலுள்ள ஆயுதக் குழுக்கள் குறித்து அரசு உடனடி கவனம் செலுத்த வேண்டும்.

இறுதியாக, ஆத்திரமூட்டும் செயல்களைத் தவிர்த்து ஜெனீவாவில் காணப்பட்ட உடன்பாடுகளை அமுல்படுத்த இருதரப்பினரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். இரு தரப்பினரும் பொறுப்பாக செயற்படாத பட்சத்தில் கடந்த டிசெம்பர் மற்றும் ஜனவரி காலப் பகுதிகளில் இருந்த நிலைமை மீண்டும் உருவாகும் அச்சம் இருக்கின்றது.

- இவ்வாறு இலங்கை போர்நிறுத்தக் கண் காணிப்புக்குழுவின் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-3)


இதோ! புத்தம் புதிய Video Graphics வெளியீடுகள். வெளிவந்துவிட்டது!

Video Mixing க்குத் தேவையான Video Title Background, Holywood Effects & Indian Effects DVD க்கள் புத்தம் "புதிய வெளியீடுகளாக வெளிவந்துவிட்டது.

DVD Writing - 50/- Scanning - 20/-
CD Writing - 30/- Laser Prining - 8/-

CICS Computer Technologies
# 87, Palaly Road, Thirunelvely, Jaffna.
Tel: 0777917610

University of London
Jaffna Branch
லண்டன் பல்கலைக்கழக கிளை விரைவில் யாழ் நகரில் ஆரம்பம்
No 213, 2nd Floor, Kasthuriar Road, Jaffna.

நாவலர் வெளியீடு
பரீட்சை வினாத்தாள்
தரம் 1 முதல் O/L வரை
(1 ஆம் தவணைக்கானது)
கிடைக்கும் இடங்கள்:
* நாவலர் இன்ஸ்ரிரியூட் - ஆனைப்பந்தி
* பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்.
* மக்மிலன் புத்தகசாலை - யாழ்ப்பாணம். (48601)(30)

தேவை
பிரபல அச்சகம் ஒன்றிற்கு புக்பைண்டிங், மெசின் மைண்டேஸ் (இயந்திர இயக்குநர்) முன் அனுபவமுள்ளவர்கள் தேவை.
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்பிற்கு: விளம்பர இல. 2841.
மே/பா: உதயன், யாழ்ப்பாணம். (48585)(30)


## மரண அறிவித்தல்

### சின்னப்பு ஆசைப்பிள்ளை

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு ஆசைப்பிள்ளை அவர்கள் நேற்று (26.03.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
(48607)(30)

இப்பத்திரிகை நியூ, உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.03.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2006 ஏப்ரல்

வெளியீடு 01

## மாதிரி வினாப்பத்திரம்

### வணிகக்கல்வி

1 மணித்தியாலம் திரு. B.S. பசீல் (B.B.A) யாழ்.

(வணிகக்கல்வி பகுதி I,II உம் பகுதி II இன் பகுதி I உம் கடந்த வாரம் வெளியாகியிருந்தது. அதன் பகுதி II பகுதி I தொடர்ச்சியும் வணிகக்கல்வி II இன் பகுதி II உம் வெளியாகின்றது)

26. விற்பனைக்குத் தேவையானதை மட்டும் உற்பத்தி செய்வதும், உற்பத்திக்கு தேவையானதை மட்டும் கொள்வனவு செய்வதும் எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது?

27. சுனாமியால் பாதிக்கப்பட்ட தொழில் முயற்சியாளர்களுக்கு, சலுகை அடிப்படையிலான கடன் திட்டம் ஒன்று இலங்கை மத்திய வங்கியால் அறிமுகம் செய்யப்பட்டது. அது எது?

28. "அ" பகுதிக்குப் பொருத்தமான விடைகள் "ஆ" பகுதியில் குழம்பிய நிலையில் உள்ளன. பொருத்தமான விடையின் இலக்கத்தை நடுவே உள்ள கூட்டில் எழுதுக?

| "அ" | | "ஆ" |
|---|---|---|
| 1.பாரம்பரிய உற்பத்திகளைப் பாதுகாக்கும் முக்கிய அமைப்பு | | 1. இளைஞர் படையணி |
| 2.நவீன உற்பத்தி முறைகளை அறிமுகப்படுத்துவது | | 2. இலங்கைமுதலீட்டுச்சபை |
| 3.எதிர்கால மனித வளத்தை முன்னேற்றுவிக்கும் அமைப்பு | | 3. தேசிய கைப்பணிச் சபை |
| 4.இலங்கையின் மூலதனப் பற்றாக்குறையை நீக்கும் பணியில் ஈடுபடுவது | | 4. கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் |

29. நிறுவனம் ஒன்றின் வாரத்திற்கான சராசரி மூலப்பொருள் பாவனை 20 Kg. தாங்கல் இருப்பு (buffer stock) 50 Kg. அத்துடன் மறுகட்டளையிடும் மட்டம் 110 Kg. முதன்மைக் காலம் எத்தனை வாரங்கள்?

30. நிறுவனம் ஒன்றின் மொத்தச் சொத்துக்களில் நிதியிடப்பட்டிருப்பதைக் காட்டுவது, எவ்வாறு அழைக்கப்படும்?

31. ஊழியருக்கு வேலைத் தொடர்பான பொறுப்புக்களையும், அங்கீகாரத்தையும், சாதனை புரிவதற்கான வாய்ப்பையும் அதிகரிக்கும் செயற்பாடுகள் எவ்வாறு அழைக்கப்படும்?

32. அட்டவணையைப் பூரணப்படுத்துக

| | வேலை உற்பத்தி | தொகுதி உற்பத்தி | பாய்சல் உற்பத்தி |
|---|---|---|---|
| கட்டளையின் அளவு | சிறியது | நடுத்தரம் | a. |
| வெளியீட்டின் தொகை | b. | நடுத்தரம் | உயர்வு/.தொடர்ச்சியானது |
| உற்பத்தி பொருள் விஸ்தீரணம் | பலவகை | c. | துணி உற்பத்திப் பொருள் |
| உற்பத்தி செய்முறையின் நெகிழ்வுத் தன்மை | உயர்வு | சில | d. |

33. ஓர் அமைப்பில் உள்ள தனிப்பட்டவர்கள், பிரிவுகள், பகுதிகள் என்பவற்றின் வேலைகளை ஒன்றிணைக்கும் செய்முறை எவ்வாறு அழைக்கப்படும்?

34. இறைச்சி வகைகள், கடல் உணவுகள் என்பவற்றை ஏற்றுமதி செய்யும் இலங்கையர் கட்டாயமாக எத்தரச் சான்றிதழை பெற்றுக் கொள்ள வேண்டும்?

35. விளம்பரம் ஒரு பொருளுக்கு ........................................................ .................. உருவாக்குவதற்கான ஆள்சார் தூண்டுதலாகும்.
36. வணிகத்தின் இயலுமைத் தன்மை அல்லது வெற்றியடையும் தன்மையை எவ்வாறு அறிந்து கொள்ளலாம்?
37. செயற்றிட்ட அறிக்கை ஒன்றில் உள்ளடக்கப்படும் தகவல்களில் மிகவும் முக்கியமானது எது?
38. நிறுவனம் ஒன்று நல்லபிப்பிராயத்தைப் (Image) பேணும் வகையில் மேற்கொள்ளுகின்ற மேம்படுத்தல் எவ்வாறு அழைக்கப்படும்?

39. நிறுவனம் ஒன்றின் மொத்த நிலையான கிரயம் ரூபா 200,000. அலகிற்கான பங்களிப்பு ரூபா 5. அலகிற்கான மாறுங்கிரயம் ரூபா 5. இந்நிறுவனம் ரூபா 20,000 ஐ இலக்குத் தேறிய இலாபமாகப் பெறுவதற்கு எத்தனை அலகுகளை விற்பனை செய்ய வேண்டும்? ........................................................

பின்வரும் கூற்றுக்கள் உண்மையா அல்லது பொய்யா என அவற்றின் கீழ் கோடிட்டுக் காட்டுக.

40. (அ).அலகுப் பொறுப்பாட்சி ஸ்தாபனத்தில் தயாரிக்கப்படும் நம்பிக்கை உறுதி அலகுடமையாளர்களால் ஏற்படுத்தப்படுகின்றது. உண்மை / பொய்
(ஆ).அதே நேரம் மொத்தத் தீர்ப்பனவு முறை நிதிப் பரிமாற்றங்களை விரைவாக மேற்கொள்ள உதவுகின்றது. உண்மை / பொய்

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2006 ஏப்ரல்

வெளியீடு 01

## மாதிரி வினாப்பத்திரம்

### வணிகக்கல்வி

2 மணித்தியாலம் திரு. B.S. பசீல் (B.B.A) யாழ்.

முதலாம் வினாவுக்கும் இரண்டாம் வினாவும் உட்பட நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
(முதலாம் இரண்டாம் வினாக்களுக்கு 18 புள்ளிகள் வீதமும் ஏனைய வினாக்களுக்கு 12 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்)

1.
(i). "நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு சிறந்த முயற்சியாளர்கள் அவசியமானதாகும்".
முயற்சியாளர்களை ஊக்குவித்து விருத்தி செய்வதற்கு நாட்டின் அரசு எந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என நீர் கருதுகின்றீர்?
(ii).இலங்கையின் பொருளாதார, சமூக அபிவிருத்தி தொடர்பில் முயற்சியாண்மையின் முக்கியத்துவத்தை விளக்குக?
(iii).முகாமையாளர் ஒருவரின் முக்கிய தொழிற்பாட்டுக் கருமங்களை விபரிக்குக?
(iv).(அ). தரக்கட்டுப்பாட்டு முறைகளைக் குறிப்பிடுக?
(ஆ). SLS குறிகள் குறிக்கப்படுவதனால் வணிகர் அடைந்துக் கொள்ளக்கூடிய நன்மைகள் எவை?
(v).வணிக நிறுவனம் வாடிக்கையாளரைக் கவருவதற்கு செய்யக்கூடியவை யாவை?
(vi).சுருக்கமாக விளக்குக?
(அ). வேலை நிறுத்தம் (ஆ). இலங்கை அபிவிருத்தி முறி
(இ). தொலை நோக்கு

2.
(i). (அ). இலங்கையின் ஆடை ஏற்றுமதியாளர்களுக்கு பாதிப்பாக அமைந்த சூழல் எது?
(ஆ). இதனால் இலங்கைக்கு ஏற்பட்டுவரும் விளைவுகள் எவை?
(ii).முயற்சியாளரையும் முகாமையாளரையும் எவ்வழிகளில் வேறுபடுத்த முடியுமெனக் கூறுக?
(iii). முகாமைத்துவத்தின் உள்ளீட்டு, வெளியீட்டு தொழிற்பாடுகளை உரிய விளக்கப்படத்தில் காட்டுக?
(iv). இலங்கையில் முயற்சியாளர்கள் எதிர்ப்பட்டுவரும் சவால்கள் எவை?
(v).(அ). பயிற்சி வகைகள் மூன்றைப் பெயரிடுக?
(ஆ). பயிற்சி அளிப்பதனால் ஏற்படும் நன்மைகளைத் தருக?
(vi). சுருக்கமாக விளக்குக.
(அ) உயர் மூலதன இணைப்பு (ஆ) பங்களிப்பு (இ) மானிடத்திறன்

3.
(i). உற்பத்திக் கம்பனி ஒன்றின் அமைப்பு வரைபடம் ஒன்றை வரைந்து காட்டுக?
(ii).(அ). பகுதியாக்கல் (Departmentalization) எனப்படுவது யாது?
(ஆ). நிறுவனத்தில் காணப்படக் கூடிய பகுதியாக்கல்களைப் பெயரிடுக?
(iii).(அ). வலு எனப்படுவது யாது?
(ஆ). ஒரு நிறுவனத்துக்கு தலைமைத்துவம் எவ்வழிகளில் முக்கியத்துவம் வாய்ந்தது எனக் குறிப்பிடுக?
(iv).சுருக்கமாக விளக்குக.
(அ). விசால அளவு (ஆ). படிமுறைச் சங்கிலி (இ). கட்டுப்படுத்தல்

4.
(i). (அ). தொழிற்சாலை ஒன்றில் உற்பத்தி தடைப்படுவதற்கு ஏதுவான காரணிகள் எவை?
(ஆ). உற்பத்தியை சீராக பேணுவதற்கு பின்பற்ற வேண்டிய முறைகள் எவை?
(ii).சந்தைப்படுத்தல் ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தை விபரிக்குக?
(iii).(அ). கைத்தொழில் பிணக்கு எனப்படுவது யாது?
(ஆ). கைத்தொழில் பிணக்குகள் தோன்றுவதற்கான நான்கு காரணிகளைக் குறிப்பிடுக?
(iv).சுருக்கமாக விளக்குக?
(அ). ABC பகுப்பாய்வு (ஆ). வாடிக்கையாளர் எண்ணக்கரு
(இ). வியாபாரக்குறி

5.
(i). பாதீடு எனப்படுவது யாது? அதன் முக்கியத்துவங்களைத் தருக?
(ii).நிதி முகாமையாளரின் பணிகளை விபரிக்க?
(iii).(அ). சம்பளக் கொடுப்பனவைத் தீர்மானிக்கும் போது கவனத்தில் கொள்ளப்படும் மூன்று காரணிகளைத் தருக?
(ஆ). வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மூன்று பணிகள் எவை?
(iv).ஒரு நிறுவனத்தின் 2004ம் ஆண்டிற்கான தரவுகள்

| | |
|---|---|
| விற்பனைகள் (ரூபா 000) | 125 |
| இலாபம் (ரூபா 000) | 30 |
| தொழிற்படுத்தப்பட்ட மூலதனம் (ரூபா 000) | 150 |

(அ). தரவுகளின்படி இரு வீதங்களைக் கணிக்க?
(ஆ). உரிமையாளர் உரிமை என்பதனுள் எவை அடக்கப்படும்?

6.
(i). பொதியமைத்தல் எனப்படுவது யாது? அதன் பயன்கள் எவை?
(ii).(அ). சந்தைப்படுத்தல் முகாமையாளரின் பணிகள் எவை?
(ஆ). விற்பனை ஊழியரிடம் எத்திறன்கள் காணப்பட வேண்டும்?
(iii).திட்டமிடுதல், கட்டுப்படுத்தல் என்பவற்றிற்கிடையிலான தொடர்பை விளக்குக?
(iv).கருத்துத் திட்டம் எனப்படுவது யாது? அதைத் தயாரிப்பதால் ஏற்படக்கூடிய நன்மைகள் யாவை?

## அன்பு மாணவர்களே!

இலங்கையின் கல்வியில் தலைசிறந்து விளங்கும் மாவட்டங்களின் முன்னணி ஆசிரியர்களின் மாதிரி வினாத்தாளும் விடைகளும் உங்கள் பரீட்சை நலன் கருதி இங்கு வெளிவருகின்றது. அந்தவகையில் எதிர்வரும் வாரங்களிலும் தலைசிறந்த ஆசிரியர்களின் பரீட்சை எதிர்பார்ப்புடன் கூடிய வினாத்தாள்களும் வெளிவரவுள்ளது. அத்துடன் எமது கல்விச்சுடரினால் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளை தோற்றுவித்துக்கொண்டிருக்கும் பிரபல ஆசிரியர்களின் மாதிரி வினாத்தாள்களும் எதிர்வரும் காலங்களிலும் இப்பகுதியில் பிரசுரிக்கப்படவுள்ளது. பரீட்சை நடைபெறும் திகதிவரை எம்மால் வெளியிடப்படும் பல வினாத்தாள்களில் பல ஆசிரியர்களின் வேறுபட்ட வினாவியூகங்கள் அமைந்திருப்பதால் இப்பகுதியில் வெளிவரும் வினாக்களில் பெரும்பாலானவை இறுதி அரசப்பரீட்சைகளின் வினாக்களாக வெளிவரும் என்பதில் கல்விச்சுடர் நம்பிக்கை கொண்டுள்ளது. எனவே மாணவர்களே! உங்கள் சிறந்த பெறுபேறுகளுக்காக கல்விச்சுடருடன் இணைந்திருங்கள்.

## விடைக் குறிப்புகள்

# வணிகக்கல்வி I

வெளியீடு 01

திரு. B.S. பசில் (B.B.A) யாழ்.

| வினா இல | விடை இல | வினா இல | விடை இல | வினா இல | விடை இல | வினா இல | விடை இல |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 3 | 07 | 2 | 13 | 2 | 19 | 5 |
| 02 | 4 | 08 | 3 | 14 | 5 | 20 | 3 |
| 03 | 4 | 09 | 2 | 15 | 5 | | |
| 04 | 2 | 10 | 2 | 16 | 1 | | |
| 05 | 3 | 11 | 1 | 17 | 3 | | |
| 06 | 5 | 12 | 3 | 18 | 1 | | |

21. நாணயங்கள்
22. இடைநிலைப்பொருட்கள், முதலீட்டுப்பொருட்கள், நுகர்வுப்பொருட்கள்
23. கரைகடந்த கம்பனி
24. கொள்கலன் கப்பல்
25. நிதிக்குத்தகை முறை
26. 1 உள்நாட்டு வியாபாரத் திணைக்களம்
    2. நியாய வியாபார ஆணைக்குழு
27. அ. பிரதிமைப்படுத்தப்பட்ட காசோலைத் தீர்ப்பனவு (Image cheque Clearing )
    ஆ. பிரதிமைப்படுத்திய சினேக பூர்வக் காசோலை.
28. சமூகப் பொறுப்பு / வணிக விழுமியம்
29. இழப்பு ஏற்பட்ட
30. தேசிய போக்குவரத்து ஆணைக்குழு
31. அ. ஐக்கிய அமெரிக்க டொலர் - 101 - 102 ரூபா
    ஆ. இங்கிலாந்து ஸ்ரேலிங் பவுண் - 176 - 179 ரூபா
    இ. யூரோ – 121 – 123 ரூபா
32. புறக்குறிப்பு (சாட்டுதல்)
33. தேசிய சேமிப்பு வங்கி
34. உலகவர்த்தக அமைப்பு ( World Trade Organization – W.T.O )
35. நட்ட ஈடு வழங்கப்பட மாட்டாது. ஏனெனில் அண்மைக் காரணி இல்லை.
36. A.T.M.அட்டை (தன்னியக்க ரெலர் அட்டை)
37. நம்பிக்கைப் பிணைக் காப்புறுதி ( விசுவாசக் காப்புறுதி )
38. பந்தித்த பண்டக சாலை (சுங்கத் தீர்வைப் பண்டக சாலை )
39. அ. உண்மை
    ஆ. உண்மை
40. அ. உண்மை
    ஆ. உண்மை

## வணிகக்கல்வி I பகுதி – II - விடைகள்

1.(i). வணிகத்தின் பாரிய இயந்திரப் பயன்பாடு, தொழில்பிரிப்பு, சிறப்புத் தேர்ச்சி நுட்பங்களின் பயன்பாடு என்பவற்றினால் உற்பத்தி, வர்த்தக நடவடிக்கைகளில் அதிகளவில் மேற்கொள்ள வழிவகுத்த சூழல் கைத்தொழில் புரட்சி ஆகும்.

**இதனால் வணிகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்**

1. சொந்தத் தேவைக்கான உற்பத்திகள் சந்தைப்படுத்தலுக்கான உற்பத்திகளாக மாற்றமடைந்தன.
2. உள்நாட்டு உற்பத்திகள் ஏற்றுமதி நோக்கிய உற்பத்திகளாக மாற்றமடைந்தன.
3. சிறிய இயந்திரங்களுக்குப் பதிலாக பெரிய இயந்திரங்கள் அறிமுகம் செய்யப்பட்டன.
4. கைகளால் இயக்கும் இயந்திரங்களுக்குப் பதிலாக தன்னியக்க இயந்திரங்கள் அறிமுகம் செய்யப்பட்டன.
5. பொருட்களைப் பழுதடையாது நீண்ட காலம் பாதுகாக்கும் முறைகள் அறிமுகம் செய்யப்பட்டன.
6. போக்குவரத்து, தொடர்பாடல் முறைகள் முன்னேற்றமடைந்தன.

(ii).

1. நிறுவனத்தினால் ஓரளவிற்கேனும் கட்டுப்படுத்தக் கூடிய சூழல் காரணிகள் அகச்சூழலாகும் நிறுவனத்தினால் கட்டுப்படுத்த முடியாத சூழல் காரணிகள் புறச்சூழல் ஆகும்.
2. அகச்சூழல் காரணிகளாக உரிமையாளர், முகாமையாளர், ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், கடன்வழங்குவோர், நடுவர்கள் காணப்படுவர். புறச்சூழல் காரணிகளாக அரச சட்டச் சூழல், பொருளியல் சூழல், தொழில்நுட்பச் சூழல், சமூகக் கலாச்சாரச் சூழல், மக்கட்சூழல் போன்றவை அடக்கப்படும்.
3. அகச்சூழல் மூலம் நிறுவனத்தின் பலம், பலவீனங்கள் கண்டறியப்படும். புறச்சூழல் மூலம் வாய்ப்புக்கள், அச்சுறுத்தல்கள் கண்டறியப்படும்.

(iii).

1. முழுமையான சேவை நோக்கத்துடன் இருத்தல்.
2. மூலதனப் பற்றாக்குறை.
3. திறன்மிக்க ஊழியர்களின் பற்றாக்குறை.
4. இறக்குமதிப் பொருட்களின் வருகையால் ஏற்படும் அதிகரித்த போட்டி.

(iv).

1. நுகர்வோரின் உயிருக்கும் உடமைகளுக்கும் பாதிப்பு ஏற்படக் கூடிய வியாபாரங்களில் இருந்து பாதுகாத்தல்.
2. நியாயமற்ற வியாபாரப் பழக்கவழக்கங்களில் இருந்து நுகர்வோரைப் பாதுகாத்தல்.
3. நுகர்வோருக்கு நியாயமான விலையில் பொருட்கள் சேவைகளைக் கிடைக்கச் செய்தல்.
4. வியாபாரிகளால் நுகர்வோர் சுரண்டப்படுவதிலிருந்து பாதுகாத்தல்.

(v). **அங்கீகாரம் அளிப்பவரின் கடமைகள்.**

1. தனது வியாபாரப் பெயரைப் பயன்படுத்த அனுமதித்தல்.
2. சந்தைப்படுத்தலுக்கு உதவி வழங்கல்.
3. பயிற்சி வழங்கல்.
4. நிதி வசதி அளித்தல்.
5. முகாமைத்துவ ஆலோசனை வழங்கல்.
6. பொருட்களை வழங்கல்.

**அங்கீகாரம் பெறுபவரின் கடமைகள்.**

1. அங்கீகாரம் அளிப்பவரின் விதிகள் பிரமாணங்களுக்கு அமையச் செயற்படுதல்.
2. மூலதன முதலீடு செய்தல்.
3. அங்கீகாரம் அளிப்பவரின் பொருட்களை மட்டும் விற்றல்.
4. அங்கீகாரம் அளிப்பவருக்கு உடன்பாட்டுக்கமைய இறை செலுத்துதல்.

(vi).

அ. சர்வதேச வலைப்பின்னலையும் கணணி தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி தகவல்களைப் பரிமாற்றி நடைபெறும் வர்த்தகம் இலத்திரனியல் வர்த்தகமாகும்.

ஆ. நடைமுறைக் கணக்கினூடாக கொடுப்பனவுகளை இலகுவாக பரிமாற்ற வசதியாக வங்கியினால் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் அட்டை வரவு அட்டை ஆகும்.

இ. **நுகர்வோர் பொறுப்புக்கள்**

1. நுகர்வு பற்றிய அறிவைப் பெறுதல் (விசாரணை ஊக்கத்துடன் விழிப்பாகவிருத்தல்)
2. நுகர்வோர் உரிமைகளை உறுதி செய்துகொள்ள கருமம் மாற்றல்.
3. சமூகம் தொடர்பாக அக்கறை கொள்ளல்.
4. சூழல் பற்றிய அறிவைப் பெறுதல்.
5. ஒன்றிணைந்து (ஐக்கியப்பட்டு) செயற்படல்.

2. (i) அ.

1. நாட்டில் விவசாய உற்பத்தியில் பற்றாக்குறை ஏற்படும்.
2. விவசாய பொருட்களை இறக்குமதி செய்ய நேரிடும்.
3. அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிக்கும்.
4. வேலையில்லாப் பிரச்சினைக்கு வழிவகுக்கும்.
5. மக்களின் வாழ்க்கைத்தரம் பாதிப்படையும்.

ஆ.

1. திறந்த பொருளாதாரக் கொள்கையால் வியாபார நடவடிக்கைகள் அதிகரித்தமை.
2. தொழில்நுட்ப முன்னேற்றம்.
3. மருத்துவச் சுகாதார வசதிகளின் அதிகரிப்பு.
4. சேவைத்துறையில் வேலை செய்வது கவர்ச்சிகரமானதாக கருதப்படுதல்.
5. பெரும்பாலானோர் ஏதோ ஒரு வியாபாரத்தில் ஈடுபடுதல்.

(ii). **தனியார் கம்பனியின் அனுகூலங்கள்**

1. பொறுப்பு வரையறுக்கப்பட்டிருக்கும்.
2. பேரளவு வணிக முயற்சியில் ஈடுபடலாம்.
3. தொடர்ச்சியாக விரிவுபடுத்தலாம்.
4. பங்குகளைக் கைமாற்ற வேண்டியதில்லை என்பதனால் குடும்ப அங்கத்தவர்கள் அல்லது நண்பர் மட்டும் பங்கு கொள்ளலாம்.
5. உருவாக்கல் பத்திரத்தைப் பெற்றதும் வியாபாரத்தைத் தொடங்கலாம்.
6. இரண்டு பேருடன் ஆரம்பிக்கலாம்.

**தனியார் கம்பனியின் பிரதிகூலங்கள்**

1. சட்டப்பிரமாணங்கள் அதிகம்.
2. பங்குகளைப் பொதுமக்களுக்கு வழங்க முடியாது.
3. பங்குகளைக் கைமாற்றக் கட்டுப்பாடுகள் இருத்தல்.
4. அறிக்கைகளைத் தயாரித்து கம்பனிப் பதிவாளருக்கு சமர்ப்பிக்க வேண்டியிருத்தல்.

(iii).

1. கம்பனியின் கொள்கைகளைத் தீர்மானித்தல்.
2. கம்பனியின் செயற்பாடுகளைத் திட்டமிடுதல்.
3. கம்பனியின் ஒப்பந்தகளில் ஈடுபடல்.
4. ஊழியர்களை நிறுவன நோக்கத்திற்கமைய வழி நடத்தல்.
5. பங்குதாரர்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குதல்.

(iv).

**கைத்தொழில் அபிவிருத்திச் சபை :-**
கைத்தொழிலாளர்களுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகள், பொறியியல் சேவை, தகவல் சேவை போன்றவற்றை வழங்குதல்.

**தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் :-**
ஆராய்ச்சி வசதிகள் அற்ற நிறுவனங்களுக்கு அந்த வசதிகளைச் செய்து கொடுத்தல், பொறியியல் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க உதவுதல் போன்ற சேவைகளை வழங்குதல்.

**தேசிய வடிவமைப்பு நிலையம்:-**
வடிவமைப்புத் தொடர்பான ஆலோசனைகள், மாதிரி வடிவமைப்புக்கள், அவை தொடர்பான உதவிகளைச் செய்தல்

**தேசிய பொதிகட்டும் நிலையம்:-**
பொதியிடுதல் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க உதவுதல், நவீன பொதியிடல் முறைகளை அறிமுகம் செய்தல், அவை தொடர்பான பயிற்சி போன்ற சேவைகள்

(v). அ. மத்திய சூழல் அதிகாரசபை

ஆ.
1. சூழல் மாசடையாது வணிகக் கருமங்களில் ஈடுபடுதல்.
2. நுகர்வோருக்கு பாதிப்பில்லாத பொருட்களை விற்றல்.
3. பாவனை இறுதித் திகதிகளைக் கடைப்பிடித்தல்.
4. தரமான பொருட்களை விற்றல்.

(vi) அ. **முற்பகர்வு** - ஒரு பொதுக்கம்பனி அதன் பங்குகள் தொகுதிக் கடன் பத்திரங்களில் பொதுமக்களை முதலீடு செய்யுமாறு மேற்கொள்ளும் அழைப்பு அல்லது அறிவித்தல் அல்லது விளம்பரம் முற்பகர்வாகும்.

ஆ. **ஆண்டறிக்கை** - கம்பனியின் முடிவுற்ற ஆண்டின் விடயங்களை உள்ளடக்கியதாக தயாரித்து ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கு முன்னர் வெளியிடப்படும் அறிக்கை ஆண்டறிக்கை ஆகும். இதில் இயக்குநர் அறிக்கை, கணக்காய்வாளர் அறிக்கை, கூட்ட அறிவித்தல், இலாப நட்டக் கணக்கும் ஐந்தொகையும் போன்றவை வெளியிடப்படும்.

இ. பொறுப்பு வரையறுக்கப்படாத கம்பனி – கம்பனி நட்டமடையும் போது அங்கத்தவருக்கு ஏற்படக் கூடிய நட்டத்தின் உச்ச அளவு அவர் கொள்வனவு செய்த பங்குகளின் முகப்பெறுமதிக்கேற்ப அல்லது உடன்பட்டுக் கொண்ட உத்தரவாதத் தொகையின் அளவிற்கேற்ப மட்டுப்படுத்தப்படாவிடின் அது பொறுப்பு வரையறுக்கப்படாத கம்பனியாகும்.

3.

(i). அ. குறிப்பிட்ட நாணயத்தைப் பயன்படுத்திக் கொள்வனவு செய்யக் கூடியளவு பணத்தின் மெய் பெறுமானமாகும். இதைக் கீழ்வருமாறு மதிப்பிடலாம்.

$$\text{மெய்ப்பெறுமானம்} = \frac{\text{பெயரளவுப் பெறுமானம்}}{\text{விலைச் சுட்டி}}$$

ஆ.

| | நாணயம் | கடனட்டை |
|---|---|---|
| 01 | இது இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படும். | இது வர்த்தகவங்கியால் வெளியிடப்படும் |
| 02 | இது 100% திரவத் தன்மை உடையது | திரவத்தன்மை குறைந்தது. |
| 03 | இது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும் | அவ்வாறில்லை |
| 04 | இது பாதுகாப்புக் குறைந்தது | இது பாதுகாப்புக் கூடியது. |
| 05 | இது பல தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் | இது கடன் கொள்வனவிற்கு உதவும். |

(ii).

| | மத்திய வங்கி | வர்த்தக வங்கி |
|---|---|---|
| 01 | இது அரசின் வங்கியாகத் தெழிற்படும் | அவ்வாறில்லை |
| 02 | இது வங்கிகளின் வங்கியாகத் தெழிற்படும் | அவ்வாறில்லை |
| 03 | இத அபிவிருத்தி நோக்குடையது | இலாப நோக்குடையது |
| 04 | இது நாணயத்தை வெளியிடும். | அவ்வாறில்லை |
| 05 | இது நிதி நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும். | அவ்வாறில்லை |
| 06 | மக்களின் வைப்புக்களை ஏற்பதில்லை | மக்களின் வைப்புக்களை ஏற்கும் |

(வணிகக்கல்வி பகுதி II இன் தொடர்ச்சியும் பகுதி II இன் I,II இற்கான விடைக்குறிப்புகள் 03.04.2006ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்)